விலை: 30.00
பக்கங்கள் : இருபத்துநான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 ஆவணி 02 திங்கட்கிழமை (19.08.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 243

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து
WESTERN UNION மூலம்
அனுப்பிய பணத்தை ஒருசில
நிமிடங்களில் நீங்கள்
பெற்றுக்கொள்ள.
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

# ஜே.வி.பி. கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக அநுரகுமார தெரிவு

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளராக அதன் தலைவர் அநுர குமார திசாநாயக்க அறிவிக்கப்பட்டுள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)



## செய்தித் தொகுப்பு உள்ளே..

நேர்மையானவர் சஜித் ஜனாதிபதி புகழாரம் 03
மீண்டும் கூடுகிறது தெரிவுக்குழு 03
கோத்தாவிடம் கேள்வி கேட்கத்தடை 03
மகிந்தவின் கடனை செலுத்த திறைசேரி மறுப்பு 08
அந்நியச் செலவாணியில் 40 வீதம் தமிழர்களுடையது - ஆளுநர் 11

## ஊழலற்ற அரசை அமைக்க கட்சி பேதமின்றி ஒன்றுபடுவோம்

பெருந்திரளானோர் மத்தியில் அநுர அழைப்பு



23

## செப்.16இல் எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக்கு பொது அமைப்புகள் பேராதரவு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் எதிர்வரும் செப்ரெம்பர் 16ஆம் திகதி நடைபெறவுள்ள எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக்கு பொது அமைப்புகள் பலவும் தமது ஆதரவைத் தெரிவித்து வருகின்றன. தமிழ் இனத்தின் இன்னல்களை சர்வதேசத்திற்கு எடுத்துக் காட்டுவதை நோக்கமாகக் கொண்டு எதிர் வரும் செப்ரெம்பர் 16ஆம் திகதி தமிழர் தாயகம் தழுவியதாக, யாழ்ப் பாணத்தில் மாபெரும் எழுக தமிழ் எழுச்சிப் பேரணி நடைபெறவுள்ளது.

அரசியல் கட்சி பேதமின்றி அனைவரும் ஓரணியில் திரண்டு தமிழ் மக்களின் அவலத்தை சர்வ தேசத்திற்கு எடுத்துக்காட்ட வேண்டும் என தமிழ் மக்கள் பேரவை கோரியிருந்தது. இதையடுத்து எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக்கு பொது அமைப்புகள் பலவும் தமது ஆதரவை தெரிவித்து வ்ருகின்றமை குறிப்பிடத்தக்கது. (3)

## வவுனியாவில் நேற்று கடும் மழை

(வவுனியா)

வவுனியாவில் நேற்று மாலை பெய்த கடும் மழையினால் வீதிகள் அனைத்தும் நீர் நிரம்பி வெள்ளக்காடாக காட்சியளிப்பதுடன் போக்குவரத்தும் பாதிக்கப் பட்டிருந்தது.

நேற்று மாலை இரண்டு மணித்தியாலங்கள் 23

## யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதியில் உணவகம் அடித்து நொருக்கப்பட்டது

### நேற்று இரவு அட்டகாசம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதி பூநாரி மடத்தடிக்கு அண்மையில் உள்ள உணவகம் ஒன்று குழுவொன்றினால் அடித்து நொருக்கப் பட்டதுடன் உணவக உரிமையாளரும் தாக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்றிரவு இடம் பெற்றது.

உணவகத்துக்குச் சென்ற ஒருவர் தனக்கான உணவை உடன் தரவேண்டும் எனக் கேட்டு தர்க்கம் புரிந்தார் என்றும் பின்னர் ஒரு கோஷ்டியுடன் சேர்ந்து வந்து உணவக உரிமையாளரை கடுமையாக தாக்கியதுடன் 23

அரசியல்வாதிகளின் பொய்வாக்குறுதிகளுக்கு

## தமிழ் மக்கள் இம்முறை ஏமாறமாட்டார்கள் - ஜி.எல்.பீரிஸ்



(கொழும்பு)

பொதுஜன பெரமுனவின் கூட்டணிக்கான யாப்பு குறித்த தீர்க்கமான முடிவு இன்னும் ஒருவாரத்தில் எட்டப்படும் என பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். 23

## கைதி ஒருவர் சிறைச்சாலையில் உயிரிழப்பு

(திருகோணமலை)

போதைப்பொருள் தொடர்புடைய வழக்கில் தண்டனை வழங்கப்பட்ட கைதி 23

## சிறுபான்மையை வைத்தே எமது ஆட்சியை முன்னோக்கி கொண்டு செல்ல முடிந்தது



### பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(குருநாகல்)

எந்தவொரு அரசாங்கத்தினாலும் மேற்கொள்ள முடியாது போன பல செயற்பாடுகளை தற்போதைய அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

குருநாகல் - மாவத்தகமயில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு 23

## தமிழ் மக்களுக்கு ரணில் எதையும் செய்யமாட்டார்

### கருணா தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமிழ் மக்களுக்கு எதையும் செய்யமாட்டார் என முன்னாள் 23

## கோத்தாவுக்காக சிறை செல்ல பல்லாயிரம் மக்கள் தயார்!

### பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சொய்ஸா

(கொழும்பு)

பொய்க் குற்றச்சாட்டுகளை முன்வைத்து கோத்தபாயவை கைது செய்ய அரசாங்கம் முயற்சித்தால் அவருக்காக பல்லாயிரம் பொது மக்கள் சிறைசெல்ல தயாராக இருப்பதாக ரஞ்சித் சொய்ஸா தெரிவித்துள்ளார்.

எம்பிலிப்பிட்டியவில் நேற்று நடைபெற்ற பொது மக்கள் சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போது பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் சொய்ஸா 23

## திறைசேரியில் பணம் இல்லாததால் பொருளாதாரத்தில் பிரச்சினை ஏற்பட்டுள்ளது

### ஜனாதிபதி மைத்திரி கவலை

(கொழும்பு)

இலங்கையின் பொருளாதார நிலை சிறந்ததாக இல்லையெனவும், நாட்டின் திறைசேரியில் பணம் இல்லாத நிலை காணப்படுவதாகவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

மருதானையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்று 23



# ஐ.தே.கவின் பின்வரிசை எம்.பிக்கள் இன்று சஜித்தை சந்திக்க முஸ்தீபு

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இன்று நடைபெறவுள்ள குழுக் கூட்டத்தின் பின்னர் அக்கட்சியின் பிரதித் தலைவரும் அமைச்சருமான சஜித் பிரேமதாஸவைச் சந்தித்துக் கலந்துரையாட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் கட்சியின் மத்திய செயற்குழுவும், கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவும் சேர்ந்து தீர்மானம் ஒன்றுக்கு வருமாறு பிரதமரைக் கோரவுள்ள தாக பாராளுமன்ற உறுப்பினர் ஹேசா விதானகே குறிப்பிட்டுள்ளார். (3)

வலம்புரி
விளம்பரத்
தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

கண்ணீர் அஞ்சலி



17.08.2019 சனிக்கிழமை அன்று
பாலச்சந்திரன்
சுகந்தமலர்
தோற்றம்: 07.05.1956
மறைவு: 17.08.2019
அவர்கள் காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அவரின் குடும்பத்தினருக்கு அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
S.S.Traders
No.15, Dam street,
Colombo - 12
(C-7322)

# கல்முனைப் போராட்டம் தோற்றதற்கு தமிழ்த் தலைமையே காரணம்

## வியாழேந்திரன் எம்.பி குற்றச்சாட்டு

(கல்முனை)

கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தொடர்பான சாகும் வரையிலான உண்ணா விரதம் தோல்வியடைந்தமைக்கு தமிழ் தலைமைகளின் செயற்பாடே காரணம் என பாராளுமன்ற உறுப்பினர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

கல்முனை, பாண்டிருப்பு பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவிக்கையில், "கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தொடர்பான பிரச்சினை தற்போது நீடித்து வருகின்றது. கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை கடந்த காலங்களில் தரம் உயர்த்தக் கோரி பல்வேறு போராட்டங்கள் மேற்கொள்ளப் பட்டன.

ஆனால் தமிழ்த் தலைமைகளின் செயற் பாடுகள் காரணமாகவே தற்போதும் பிரச் சினை நீடிக்கின்றது.

கடந்த வரவு செலவுத் திட்டத்தில் அரசாங் கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர் மானத்தை மக்கள் விடுதலை முன்னணி கொண்டு வந்தபோது பிரதேச செயலகத்தை தரம் உயர்த்த வேண்டும் எனக் குறிப்பிட்டே வாக்களித்தனர். ஆனால் இன்று ஒன்றும் நடைபெறவில்லை.

தற்போது பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ்: கல்முனை வடக்குப் பிரதேச செயல கம் தமிழீழ விடுதலைப் புலிகளின் உதவி யுடன் உருவாக்கப்பட்ட செயலகம் என்று புரளியை தெரிவிக்கின்றார்.

இதனால் அதனை தரமுயர்த்த ஒரு போதும் இடமளிக்கப் போவதில்லை என்றும் தெரிவித்து வருகின்றார்" என வியாழேந் திரன் தெரிவித்தார். (3)

## கோண்டாவில் பகுதியில் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

குடும்பஸ்தர் ஒருவர் நேற்று ஞாயிற்றுக் கிழமை கோண்டாவில் பகுதியில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

காரைக்கால் கோண்டாவிலைச் சேர்ந்த கந்தையா ஜெனபாலசிங்கம் (வயது - 63) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு அவரது வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (3)

மணமகள் தேவை
74, கேட்டை லண்டன் சிற்றிசன் யாழ். வந்துள்ள மணமகனிற்கு மணமகள் தேவை. சீதனம் தேவையில்லை. (9955)
துர்க்கா திருமண சேவை
077 818 5978, 075 011 1122

கார் வாடகைக்கு
திருமணக் கார் வாடகைக்கு
8000/= மட்டும்
(9955)
077 833 1414

நல்லூர் உற்சவகாலத்தை முன்னிட்டு விசேட விலைக்கழிவு
SPECIAL OFFERS
யாழ்ப்பாணத்தில்
1 ஏக்கர், 2 ஏக்கர் கற்பகவனம் 2
காணிகள் விற்பனைக்கு எழுதுமட்டுவாழ்
ரூபாய் 01 இலட்சம் கழிவு
உடனடி உறுதி மாற்றம் *
வங்கி கடன் வசதி செய்து தரப்படும்



1 ஏக்கர் - 16 பரப்பு
40 தென்னை, 40 - 60 தேக்கு
20 கஜு மரம், 10 - 15 மாமரம்
கல் இருக்கை 1 தொகுதி
சுற்று முட்கம்பிவேலி படலையுடன்
28 இலட்சம்
(5 வருட பராமரிப்பு உள்ளடங்கலாக)

2 ஏக்கர் - 32 பரப்பு
80 தென்னை, 80 - 90 தேக்கு
40 கஜு மரம், 20 - 30 மாமரம்
கல் இருக்கை 1 தொகுதி
சுற்று முட்கம்பிவேலி படலையுடன்
53 இலட்சம்
(5 வருட பராமரிப்பு உள்ளடங்கலாக)

அனைத்து மரங்களும் நட்டு உரிய முறையில் 5 வருடங்கள் பராமரிப்பு செய்து தரப்படும்!
30 அடி, 20அடி, 15 அடி அகல பாதை
விடுமுறை வீடு அமைப்பதற்கான இடவசதி
24 மணிநேர பாதுகாப்பு
விளைபொருட்களுக்கான சந்தை வசதி

பொதுவான வசதிகள்
பொது விடுதி, உணவகம், செயற்கை மழைத் தடாகம், விளையாட்டுத்திடல், நடைபயிற்சிக்கான பாதை, மீன்பிடி குளம், முந்திரிகை தோட்டம், மூலிகைத் தோட்டம்

5 வருட பராமரிப்பு
இயற்கை வழியில்
100% ORGANIC



சி. அனுராஜ்
உரிமையாளர், விற்பனையாளர்

078 284 5000 021 492 7778
551A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
Good Gift Property Developers (Pvt) Ltd
Reg. No.: PV 115306
(C-7314)
-- நல்லூர் உற்சவகால விசேட பணிமனை: நல்லூர் அரசடிச் சந்தி (பாரதியார் சிலையடி) --

# போதைப்பொருள் வர்த்தகர்களுக்கு மரணதண்டனையை நிறைவேற்றும் உறுதிமொழியை வழங்க வேண்டும்

## ஜனாதிபதி வேட்பாளர்களிடம் மைத்திரி வேண்டுகோள்

### “மக்களின் நலன்கள் மீது அக்க்றை கொண்டவர் சஜித்”



(பொலநறுவை)

**ஜனாதிபதித் தேர்தலில் யார் போட்டியிட்டாலும் போதைப்பொருள் வர்த்தகர்களுக்கு மரண தண்டனையை நிறைவேற்றும் உறுதி மொழியை வழங்க வேண்டுமென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வேண்டுகோள் விடுத்தார்.**

பொலநறுவையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“கடந்த 25 ஆண்டுகளில் எனது அனுபவத்திற்கு அமைய யார் நல்லவர் யார் திருடர் என்று என்னால் கூற முடியும்.

கடந்த 5 தொடக்கம் 10 வருடங்களுக்குட்பட்ட காலப்பகுதியில் இருந்த அமைச்சர்கள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் ஜனாதிபதிகள் பலரும் எவ்வாறான செயற்பாடுகளை மேற்கொண்டார்கள் என்று நான் நன்கு அறிந்து வைத்திருக்கிறேன்.

ஆனால் அமைச்சர் சஜித் பிரேமதாஸ போன்றவர்கள் அவ்வாறு அல்லர். எங்கள் அரசாங்கத்தில் இருக்கின்ற மிகவும் நியாயமான, மக்களின் நலன்கள் மீது அக்கறை கொண்டவர்தான் சஜித் பிரேமதாஸ.

நாட்டின் ஏனைய பகுதிகளைப் போன்றே பொலநறுவையிலும் ஏழை எளிய மக்கள் நலன் கருதி வீடமைப்பு திட்டங்களை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார். அதேவேளை, ஏனைய அரசியல் தரப்பினர் தொடர்பாக கதைப்பதற்கு நிறையவே இருக்கின்றது. தற்போது அதற்கு நேரம்போதாது.

இந் நிலையில், நாட்டினுள் போதைப்பொருட்களால் பாரிய அழிவுகள் ஏற்பட்டு வருகின்றன. நகர் புறங்களைப் போன்றல்லாது கிராமப் புறங்களில் அதன் தாக்கம் அதிகமாகவே இருக்கின்றது.


எனவே. எமது கிராமிய மக்களைப் பாதுகாப்பதற்கு அவற்றை முற்றாக ஒழிக்கக்கூடிய ஒரு தலைவர்தான் எனக்கு அடுத்து வரவேண்டும்.

எனது ஆட்சிக் காலத்தில் ஜனநாயகத்திற்கும் மனிதவுரிமைகளுக்கும் அதிகமாக இடமளித்துள்ளேன்.

அதேபோன்று எதிர்கால ஜனாதிபதி வேட்பாளர்களும் இதற்கு உறுதியளிக்க வேண்டும்” என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பெரும்பான்மையை வழங்கினால் ஆயிரம் மடங்கு அபிவிருத்தி

## ரணில் கூறுகிறார்



(குருநாகல்)

பெரும்பான்மை பலத்துடன் அடுத்த அரசாங்கத்தை அமைக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டால், கடந்த 4 வருடங்களில் நாட்டில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திகளை போல ஆயிரம் மடங்கு அபிவிருத்திகளைப் மேற்கொள்ள முடியும் என, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

குருநாகல் பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பெரும்பான்மைப் பலம் இல்லாவிட்டாலும் கடந்த அரசாங்கங்களை விட அதிகளவான அபிவிருத்தி நடவடிக்கைகளை தமது அரசாங்கம் முன்னெடுத்ததாகவும் பிரதமர் தெரிவித்தார். (இ-7)

# கோத்தாவிடம் கேள்வி கேட்கத் தடை



(கொழும்பு)

ஜனாதிபதி வேட்பாளரான கோத்தபாய ராஜபக்ஷவிடம் ஊடகவியலாளர்கள் கேள்வி கேட்கத் தடை விதிக்கப்பட்டது.

தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் கோத்தபாய தீவிரமாக ஈடுபட ஆரம்பித்துள்ளார். இதன்போது ஊடகங்கள் கேள்வி எழுப்பக்கூடாது என அறிவுறுத்தப்பட்டது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக கோத்தபாய ராஜபக்ஷ அறிவிக்கப்பட்டதன் பின்னர் அவர் கண்டிக்கு விஜயம் மேற்கொண்டார்.

இதன்போது கோத்தபாய விடம் கேள்வி கேட்க ஊடக வியலாளர்கள் முயற்சித்த போதும், அவரின் ஊடகப் பிரிவு அதற்கு மறுப்புத் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மீண்டும் கூடுகிறது தெரிவுக்குழு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் குறித்து ஆராயும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு மீண்டும் கூடவுள்ளது. அந்த குழுவின் அமர்வுகள் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் ஆரம்பமாகும் என உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இதன்போது குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாக ஆராய்வதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்த விஷேட மூவரடங்கிய குழுவின் உறுப்பினர்கள் சாட்சியம் வழங்கவுள்ளனர்.

அதற்கமைய உயர்நீதிமன்ற நீதியரசர் விஜித் மலல்கொட, முன்னாள் அமைச்சின் செயலாளர் பத்மசிறி ஜயமான்ன மற்றும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்கக்கோன் ஆகியோரே சாட்சியம் வழங்கவுள்ளனர்.

கடந்த ஏப்ரல் மாதம் இலங்கையில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல்கள் காரணமாக 250 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததுடன் பலர் காயமடைந்தனர்.

இதனையடுத்து தாக்குதல்கள் குறித்து ஆராய பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறி தலைமையில் குழு நியமிக்கப்பட்டது. அந்தக் குழுவில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட 20 இற்கும் மேற்பட்டோர் இதுவரையில் சாட்சியம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# விவசாயிகளை அரசனாக்குவதே எமது நோக்கம்

## சஜித் தெரிவிப்பு



(பொலநறுவை)

விவசாயிகளையும் கைத்தொழிற்றுறையினரையும் அரசனாக்குவதே தமது நல்லாட்சி அரசாங்கத்தினதும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினதும் நோக்கம் என அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பொலநறுவையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற விவசாய சமூகத்தினருக்கான கிராமங்களை கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“2025ஆம் ஆண்டளவில் அனைவருக்கும் நிழல் தரும் வகையில் கிராமங்களை அமைப்பதற்கு திட்டமிட்டுள்ளோம்.

பொலநறுவை மாவட்டத்திற்கு வரும் வழியில் நாம் கண்ட இயற்கை வளம் மிகவும் புத்துணர்வை ஏற்படுத்துகின்றது. கிராமங்களுக்கே உரிய அழகையும் கொண்டிருக்கின்றது. இதுதான் இலங்கையின் உண்மையான வனப்பும், செழிப்புத்தன்மையுமாகும். இயற்கை வளத்தை ரசித்துக்கொண்டிருக்கும்போது வந்த காரியமும் மறந்து போகின்றது.

ஆனால் சிலருக்கு நாட்டின் அதிகாரம் கிடைக்கும்போது அவர்களுக்குரிய கடமை மறந்து போகின்றது. கிராமங்களின் முன்னேற்றங்களைப் பற்றி அவர்கள் சிந்திப்பதில்லை.

இந்த நாட்டில் 78 சதவீதம் விவசாயம் சார்ந்த நிலங்களாகவே இருக்கின்றமையை அவர்கள் மறந்து விடுகிறார்கள்.

அதேவேளை, சாதாரண கைத்தொழிற்றுறையினர், நடுத்தர வர்க்கத்தினர், அரச துறையினர், இவர்கள்தான் இந்த நாட்டின் முக்கியமான பிரஜைகள்.

ஆனால், நாட்டில் வளங்கள் இருந்தபோதும், 54 சதவீதமான தேசிய வருமானத்தைசிறுபான்மையினரான தனவந்தர்களே அனுபவிக்கின்றார்கள் என்பது கவலைக்குரிய விடயமாகும். எங்கள் கண்முன்னே நடக்கும் இந்த அநியாயத்திற்கு இடமளிக்கக்கூடாது.

ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதைப் போன்றே நாட்டு மக்களின் பொருளாதாரத்தையும் நிலைபெறச் செய்யவேண்டும்.

எமது விவசாய நாட்டில் புதிய லிபரல் வாதத்திற்கு இடமளிக்கக் கூடாது” என்றும் அமைச்சர் சஜித் பிரேமதாஸ மேலும் சுட்டிக்காட்டினார். (இ-7)

# திமுத் கருணாரத்ன அசத்தல் சதம் நியூசிலாந்தை வீழ்த்தியது இலங்கை



காலியில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் திமுத் கருணாரத்னவின் அபார சதத்தால் நியூசிலாந்து அணியை 6 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி வெற்றி பெற்றது இலங்கை அணி.

இலங்கை - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் காலேயில் நடைபெற்றது.

டாஸ் வென்ற நியூசிலாந்து பேட்டிங் தேர்வு செய்தது. ராஸ் டெய்லரின் (86) சிறப்பான ஆட்டத்தால் நியூசிலாந்து முதல் இன்னிங்சில் 249 ரன்கள் சேர்த்தது.

தொடர்ந்து முதல் இனிங்சை தொடங்கிய இலங்கை அணி, குசல் மெண்டிஸ் (53), மத்யூஸ் (50), டிக்வெல்ல (61) ஆகியோரின் அரைச்சதங்களால் 267 ரன்களில் ஆல் அவுட்டானது.

18 ரன்கள் பின்தங்கிய நிலையில் நியூசிலாந்து 2-வது இன்னிங்சை தொடங்கியது. விக்கெட் கீப்பர் வாட்லிங் சிறப்பாக விளையாடி அரைச் சதமடித்தார். அவர் 77 ரன்களில் அவுட்டானார். டாம் லாதமின் 45 ரன்களும், சாமர்வில்லியின் 40 ரன்களும் நியூசிலாந்து அணியின் ஸ்கோரை 285 ரன்கள் எடுக்க உதவியது.

இலங்கை அணி சார்பில் லசித் எம்பல்டெனியா 4 விக்கெட்டும், தனஞ்செய 3 விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதையடுத்து, 268 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இலங்கை அணி இரண்டாவது இன்னிங்சை தொடங்கியது. தொடக்க ஆட்டக்காரர்களாக கேப்டன் திமுத் கருணாரத்னவும், லஹிரு திரிமன்னவும் இறங்கினர். இருவரும் பொறுப்புடன் விளையாடி அரைச் சதமடித்தனர். 4-ம் நாள் ஆட்ட முடிவில் இலங்கை அணி விக்கெட் இழப்பின்றி 133 ரன்கள் எடுத்துள்ளது. கருணாரத்னே 71 ரன்னுடனும், திரிமன்ன 57 ரன்னுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இந்நிலையில் கடைசி நாளான நேற்று, திரிமன்ன 64 ரன்னில் அவுட்டானார். அடுத்து இறங்கிய குசல் மெண்டிஸ் 10 ரன்னில் வெளியேறினார்.

மறுமுனையில் சிறப்பாக ஆடிய திமுத் கருணாரத்ன சதமடித்து அசத்தினார். அவர் 122 ரன்கள் சேர்த்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து இறங்கிய அஞ்சலோ மத்யூஸ் இறுதிவரை ஆட்டமிழக்காமல் அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றார். முடிவில், இலங்கை அணி 86.1 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 268 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது. ஆட்ட நாயகன் விருது திமுத் கருணாரத்னவுக்கு வழங்கப்பட்டது.

இரு அணிகளுக்கு இடையிலான இறுதிப்போட்டி ஆகஸ்ட் 22ம் திகதி கொழும்புவில் தொடங்குகிறது.

# கேல் ரத்னா விருதுக்கு தீபா மாலிக்கும் அர்ஜீனா விருதுக்கு 21 வீரர்களும் தேர்வு

விளையாட்டு துறையில் சாதனை படைத்த மாற்றுத் திறனாளி தடகள வீராங்கனை தீபா மாலிக் கேல் ரத்னா விருது பெறுகிறார். கிரிக்கெட் வீரர் ரவீந்திர ஜடேஜா உட்பட 19 பேர் அர்ஜீனா விருதுக்கு தேர்வாகியுள்ளனர்.

இந்திய விளையாட்டுத் துறையில் சாதிக்கும் வீரர், வீராங்கனைகளுக்கு ஆண்டுதோறும் ராஜீவ் காந்தி கேல் ரத்னா, அர்ஜீனா விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படுகிறது.

இதில் இந்தியாவின் 'நம்பர் வன்' மல்யுத்த வீரரும், ஆசிய, காமன்வெல்த் விளையாட்டு சம்பியனுமான பஜ்ரங் புனியாவுக்கு மிக உயரிய விருதான ராஜீவ் காந்தி கேல் ரத்னா விருது வழங்க பரிந்துரைப்பது என்று ஏற்கனவே ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது.

இந்நிலையில், இந்த ஆண்டு கேல் ரத்னா விருதுக்கு 2016-ம் ஆண்டு ரியோ பாரா ஒலிம்பிக்கில் குண்டு எறிதலில் வெள்ளிப் பதக்கம் வென்ற மாற்றுத் திறனாளி வீராங்கனையான தீபா மாலிக்குக்கு வழங்க பரிந்துரை செய்யப்பட்டு உள்ளது.

அரியானாவைச் சேர்ந்த 48 வயதான தீபா மாலிக் பாரா ஒலிம்பிக்கில் பதக்கம் கைப்பற்றிய முதல் இந்திய வீராங்கனை என்ற மகத்தான சாதனைக்கு சொந்தக்காரர். தொடர்ச்சியாக மூன்று பாரா ஆசிய விளையாட்டில் பதக்கம் வென்ற ஒரே இந்திய வீராங்கனையும் இவர் தான்.

இதேபோல், அர்ஜீனா விருதுக்கு 19 பேர் தேர்வு செய்யப்பட்டு இருக்கிறார்கள். இதில் இந்திய கிரிக்கெட் அணியின் ஆல் ரவுண்டர் ரவீந்திர ஜடேஜா, பெண்கள் கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளர் பூனம் யாதவ், தடகள நட்சத்திரங்கள் தஜிந்தர் பால் சிங் தூர், முகமது அனாஸ், ஸ்வப்னா பர்மன், தமிழ் தலைவாஸ் கபடி அணியின் கேப்டன் அஜய் தாகூர் ஆகியோரும் அடங்குவர்.

மேலும், சிறந்த பயிற்சியாளர்களுக்கான துரோணாச்சார்யா விருதுக்கு விமல்குமார் (பேட்மிண்டன்), சந்தீப் குப்தா (டேபிள் டென்னிஸ்), மொகிந்தர் சிங் தில்லான் (தடகளம்) ஆகியோர் தேர்வாகினர்.

சிறந்த பயிற்சியாளருக்கான துரோணாச்சார்யா வாழ்நாள் சாதனையாளர் விருதுக்கு மெஸ்பன் பட்டேல் (ஹாக்கி), ராம்பிர் சிங் கோகர் (கபடி), சஞ்சய் பரத்வாஜ் (கிரிக்கெட்) ஆகியோரும் தேர்வாகினர்.

வாழ்நாள் சாதனையாளருக்கான தயான் சந்த் விருதுக்கு மானுவல் பிரெட்ரிக்ஸ் (ஹாக்கி), ஆருப் பசாக் (டேபிள் டென்னிஸ்), மனோஜ்குமார் (மல்யுத்தம்), நிட்டேன் கிர்டான் (டென்னிஸ்), லால்ரெம்சங்கா (வில்வித்தை) ஆகியோரும் தேர்வாகினர்.

இந்த பட்டியலுக்கு மத்திய விளையாட்டு அமைச்சகம் ஒப்புதல் வழங்கி ஓரிரு நாட்களில் அதிகாரபூர்வமாக அறிவிப்பு வெளியிடும். கேல் ரத்னா விருதுக்கு ரூ.7 லட்சமும், மற்ற விருதுகளுக்கு ரூ.5 லட்சமும் பாராட்டு பட்டயத்துடன் ஊக்கத் தொகையும் வழங்கப்படும்.









# ஆர்ச்சரின் செயல் இழிவானது-அக்தர்

பவுன்சர் பந்து கழுத்தில் தாக்கியதால் காயமடைந்த ஸ்மித்தை கண்டு கொள்ளாமல் நடந்து சென்ற வேகப்பந்து வீச்சாளர் ஆர்ச்சரை, முன்னாள் பாகிஸ்தான் அணியின் வேகப்பந்துவீச்சாளர்சொயிப் அக்தர் கடுமையாக சாடியுள்ளார்.

இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான ஆஷஸ் தொடரின் இரண்டாவது டெஸ்ட் போட்டி லண்டனின் லாட்ஸ் மைதானத்தில் நடைபெற்றது.

இந்த போட்டியின் போது இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜோப்ரா ஆர்ச்சர் 150 கி.மீ. வேகத்தில் வீசிய பந்து, அவுஸ்திரேலிய வீரர் ஸ்மித் கழுத்தில் பட்டு மைதானத்திலேயே சுருண்டு விழுந்தார்.

வலியால் துடித்துக்கொண்டிருந்த ஸ்மித்தை ஆர்ச்சர் கண்டுகொள்ளாமல் இருந்தார். இதனை பார்த்த இணையதளவாசிகள் ஆர்ச்சரை கடுமையாக சாட ஆரம்பித்தனர்.

இந்த நிலையில் "பாகிஸ்தான் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் சொயிப் அக்தர் தன்னுடைய ட்விட்டர் பக்கத்தில், பவுன்சர்கள் கிரிக்கெட்டின் ஒரு பகுதிதான். ஆனால் பவுன்சரால் ஒரு மட்டையாளர் சுருண்டு விழும் போது அவரிடம் சென்று ம் நலம் விசாரிக்க வேண்டும். ஆனால் ஸ்மித் வலியால் துடிக்கும்போது கவனிக்காமல் அந்த இடத்திலிருந்து அப்படியே வெளியேறிய ஆர்ச்சரின் இந்த செயல் மிக மோசமானது" என குறிப்பிட்டுள்ளார்.



# லோட்ஸ் போட்டி சமநிலையில் முடிந்தது

லண்டன் லார்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்று வரும் ஆஷஸ் 2-வது டெஸ்டில் ஆஸ்திரேலியாவுக்கு 267 ரன்கள் வெற்றி இலக்காக நிர்ணயித்தது இங்கிலாந்து.

ஆஷஸ் தொடரின் 2-வது ஆட்டம் லண்டன் லார்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்று வருகிறது. முதல் இன்னிங்சில் இங்கிலாந்து 258 ரன்களும், ஆஸ்திரேலியா 250 ரன்களும் சேர்த்தன.

பின்னர் 8 ரன்கள் முன்னிலையுடன் இங்கிலாந்து 2-வது இன்னிங்சை தொடங்கியது. நேற்றைய 4-வது நாள் ஆட்ட முடிவில் இங்கிலாந்து 4 விக்கெட் இழப்பிற்கு 96 ரன்கள் எடுத்திருந்தது.

பென் ஸ்டோக்ஸ் 16 ரன்களுடன், ஜாஸ் பட்லர் 10 ரன்களுடனும் களத்தில் இருந்தனர். நேற்று ஐந்தாவது நாள் ஆட்டம் தொடங்கியது. பென் ஸ்டோக்ஸ் சிறப்பாக விளையாடினார். பட்லர் 31 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து பென் ஸ்டோக்ஸ் உடன் பேர்ஸ்டோவ் ஜோடி சேர்ந்தார். ஐந்தாவது நாள் ஆட்டம் என்பதால் அதிரடியாக ரன்கள் குவித்து 2-வது இன்னிங்சை டிக்ளேர் செய்ய இங்கிலாந்து திட்டமிட்டது.

பென் ஸ்டோக்ஸ் சிறப்பாக விளையாடி சதம் அடித்தார். இங்கிலாந்து 71 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பிற்கு 258 ரன்கள் எடுத்திருந்தபோது 2-வது இன்னிங்சை டிக்ளேர் செய்தது. பென்ஸ்டோக்ஸ் 115 ரன்னுடனும், பேர்ஸ்டோவ் 30 ரன்னுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

ஒட்டுமொத்தமாக இங்கிலாந்து 266 ரன்கள் முன்னிலை பெற்றதால் அவுஸ்திரேலியாவுக்கு 267 ரன்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. அவுஸ்திரேலியா47.3 ஓவர்களில் 154 க்கு 6 விக்கெட்டை இழக்க போட்டி சமநிலையானது.

# ஜனாதிபதித் தேர்தலில் கோத்தா போட்டியிட வாய்ப்பில்லை

(மத்துகம) **குமார வெல்கம திட்டவட்டம்**

நாட்டின் சட்டத்திற்கு அமைய கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வாய்ப்பில்லை எனவும் அவர் தற்போதும் அமெரிக்கப் பிரஜை என்பதே இதற்குக் காரணம் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம திட்டவட்டமாகத் தெரிவித்தார்.



மத்துகமயில் நேற்று முன்தினம் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன சட்டரீதியற்ற ஒருவரை ஜனாதிபதி வேட்பாளராக அறிவித்து மக்களை ஏமாற்றியுள்ளது. அண்ணனும் தம்பியும் தெரிந்து செய்தார்களா? என்பது எனக்குத் தெரியவில்லை.

பிறந்த நாட்டைக் கைவிட்டு, அமெரிக்க குடியுரிமையை பெற்றுக் கொண்ட ஒருவர் நாட்டைக் கட்டியெழுப்பத் தேவையில்லை. நாட்டைக் கட்டியெழுப்பத் தயாரான உண்மையான தலைவர்கள் எமது முகாமில் இருக்கின்றனர்.

நான், மகிந்த ராஜபக்ஷ, சமல் ராஜபக்ஷ, தினேஷ்குணவர்த்தன போன்றவர்கள் எப்போதும் நாட்டைக் கைவிட்டு, வெளிநாடு ஒன்றில் குடியுரிமை பெற்றதில்லை எனவும் குமார வெல்கம மேலும் தெரிவித்தார். (இ-7)


# 2 ஆம் ஆண்டு நினைவு தினம்



## அமரர் க.தர்மலிங்கம்

பிறப்பு 10.08.1947

இறப்பு 11.08.2017

ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்தது
உங்கள் அன்பு முகம் எம்மில்
மாறாது வாழ்ந்து கொண்டிருக்கிறது
அன்பை மட்டும் எமக்குத் தந்து
அரவணைத்த எம் தெய்வமே
ஏன் தான் எம்மை விட்டுச் சென்றீரோ?

(9942)

வட்டு.கிழக்கு
சித்தன் கேணி.

தங்கள் நினைவுகளுடன் குடும்பத்தினர்


## இராசி பலன்

கிரகநிலை
சந்திராஷ்டமம்
பூரம், உத்தரம்

| | | | |
|---|---|---|---|
| சந் | | | ராகு |
| | | | புத |
| | | | சூரி, செவ், சுக் |
| சனி, கேது | குரு | | |

**19.08.2019**
ஆவணி 02, திங்கட்கிழமை
சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு
சதுர்த்தி பின்னிரவு 1.44 மணிவரை
உத்திரட்டாதி முன்னிரவு 7.06 மணிவரை
சுபநேரம் 12.55-1.35 மணிவரை
இராகுகாலம் 7.35-9.05 மணிவரை
சங்கடகர கணபதி விரதம்

வளவன்

**மீனம்** பொருளாதார நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், திடீர் பயணத்தால் திசை திருப்பங்கள் ஏற்படலாம், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**மேடம்** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், தொழிலில் புதிய மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**இடபம்** பிரபலமானவர்களின் அறிமுகம் கிடைக்கும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மிதுனம்** அரசு வழியில் அனுகூலமுண்டு, உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**கும்பம்** நன்மைகள் நடைபெறும் நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், போசன சுகமுண்டு.

**கடகம்** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**மகரம்** சகோதர வழியில் சந்தோசம் தரும் செய்திகள் வந்து சேரலாம், வழிபாடு சிறப்பினைக் கூட்டும், விடா முயற்சிக்கு வெற்றி கிடைக்கும்.

**சிம்மம்** எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு, நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள்.

**தனுசு** பெற்றோர் வழியில் பிரியம் கூடும், உறவினர்களிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்** தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், புதிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**துலாம்** தேக நலனில் முன்னேற்றம் காண்பீர்கள், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், போசன நன்மையுண்டு.

**கன்னி** பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள், பயணத்தால் பலன் கிடைக்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.

# வலி.வடக்கு ஜனாதிபதி மாளிகைக் காணிக்கு இதுவரை யாரும் உரிமை கோரவில்லை

## ஆளுநர் ராகவன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

வலி.வடக்குப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள ஜனாதிபதி மாளிகைக்கான காணி உரிமையை இதுவரை யாரும் கோரவில்லை என வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

வலி.வடக்கில் ஜனாதிபதி மாளிகை அதனைச் சூழவுள்ள தனியார் காணிகளின் உரிமையாளர்கள் இருப்பின் தமது காணியை அடையாளப்படுத்துமாறு ஆளுநர் அண்மையில் கோரிக்கை விடுத்தார்.

இந்நிலையில் ஜனாதிபதி மாளிகைக் காணியை யாரும் உரிமை கோராத நிலையில் வலி.வடக்கு பகுதியிலுள்ள காணிகளுக்காக 11 பேர் மட்டும் இதுவரை உரிமை கோரியுள்ளனர்.

இவர்களுக்கான உறுதிப் பத்திரங்களை ஜனாதிபதியின் யாழ்.விஜயத்தின் போது வழங்குவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதாக ஆளுநர் மேலும் தெரிவித்தார். (இ-10)

### கதவு திறந்ததை சாதகமாகப் பயன்படுத்தி


# அதிகாலை வேளை வீட்டிற்குள் நுழைந்து 9 பவுண் நகை, பணம் திருட்டு!

(கரணவாய்)

வீட்டின் கதவு திறந்திருந்ததை சாதகமாகப் பயன்படுத்தி அங்கிருந்த ஒன்பது பவுண் தங்க நகைகள் திருடப்பட்டதாக நெல்லியடி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை நெல்லியடி, முடக்காட்டுப் பகுதியில் இச் சம்பவம் இடம்பெற்றது. அதிகாலை 5 மணியளவில் வீட்டின் உரிமையாளர் வீட்டின் கதவைத் திறந்து விட்டு விட்டு முற்றத்தை கூட்டியுள்ளார்.

அதனைச் சாதகமாகப் பயன்படுத்தி வீட்டிற்குள் நுழைந்த திருடர்கள் அங்கிருந்த ஒன்பது பவுண் நகை மற்றும் 1400 ரூபா பணம் என்பவற்றை திருடிச் சென்றுள்ளதாக நெல்லியடி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. (இ-60)





யாழ்.புனித மரியன்னை பேராலயத்தின் வருடாந்த திருவிழா கடந்த 15 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 6.30 மணியளவில் திருச்செபமாலையுடன் ஆரம்பமாகி நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து அன்னையின் திருச்சொரூபப் பவனியும் இடம்பெற்றது.(படங்கள்:- ஈச்சமோட்டைச் செய்தியாளர்)





வடமராட்சியில் பல பகுதிகளிலும் நேற்று நண்பகல் 12.30 மணியளவில் ஒரு மணித்தியாலம் மழை கொட்டித் தீர்த்தது. (படங்கள்:- கரணவாய் செய்தியாளர்)

# கருவண்டுத் தாக்கத்தால் தெங்குச் செய்கை பாதிப்பு

## விவசாயிகள் கவலை

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்திலுள்ள தெங்குச் செய்கைத் தோட்டங்களில் கருவண்டின் தாக்கம் அதிகரித்துள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

பளைப்பகுதியில் அதிகளவிலான தென்னைச் செய்கையாளர்கள் இக் கருவண்டுத்தாக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கருவண்டைக் கட்டுப்படுத்தக்கூடிய மருந்து கிடைக்கவில்லை எனவும் விசனம் வெளியிட்டனர்.

கடந்த மே மாதம் ஆரம்பமான கருவண்டுத் தாக்கம் இம்மாதம் மிகவும் அதிகரித்துள்ளது.


எனவே இவ்விடயம் குறித்து தெங்குச் செய்கை அபிவிருத்தி அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டுமென பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் தெங்குச் செய்கையின் மாவட்ட பணிப்பாளர் எஸ்.வைகுந்தனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, வடமாகாணத்தில் 6 இடங்களில் கருவண்டுத் தாக்கம் இருப்பதாக தனக்குத் தகவல் கிடைத்ததாகவும் தெங்குச் செய்கையாளர்கள் கேட்கும் பொறிமுறை ஊட்டல் மருந்து இந்தியாவில் இருந்து கொழும்புக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் வாரங்களில் குறித்த மருந்தை வழங்கக் கூடிய வகையில் கொழும்பு அதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# 15 பேர் கொண்ட கும்பலால் வீட்டின் வெளிக்கேற் உடைப்பு

(கொடிகாமம்)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவலப்பிட்டி பகுதியில் நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் தாக்குதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது. 15 பேர் கொண்ட இனந்தெரியாத கும்பலால் ஏ- 9 வீதியருகில் அமைந்துள்ள வீட்டின் வெளிக்கேற் உடைத்து சேதப்படுத்தப்பட்டதாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. இச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (இ-114)





கலாபூஷணம் வடவரணி சி.சபாவின் இருநூல்கள் வெளியீட்டு விழா நேற்று ஞாயிற்றுக்கிழமை சிட்டிபுரம் கண்ணகை அம்மன் கோவிலுக்கு அருகாமையிலுள்ள வரணி கலாசார மத்திய நிலைய மண்டபத்தில் நதியோர நாணல்கள் இலக்கிய மன்றத் தலைவர் வ.ஜசிந்தன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் ம.இரகுநாதன், சிறப்பு விருந்தினர்களாக பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க. வாமதேவன் உள்ளிட்ட விருந்தினர்கள் கலந்து கொண்டனர்.

## சமையல் உதவியாளர் தேவை

யாழ்ப்பாணம் மானிப்பாயில் அமைந் துள்ள வீடொன்றிற்கு தங்கி நின்று வேலை செய்யக்கூடிய சமையல் உதவியாளர் தேவை.

• சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும் (9947)

தொடர்புகளுக்கு:- 077 260 6468

பழைமை வாய்ந்த

## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழு தில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற
- பில்லி சூனியங்கள் அகற்ற வேண்டுமா?

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம்
சகல காரியங்களுக்கும் மூன்று பொழுதில் பலன்

(9951) (உங்களால் நேரில் வர முடியாவிட்டால் பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

### ரெங்கசாமி

கண்டி, அம்பத்தன்ன -077 939 5222
Viber:076 466 4153, 076 841 1848

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்

## உங்கள் மனநிலை

யாருடனாவது பேசவேண்டும்
போல இருந்தால், தயங்காமல் எம்மை
அழையுங்கள் அல்லது நேரில் வாருங்கள்.

எமது அமைப்பில் மதமும், அரசியலும் முற்றாகத் தவிர்க்கப்பட்டுள்ளது. ரகசியம் பேணுவோம்.

### கை கொடுக்கும் நண்பர்கள்

175, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (KKS வீதி அருகே)
077 900 8776 ( தினமும் மு.ப 9.00 - பி.ப 1.00 )

(C-7313)


# அறிவித்தல்
## தேர்தல்கள் ஆணைக்குழு

2019 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 07 ஆம் திகதிக்கு முன்னர் நடாத்தப்படவுள்ள சனாதிபதித் தேர்தலில் பயன்படுத்துவது 2018 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பு என்பதால் இந்த சனாதிபதித் தேர்தலில் அஞ்சல் மூலம் வாக்களிக்க எதிர்பார்க்கும் வாக்காளர்களுக்காகச் செய்யப்படுகின்ற அறிவித்தலாகும்.

- வாக்கெடுப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்படவிருக்கும் அரச அலுவலர்கள் அல்லது ஊழியர்கள்.
- இலங்கை இராணுவம், இலங்கை கடற்படை, இலங்கை விமானப் படை ஆகியவற்றின் அலுவலர்கள்.
- பொலிஸ் திணைக்களம்,சிறைச்சாலைகள் திணைக்களம் ஆகியவற்றின் ஊழியர்கள்.
- இலங்கை புகையிரதத் திணைக்களம்,தபாற் திணைக்களம், மின்சார சபை, இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை.................... பிராந்திய போக்குவரத்துச் சபை அலுவலர்கள் அல்லது ஊழியர்கள்.
- தேர்தல் தொடர்பான பணிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள அல்லது நியமிக்கப்படவிருக்கும் அரச அலுவலர்கள் அல்லது ஊழியர்கள்.
- தேர்தல் தொடர்பான பணிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள அல்லது நியமிக்கப்படவிருக்கும் இலங்கை மத்திய வங்கியின் அலுவலர்கள் அல்லது ஊழியர்கள்.

தமக்குரிய வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று வாக்களிக்க முடியாதுள்ள அல்லது முடியாமற் போகக் கூடிய சாத்தியமுள்ள அரசஅலுவலர்கள் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்காக விண்ணப்பிக்கமுடியும்.

தேர்தலுக்கான திகதியொன்றைக் குறித்த பின்னர் அஞ்சல் மூல வாக்காளர்கள் தமது அஞ்சல் மூல வாக்களிப்பு விண்ணப்பப் படிவத்தினை எக்காரணங் கொண்டும் தாமதிக்காமல் பூர்த்தி செய்வதற்காக 2018 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்புக்களிலிருந்து நேர காலத்துடன் பின்வரும் தகவல்களைப் பெற்று ஆயத்தப்படுத்திக் கொள்ளுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு கேட்டுக் கொள்கின்றது. இதற்காக தற்போது கிராம அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டிருக்கும் தேருநர் இடாப்பு மீளாய்வு நடவடிக்கைகளின் போது வாக்காளர் கணக்கெடுப்புப் படிவத்துடன் இணைத்து வழங்கப்பட்டுள்ள 2018 ஆம் ஆண்டின் குறித்த தகவல்கள் அடங்கிய பற்றுச் சீட்டில் (சிறியதுண்டுப் பிரசுரத்தில்) காணப்படும் தகவல்களிலிருந்து அல்லது உங்களது கிராம அலுவலரிடம் அல்லது தமது வதிவிடத்திற்குரிய மாவட்டத் தேர்தல் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளவும் முடியும்.

| | |
|---|---|
| தேருநர் இடாப்பு வருடம் | - 2018 |
| நிருவாக மாவட்டம் | - |
| வாக்கெடுப்புப் பிரிவின் பெயரும்,எழுத்தும் | - |
| வாக்கெடுப்பு மாவட்ட இலக்கம் | - |
| கிராம அலுவலர் பிரிவு | - |
| வீதியின் அல்லது கிராமத்தின் பெயர் | - |
| வாக்காளரின் முழுப்பெயர் | - |
| தனது பெயருக்கு உரிய தொடரிலக்கம் | - |
| தேசிய அடையாள அட்டை இலக்கம் | - |

2019.08.19 ஆந் திகதி,
மஹிந்ததேசப்பிரிய
தவிசாளர்,
தேர்தல்கள் ஆணைக்குழு,
சரணமாவத்தை,
இராஜகிரிய.

(C-520)


# UNIVERSITY OF CAMBRIDGE ENGLISH COURSES @
## BRITISH COLLEGE OF ENGLISH

Palay Road, Urumpirai. (உரும்பிராய் பெற்றோல் செற்றிற்கு முன்னால்)
Tel: 021 222 0384, 077 880 3887

எமது வகுப்புக்களில் இணைந்து வாழ்நாள் முழுவதும் பயன்படும் கல்வித் தகைமையை பெற்று பயனடையுங்கள்.

## IELTS

எமது கல்வி நிலையம் தொடர்ச்சியாக ஐந்து வருடங்கள் சிறந்த நிலையம் என British Council னால் Awards வழங்கி கௌரவிக்கப்பட்ட நிலையமாகும்.

AN INNOVATIVE APPROACH TO IELTS
OUR TARGET IS BAND : 09

IELTS LIFE SKILLS A1 B1

IELTS Registration Centre for British Council

IELTS பாடங்களைப் படிப்பிக்கும் அதேவேளை Grammar and Vocabulary போன்றவற்றை புதியதோர் ஆங்கிலப் பாடநெறி மூலம் போதிக்கின்றோம்.

**Pearson English Course Level B2**

எனவே இரண்டு பாடநெறிகளையும் ஒரு கட்டணத்திலேயே நிறைவு செய்யலாம்.

### Course Schedule:

Full Time : Monday to Friday 8.00 a.m to 10.00 a.m, 10.00 a.m to 12.00 p.m
Part Time : Saturday and Sunday 9.00 a.m to 1.00 p.m

வகுப்புக்கள் 22.08.2019 இல் ஆரம்பம்.

- சுமார் 40 இலட்சம் மாணவர்கள் ஆண்டு தோறும் Cambridge பரீட்சைகளை எடுக்கின்றனர்.
- சுமார் 13000 பல்கலைக்கழகங்கள் Cambridge ஆங்கிலப் பரீட்சைகளை தமது அனுமதிக்காக ஏற்றுக்கொள்கின்றன.
- 40000 கல்லூரிகளும் நிறுவனங்களும் மாணவர்களை Cambridge பரீட்சைக்காக ஆயத்தப்படுத்துகின்றனர்.

**Cambridge ன் மூன்று பாடநெறிகளை 22.08.2019 இல் ஆரம்பிக்கின்றோம்**

### Cambridge - Prelimnary English Test (PET)

- இது ஓர் Intermediate B1. Level பரீட்சையாகும். U.K இல் பல கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் இதனை பல்கலைக்கழக அனுமதிக்காக ஏற்றுக்கொள்கின்றன.
- நீங்கள் IELTS பரீட்சை எடுப்பதற்கு விரும்புவீர்களானால், போதிய ஆங்கில அறிவு உங்களிடம் இல்லையேல் முதலில் PET பாடநெறியைப் பின்பற்றி பின் IELTS வகுப்பில் கற்க இலகுவாக இருக்கும்.

It covers all four language skills (Reading, Writing, Listening and Speaking) and knowledge of grammar and vocabulary.

Exam Date: 05.12.2019
Centre - British Council Colombo.

### FCE Cambridge First Certificate in English

It covers all four skills Reading and Use of English, Writing, Listening - Speaking

இது ஒரு சர்வதேசப் பரீட்சையாகும் International Exam. 15000 ற்கு மேற்பட்ட கல்வி நிறுவனங்களும் Employers ம் FCE யை ஏற்றுக்கொள்கின்றன. உலகத்தின் எந்த ஒரு இடத்திலும் சிறந்த ஓர் வேலை வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ள அதியுயர்ந்த தகுதியாகும். இது ஒரு வாழ்நாள் முதலீடு.

### Cambridge Advanced English - C1

**Who is the exam for?**

*Cambridge English: Advanced is typically taken by high achievers who want to:*

- follow an academic course at university level
- communicate effectively at managerial and professional level
- participate with confidence in workplace meetings
- carry out complex and challenging research
- stand out and differentiate themselves.

(C-7312)




**A.R. Nanthakumar**
1 June

மதச்சார்பற்ற அரசுகளே (Secular State) அதிக விருத்தியை கண்டுள்ளன. என்றைக்கு மதம், இனம், சாதி அரசியலையும் அதிகாரத்தையும் தீர்மானிக்கிறதோ, அந்த அரசுக்கும் நாட்டுக்கும் என்றும் நெருக்கடிகள்தான்.

**Sham Varathan Sham Varathan**
16 August at 23:38

வெளிச்சத்தை நோக்கி பறக்கும் விட்டில் பூச்சிகள் போல் தமிழ்த்தலைமைகள் சிங்களத் தலைவர்களை நோக்கி...

**Kajan Paiya**
26 July at 07:21

"போராட்டத்தின் வடிவங்கள் மாறலாம், ஆனால் போராட்ட இலட்சியம் மாறாது"

**Sabapathy Ananthan**
15 August at 13:55

சிங்கள பேரினவாதிகள் இன்று என்ன சொல்கின்றார்கள் என்பது தேவை இல்லாத விடயம்-இதுவரை என்ன சொன்னார்கள்-என்ன செய்தார்கள் என்பதே சிந்திக்கப்பட வேண்டிய .விடயம்-!

**Boopal Chinappa**
28 mins

எல்லா தமிழ் அரசியல் கட்சிகளும், இயக்க அரசியல் கட்சிகளும்
ஒன்று சேர்ந்து, ஒரு நிபந்தனையின் கீழ் எந்த சிங்கள
ஜனாதிபதிக்கும் ஆதரவு கொடுக்கலாம்.
அந்த ஆதரவு கட்டாயமாக
ஒரு நிபந்தனையின் கீழ் கொடுக்கப்பட வேண்டும்.
கால அவகாசம், தீர்வின் அம்சங்கள்
உள்ளடக்கப்பட வேண்டும்.
எழுத்து மூலமான ஒரு ஒப்பந்தம்
செய்யப்பட வேண்டும்.
குறிப்பிடப்பட்ட காலத்தில் நிறைவேற்றப்படவில்லை
என்றால், நீங்கள் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை
இராஜினாமாச் செய்ய வேண்டும்.
இதன் மூலமாக இதை உலகத்துக்காவது
தெரியப்படுத்தலாம். சிங்கள அரசியல்வாதிகளுக்கும்
தமிழர்கள் தொடர்ந்தும் ஏமாறத் தயாரில்லை
என்பதை தெரியப்படுத்துவதாக் இருக்கும்.
இப்படி ஒருமுறை செய்து பாருங்கள்.
இன்னும் ஒரு ஐந்து வருடத்தை வீணாக்காதீர்கள்.
இதுதான் கடந்த கால அனுபவத்தில்
இருந்து சொல்லக்கூடிய ஒரு ஆலோசனை

அன்பு வாசகர்களே! சுட்டும் முகநூல் என்ற புதியதொரு களம் உங்கள் கருத்துக்களைத் தாங்கி வெளிவருகிறது. முகநூல்களில் நீங்கள் இரசித்து பார்த்த அல்லது உங்கள் முகநூல் பக்கத்தில் நீங்கள் முன்வைத்த ஆழமான-யதார்த்தமான கருத்துக்கள் இவ்விடத்தில் பதிவிடப்படும். இதற்கு உதவியாக முகநூலில் வெளிவரும் அறிவார்ந்த கருத்துக்களை www.facebook.com/valampurii எனும் தளத்தில் உள்பெட்டி (Messenger) ஊடாக அனுப்பி வைக்கலாம்.

# கோத்தாவுக்கு ஆதரவாக பெரமுனவின் துணை அமைப்புக்களும் களத்தில்

(கொழும்பு)

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு ஆதரவாக துணை அமைப்புக்களும் களத்தில் இறங்கத் தீர்மானித்துள்ளன.

அதன் முதற்கட்டமாக பொதுஜன பெரமுனவின் துணை அமைப்புக்கள் இம்மாதம் 24ஆம் திகதி தொடக்கம் செப்டெம்பர் 4ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் தங்கள் தேசிய சம்மேளனக் கூட்டங்களை நடத்தி தமது அமைப்புக்களின் பலத்தை நிரூபிக்கத் திட்டமிட்டுள்ளன.

அதற்கேற்ப பொதுஜன பெரமுனவின் இளைஞர் சம்மேளனம் எதிர்வரும் 24ஆம் திகதி கொழும்பு தாமரைத் தடாக அரங்கிலும், 31ஆம் திகதி பொதுஜன பெரமுன மகளிர் அமைப்பின் தேசிய சம்மேளனம் இலங்கைக் கண்காட்சி மற்றும் மாநாட்டு அரங்கிலும் நடைபெறவுள்ளதுடன், பொதுஜன பெரமுன ஆட்டோ சாரதிகள் சங்கத்தின் தேசிய சம்மேளனம் அன்றைய தினம் இடம்பெறவுள்ளது.

செப்டெம்பர் முதலாம் திகதி முன்பள்ளி ஆசிரியர்கள் அமைப்பின் தேசிய சம்மேளன கூட்டமும், அன்றைய தினம் பிற்பகல் தனியார் பேருந்து சங்க உரிமையாளர்கள் சங்கத்தின் தேசிய சம்மேளனக் கூட்டமும் நடைபெறவுள்ளது.

செப்டெம்பர் இரண்டாம் திகதி முற்போக்கு தொழிற்சங்க தேசிய சம்மேளனம் மற்றும் உள்ளூராட்சி மன்ற வேட்பாளர்களின் பொதுக் கூட்டமும் நடைபெறவுள்ளது.

இவ்வாறாக சமுர்த்தி உத்தியோகத்தர்கள் சங்கம் மற்றும் சிரேஷ்ட பிரஜைகள் அமைப்பு என்பனவும் தங்கள் தேசிய சம்மேளனக் கூட்டங்கள் ஊடாக பொதுஜன பெரமுன வேட்பாளருக்கான ஆதரவை வெளிப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளன. (இ-7)

# மகிந்தவின் கடனை செலுத்தி முடிக்க திறைசேரி மறுப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் கடனை செலுத்தி முடிக்க திறைசேரி மறுப்பு தெரிவித்ததாக தெரியவருகிறது. மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் 4.4 பில்லியன் ரூபா கொடுப்பனவுகளை 2020ஆம் ஆண்டு பாதீட்டில் செலவுகளாக உள்ளடக்க அமைச்சரவையில் யோசனை முன்வைக்கப்பட்டது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த யோசனையை முன்வைத்திருந்தார். இதனையடுத்து அந்த யோசனை திறைசேரியின் கவனத்துக்குச் கொண்டு செல்லப்பட்டது.

எனினும் இந்தச் செலவுகள் அரச நிதி செலவுகளாக கருதப்பட முடியாதவை என்று திறைசேரி தெரிவித்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனையடுத்து இந்த விடயத்தை ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்ப நிதியமைச்சு தீர்மானித்துள்ளது.

2015ஆம் ஆண்டுக்கு முந்திய காலப்பகுதியில் ஜனாதிபதி செயலக தேவைகளுக்கு என்று கூறி இந்த கொடுப்பனவுகள் செலுத்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதில் இலங்கை சுங்கத்துக்கு மாத்திரம் 2 பில்லியன் ரூபா செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஏனைய கொடுப்பனவுகள் தனியார்துறை நிறுவனங்களுக்கு செலுத்தப்படவுள்ளன. (இ-7)

## ஆன்மீக அருளுரை

(யாழ்ப்பாணம்)

யாழ். சின்மயா மிஷன் சுவாமி சிதாகாசானந்தாவால் இல.700, பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள" சின்மய ஞானவேல்" வளாகத்தில் கடந்த 16 ஆம் திகதி முதல் ஆன்மீக அருளுரை இரவு 7.15 மணி முதல் 8 மணி வரை நடைபெற்று வருகிறது. இதில் இன்று திங்கட் கிழமை உண்மை வெற்றி, நாளை செவ்வாய்க்கிழமை வெற்றியின் இரகசியம்,நாளை மறு தினம் புதன்கிழமை நம்மால் முடியும் ஆகிய தலைப்புக்களில் அருளுரை இடம்பெறும் (ஜ)

## பந்தயத்தில் தோல்வி

# கோத்தாவுக்கு வாழ்த்து பதாகை வைத்த ஐ.தே.கட்சி ஆதரவாளர்

(கொழும்பு)

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டமையால் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர் ஒருவர் மோட்டார் சைக்கிளை இழந்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஜனாதிபதி வேட்பாளராக கோத்தபாய ராஜபக்ஷவை பெயரிடுவார்களா? இல்லையா? என நாகொட பிரதேச சபை ஊழியர்கள் இருவர் பந்தயம் வைத்தனர்.

இதற்கமைய பந்தய ஒப்பந்தமாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆதரவாளர் 150,000 ரூபாயையும் ஐக்கிய தேசிய கட்சியின் ஆதரவாளர் தனது மோட்டார் சைக்கிளையும் வழங்க ஒப்புக் கொண்டனர்.

இதனை அடுத்து கடந்த 11 ஆம் திகதி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக கோத்தபாய ராஜபக்ஷ உத்தியோகப்பூர்வமாக அறிவிக்கப்பட்டமையால்பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர் வெற்றிபெற்றார்.

இருப்பினும் தனது நண்பரின் மோட்டார் சைக்கிளை பெற்றுக்கொள்ள தயக்கம் காட்டிய பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர், அதற்கு மாற்றீடாக ஐக்கிய தேசிய கட்சியின் ஆதரவாளரை அவரது சொந்தக்கிராமத்தில் கோத்தாவை வாழ்த்தி 'வாழ்த்து பதாகை' அமைக்குமாறு கேட்டுகொண்டார். (ஜ)

## நல்லைக்குமரன் மலர் - 2019 (27)
## வெளியீட்டு விழா

விழிக்குத்துணை திருமென் மலர்பாதங்கள் மெய்மை குன்றா
மொழிக்குத்துணை முருகாவெனு நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத்துணை யவன்பன்னிருதோளும் பயந்த தனி
வழிக்குத்துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே
- கந்தரலங்காரம்

**காலம்** : **19.08.2019 திங்கட்கிழமை காலை 9.00 மணி**
**இடம்** : **நாவலர் கலாசார மண்டபம், நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**
**தலைவர்** : **திரு.இ.த.ஜெயசீலன்**
(சைவசமய விவகாரக் குழுவின் தலைவரும், யாழ்.மாநகர ஆணையாளரும்)
**பிரதம விருந்தினர்** : **கௌரவ இம்மானுவல் ஆனல்ட் அவர்கள்**
(முதல்வர், யாழ்.மாநகர சபை)
**சிறப்பு விருந்தினர்** : **திருமதி.எழிலரசி அன்ரன் யோகநாயகம் அவர்கள்**
(பிரதேச செயலர், நல்லூர்)

### நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| 09.00- 9.05 | இறைவணக்கம்- தேவாரம் |
| 09.05- 9.10 | வரவேற்பு நடனம் |
| 09.10- 9.15 | வரவேற்புரை- **திரு.அ.சீராளன்** (யாழ் மாநகரசபை செயலாளரும், சைவசமய விவகாரக்குழு உறுப்பினரும்) |
| 9.15- 9.20 | தலைமையுரை- **திரு.இ.த.ஜெயசீலன்** (சைவசமய விவகாரக் குழுவின் தலைவரும், யாழ். மாநகர ஆணையாளரும்) |
| 9.20- 9.45 | **ஆசியுரை**<br>**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள்** (நல்லை ஆதீன முதல்வர்)<br>**சிவஸ்ரீ சபா.வாசுதேவக்குருக்கள்** (பீடாதிபதி, வீணாகான குருபீடம்)<br>**சுவாமி சிதாகாசானந்தா** (வதிவிட ஆச்சாரியார், சின்மயாமிஷன், யாழ்ப்பாணம்)<br>**செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்** (தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை) |
| 9.45- 9.50 | சிறப்பு விருந்தினர் உரை-<br>**திருமதி. எழிலரசி அன்ரன் யோகநாயகம்** (பிரதேச செயலர் நல்லூர்) |
| 9.50- 9.55 | பிரதம விருந்தினர் உரை-<br>**திரு. இம்மானுவல் ஆனல்ட் அவர்கள்** (கௌரவ முதல்வர், யாழ் மாநகர சபை) |
| 9.55- 10.05 | கௌரவிப்பு.<br>**வாழ்நாள் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை** அவர்களிற்கு யாழ் விருது வழங்கலும் பொற்கிழி வழங்கலும் |
| 10.05- 10.15 | ஏற்புரை-<br>**வாழ்நாள் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை அவர்கள்** |
| 10.15- 10.25 | மலர் வெளியீடும், வெளியீட்டுரையும்<br>**திரு.ந.விஜயசுந்தரம்** - பதிப்பாசிரியர்<br>**முதற்பிரதி பெறுவோர் - தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்** |
| 10.25- 10.45 | ஆய்வுரை - **திருமதி.சுகந்தினி சிறீமுரளிதரன் அவர்கள்** (பீடாதிபதி, இந்து கற்கைகள் பீடம், யாழ் பல்கலைக்கழகம்) |
| 10.45- 11.10 | **விசேட பிரதிகள் வழங்கல்** |
| 11.10- 11.25 | **பரிசளிப்பு - பேச்சுப் போட்டி -2019** |
| 11.25- 11.30 | நன்றியுரை- **திரு.பு. ஆறுமுகதாசன்** (செயலாளர், சைவசமய விவகாரக்குழு) |

**பயனுள்ள ஆக்கங்கள் பலவற்றைத் தாங்கி நறுமணம் பரப்பும் நல்லைக்குமரன் மலரினைப் பெற்றுப் படித்துப் பயன்பெறும் வண்ணம் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.**

**சைவசமய விவகாரக் குழு,**
**யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.**

(ஐ)

# இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக ஆஸி செல்ல முற்பட்ட 13 பேர் கைது

(சிலாபம்)

இலங்கையிலிருந்து சட்ட விரோதமாக படகு மூலம் அவுஸ்திரேலியாவுக்குச் செல்ல முற்பட்ட 13 பேரை பொலிஸார் கைது செய்தனர். சிலாபத்திலிருந்து, அவுஸ்திரேலியாவுக்கு தப்பிச் செல்ல முற்பட்டவர்களே நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை கைது செய்யப்பட்டனர்.

சிலாபம், அம்பகந்தவில பகுதியிலிருந்து படகு மூலம் அவுஸ்திரேலியாவுக்கு சிலர் தப்பிச்செல்ல முற்பட்தாக கடந்த சில நாட்களுக்கு முன்னர் இலங்கை கடற்படையின் புலனாய்வுப் பிரிவுக்கு இரகசியத் தகவல் கிடைத்தது.

இதனையடுத்து கடற்படையினர் இந்த விடயம் தொடர்பாக விசாரணைகளை ஆரம்பித்திருந்த நிலையில்,குறித்த நபர்கள் சிறிய ரக லொறி ஒன்றில் கடற்கரையை நோக்கிப் பயணிக்கையிலேயே கைது செய்யப்பட்டனர்.

கரைவலைத் தொழிலுக்காக இரணவில பிரதேசத்திற்குச் சென்று அங்கு தொழில் இல்லாத காரணத்தால் மீண்டும் திரும்பிச் செல்வதாக கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள், பொலிஸாரிடம் தெரிவித்தனர். எனினும், அவர்கள் அம்பகந்தவில பிரதேசத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் சென்று தங்கியிருந்தமை விசாரணைகளிலிருந்து தெரியவந்தது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களுள் பத்து பேர், மட்டக்களப்பு பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் இருவர் தொடுவாய் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவித்துள்ள பொலிஸார், குறித்த 13 பேரும் 19 வயதுக்கும் 61 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் என்றும் தெரிவித்தனர்.

மேலும், கைது செய்யப்பட்டவர்களிடம் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் விசாரணையின் பின்னர் சந்தேகநபர்களை சிலாபம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# ஜனாதிபதியின் வடக்கு விஜயத்தின் போது 2ஆயிரம் மாணவர்களுக்கு புலமைப்பரிசில்

## ஆளுநர் ராகவன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதியின் வடக்கு விஜயத்தின் போது தாய், தந்தையை இழந்த 2 ஆயிரம் பாடசாலை மாணவர்களுக்கு விசேட புலமைப்பரிசில் வழங்க ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதாக வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பெற்றோரை இழந்த மாணவர்களுக்கே இவ்வாறு புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது.

இதன் மூலம் மாணவர்களின் எதிர்காலக் கல்விச் செயற்பாடுகளை தொடர்ந்து முன்னகர்த்துவதற்குரிய ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படவுள்ளதாக ஆளுநர் மேலும் தெரிவித்தார்.(இ-10)

## பொலிஸ் திணைக்களத்தில்

# 31,540 பேருக்கு விரைவில் பதவியுயர்வு

(கொழும்பு)

பொலிஸ் திணைக்களத்தில் நிலவும் வெற்றிடங்களை நிரப்பும் நோக்கில் பொலிஸ் கான்ஸ்டபிள் முதல் பொலிஸ்பரிசோதகர்வரையான பதவியுயர்வு வழங்குவதற்கான பொறிமுறையொன்றை கருவூல மேலாண்மை சேவை திணைக்களம் உருவாக்கியுள்ளது.

பொலிஸ் திணைக்களத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் முதல் பொலிஸ் பரிசோதகர் வரையான பதவிகளில் 31 ஆயிரத்து 540 பேருக்கு விரைவில் பதவியுயர்வுகள் வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. (இ-7)

# சட்டவிரோத மதுபானம் தொடர்பில் அறிவிக்க அவசர இலக்கம் அறிமுகம்

(கொழும்பு)

சட்டவிரோத மதுபான சுற்றிவளைப்புகளுக்காக மதுவரித் திணைக்களம் அவசர தொலைபேசி இலக்கம் ஒன்றை அறிமுகப்படுத்தியது. அதற்கமைய 1913 என்ற தொலைபேசி இலக்கத்தை அழைத்து பொது மக்கள் இன்று திங்கட்கிழமை முதல் முறைப்பாடுகளை மேற்கொள்ள முடியும் என அந்த திணைக்களம் தெரிவித்தது.

இந்த அவசர தொலைபேசி இலக்கத்திற்கு வழங்கப்படும் முறைப்பாடுகளின் இரகசியத்தன்மை பாதுகாக்கப்படுமென்றும் அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும் சட்டவிரோதமாக மதுபானங்களை கொண்டுசெல்லல் மற்றும் கைவசம் வைத்திருப்பது தொடர்பாக முறைப்பாடுகளை மேற்கொள்ள முடியும் என மதுவரித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார். (இ-7)



யாழ். குரும்பசிட்டி முன்பள்ளியின் விளையாட்டுப் போட்டி ஓய்வுபெற்ற பிரதி அதிபர் அ.அரியரட்ணம் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக புளொட் தலைவரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் கலந்து கொண்டார்.சிறப்பு விருந்தினர்களாக வட மாகாணசபை முன்னாள் உறுப்பினர்கள் பா.கஜதீபன், எஸ்.சுகிர்தன், உதவிக் கல்விப் பணிப்பாளர் தில்லைநாதன், கிராம உத்தியோகத்தர் பொ.தயாநிதி, முன்பள்ளி இணைப்பாளர் சுதாஜினிதேவி சுரேஸ், முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். விளையாட்டில் பங்குபற்றிய அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ் மற்றும் பரிசில்கள் வழங்கப்பட்டன.பிரதம விருந்தினருக்கு நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தனர்.

# கிளி. உமையாள்புரம் மக்களுக்கு குடிநீர் வழங்கும் இராணுவத்தினர்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட உமையாள்புரம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் வரட்சியால் பாதிக்கப்பட்ட சுமார் 300 குடும்பங்களுக்கு இராணுவத்தினர் குடிநீர் வழங்கி வருகின்றார்கள்.

உமையாள்புரம் பிரதேசம் உவராலும், வரட்சியாலும் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசம் என்பதனால் வருடத்தின் பெரும்பாலான நாட்கள் குடிநீர் விநியோகிக்க வேண்டிய பிரதேசமாகும். எனவே இங்கு திணைக்களங்களால் வழங்கப்படுகின்ற குடிநீர் போதுமானதாக இன்மையால் இராணுவத்தினரும் மேலதிகமாக குடிநீர் விநியோகத்தை மேற்கொண்டு வருகின்றனர்.(9)



வட மாகாணத்தில் உள்ள பெண் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களிற்கு தலைமைத்துவம் மற்றும் தொடர்பாடல், கடமை பொறுப்பு தொடர்பான இரண்டு நாள் வதிவிட பயிற்சி நெறி ரான்ஸ்ட்பெரன்சி சர்வதேச அமைப்பினால் வவுனியாவில் நேற்று இடம்பெற்றது. வவுனியா மில்வீதியில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதி ஒன்றில் இடம் பெற்ற இப்பயிற்சி நெறியில் வள வாளராக நளினி ரட்ணராஜா பங்கெடுத்திருந்தார். நிகழ்வில் ரான்ஸ்ட்பெரன்சி அமைப்பின் இணைப்பாளரும் சட்டத்தரணியுமான மங்களா சுந்தர் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (9-299)

## கிளி. வன்னேரிக்குளம் பிரதேசத்தில்

# பனை உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்த வாய்ப்பில்லை

(கிளிநொச்சி )

கிளிநொச்சி வன்னேரிக்குளம் பிரதேசத்தில் பனை உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்தக்கூடிய வசதிகள் இல்லை என்றும் இதனால் வருமானம் பெறும் குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி கரைச்சிப்பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள வன்னேரிக்குளம் பகுதியில் உள்ள அதிகளவான பெண் தலைமைத்துவக்குடும்பங்கள் பனை உற்பத்திப்பொருட்களை உற்பத்தி செய்து அதனை விற்பனை செய்து அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை கொண்டே தமது வாழ்வாதாரத்தை கொண்டு நடத்துகின்றனர்.

இந்நிலையில் தற்போது இவ்வாறான பனை உற்பத்திப் பொருட்களை உரியமுறையில் சந்தைப்படுத்தமுடியாத நிலை காணப்படுவதாகவும் தமது உற்பத்திப்பொருட்களை யாழ்ப்பாணம் கொண்டு சென்று விற்பனை செய்யவேண்டியுள்ளதால் போக்குவரத்துக்கு அதிக பணத்தை செலவழிக்க வேண்டியுள்ளதாகவும் பாதிக் கப்பட்டவர்கள் தெரிவித்துள் ளனர்.

இதனால் இவ்வாறான தொழில்கள் மூலம் தமக்கான வருமானங்கள் இடைக்காமையினால் இந்தத் தொழில்களை தாம் கைவிடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இதனை நம்பிவாழும் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் கவலை தெரிவித்துள்ளனர். சம்பந்தப்பட்ட அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள் இவ் விடயம் தொடர்பாக கவன மெடுக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர். (9-315)

# நல்லிணக்க செயல்முறைகள் தொடர்பான பயிற்சிப்பட்டறை



(மன்னார்)

தொடர்பாடலுக்கான பயிற்சி மையத்தின் ஏற்பாட்டில் இலங்கையில் போருக்கு பின்னரான நல்லிணக்க செயல் முறைகளை சக்திமயப்படுத்தல் எனும் தொனிப்பொருலில் மன்னார் மாவட்டத்தில் கிராம ரீதியாகவும் மாவட்ட ரீதியாகவும் சிறப்பாக செயற்படும் சிவில் சமூக அமைப்பின் பிரதிநிதிகளுக்கான வன்முறையற்ற தொடர்பாடல் தொடர்பான இரண்டு நாள் பயிற்சிப் பட்டறை கடந்த 17,18 ஆம் திகதிகளில் மன்னார் கிராமிய அபிவிருத்தி நிறுவன கேட்போர் கூடத்தில் தொடர்பாடலுக்கான பயிற்சி மையத்தின் மன்னார் செயற்றிட்ட அலுவலர் ஜோண்சன் தலைமையில் இடம் பெற்றது.

இதில் வன்முறையற்ற தொடர்பாடலுக்கான பயிற்சி மையத்தின்(CCT) விரிவுரையாளரும் மட்டக்களப்பு மற்றும் மன்னார் மாவட்ட முகாமையாளருமான பெனிக்னஸ் வளவாளராகக் கலந்து கொண்டார்.

குறித்த செயலமர்வில் இளைஞர், யுவதிகள் உட்பட சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், சமூக ஆர்வலர்கள் என பலரும் கலந்து கொண்டனர்

குறித்த நிகழ்வுகளின் மூலம் பயிற்சி பெற்ற உறுப்பினர்களை உள்ளடக்கி மாவட்ட ரீதியில் செயற்படக்கூடிய சிவில் அமைப்பு ஒன்றை ஆரம்பிப்பதற்கான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (9-285)

# சர்வதேச இளைஞர் மாநாடும் முத்தமிழ் சங்கம நிகழ்வும்



சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் 5ஆவது இந்து மாநாடும் முத்தமிழ் சங்கம நிகழ்வும் நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்றது.நேற்று காலை 8.30 மணிக்கு கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்றலில் இருந்து சைவப் பண்பாட்டு ஊர்வலத்துடன் நிகழ்வு ஆரம்பமாகி கூட்டுறவு மண்டபத்தைச் சென்றடைந்து அங்கு நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த சான் றோர்கள், தென்னிந்திய குரு மகா சந்நிதானங்கள், ஈழத்து ஆதீன குரு முதல்வர்கள் உள் ளிட்ட பல்தரப்பட்ட அறிஞர்கள், பேராசிரியர்கள்,மாணவர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இதில் மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம் பெற்றதுடன்சைவச் சான்றோர் களுக்கான கௌரவமும், சைவசமயச் செயற்பாட்டில் தம்மை அர்ப்பணித்து முன்மாதிரியாக செயலாற்றும் நல்லாசான்களுக்கு வழங்கப்படும் சர்வதேச உயர் விருதாகிய "சைவவித்யாபிமானி" விருதுகளும், கல்வி புகட்டல் செயற்பாட்டில் அர்ப்பணிப்புடன் செயலாற்றும் ஆசான்களுக்கு வழங்கப்படும் "வித்யாபதி" விருதுகளும் வழங்கப்பட்டன. அத்துடன் சைவ சமய போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு சான்றி தழ்களும் வழங்கப்பட்டன.(9-350)




# காட்டு யானைகளின் தொல்லையால் பயிர்ச்செய்கைகளை கைவிடும் விவசாயிகள்

(கண்டாவளை)

முல்லைத்தீவு, தேறாங் கண்டல்,ஐயன்கன்குளம் ஆகிய பகுதிகளில் தொடரும் காட்டு யானைகளின் தொல்லையால் பயிர்ச்செய்கைகளை கைவிட்டு இடம்பெயர வேண்டிய நிலை காணப்படுவதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள தேறாங் கண்டல், ஐயன்கன் குளம் ஆகிய பகுதிகளில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துக்காணப்படுகின்றது.

இவ்வாறு யானைகளின் தொல்லையில் தமது வாழ்வாதார பயிர்ச் செய்கைகள் எத னையும் மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது.

நேற்று முன்தினம் இரவு ஐயன்கன்குளம் பகுதியில் காட்டு யானைகள் பெருமளவான பயிர்களை அழித்துள்ளன.

இதேபோன்று கடந்த வாரத்திலும் தொடர்ந்தும் இவ்வாறு யானைகளின் தொல்லை அதிகரித்துக்காணப்பட்டதுடன், பெருமளவான தென்னை மரங்கள் பயன்தருமரங்களும் அழிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை தேறாங்கண்டல் பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு காட்டுயானைகள் பயிர்களை அழிந்துள்ளன. இவ்வாறு தமது கிராமங்களில் தொடரும் காட்டு யானைகளின் தொல்லையால் தமது வாழ்வாதாரத் தொழில்களையும் விவசாய செய்கைகளையும் கைவிட்டு தமது பூர்வீக நிலங்களை விட்டு வெளியேற வேண்டியநிலை காணப்படுவதாகவும் பாதிக்கப்பட்ட மேற்படி பிரதேச மக்கள் தெரி வித்துள்ளனர். (9-315)

# அறநெறி வகுப்புக்கள் மூலம் குற்றச் செயல்களிலிருந்து மாணவர்களை பாதுகாக்கலாம்

(நெளுக்குளம்)

வவுனியா மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும் அறநெறி வகுப்புக்களால் மாணவர்கள் பாரிய குற்றச் செயல்களில் இருந்து பாதுகாக்கப்படுவதாக தரணிக்குளம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் தெரிவித்துள்ளது.

தரணிக்குளம் பகுதியில் அண்மையில் வீடமைப்பு மற்றும் கலாசார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் திறந்து வைக்கப்பட்ட அறநெறி கட்டடத்தில் பிரதி ஞாயிறு தோறும் அறநெறிக் கல்வி நடைபெற்று வருகின்றது.

வவுனியா நகரப் பகுதியிலிருந்து 12 கிலோமீற்றர் தொலைவில் இருக்கும் தரணிக்குளம் கிராமத்தில் பாடசாலை விடுமுறைக்காலங்களில் தனிமையில் வீடுகளிலும் வெளி இடங்களிலும் உலாவும் சிறுவர்கள் தீய செயல்களுக்கும் துஷ்பிரயோகங்களுக்கும் உள் ளாகி சிறுவயதிலேயே பாரிய குற்றச் செயல்களில் ஈடுபடும் நிலை கடந்த காலங்களில் காணப்பட்டது.

ஆனால் கிராமப்புறங்களில் அறநெறி வகுப்புக்கள் நடைபெறுவதனால் சிறுவர்கள் அறக் கல்விகளைப் பயிலும் அதே வேளை தீய சமூகத்திலிருந்தும் பாதுகாக்கப்படுவதாக தரணிக்குளம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவித்தனர். (9-299)

# கிளி.கல்வி வலய பணிமனைக்கு புதிய கட்டடம்

(அக்கராயன்)

கிளிநொச்சி கல்வி வலய பணிமனைக்கு முதற்தடவையாக நிரந்தரக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. 1984ஆம் ஆண்டு கிளிநொச்சி மாவட்டம் தனி மாவட்டமாக உருவாக்கப்பட்டதன் பின்னர் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனைக்கென்று தனிக் கட்டடம் அமைக்கப்படவில்லை.

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம் உட்பட பல பாடசாலைகளில் வலயக் கல்விப் பணிமனை இயங்கியது. 1996 ஆம் ஆண்டு கிளிநொச்சி இடப்பெயர்வின்போது அக்கராயன் மகா வித்தியாலயத்திலும் வலயக் கல்விப் பணிமனை இயங்கியது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள 112 பாடசாலைகளில் தற்போது 104 பாடசாலைகள் இயங்குகின்றன. 32,500 மாணவர்கள் வரை கல்வி கற்கின்றனர். பாடசாலைகளின் வளங்களை அதிகரிப்பதும் மாணவர்களை நிர்வகித்து கல்வியில் முன்னேற்றுவதற்கான பணிகளை முன்னெடுக்கின்ற வலயக் கல்விப் பணிமனைக்கு நீண்ட காலமாக நிரந்தரக் கட்டடம் இல்லாத குறை காணப்பட்டது.

தற்போது வலயக் கல்விப் பணிமனைக்கான நிரந்தரக் கட்டட வேலைகள் நிறை வடைந்து விரைவில் திறந்து வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (9-350)

# அந்நியச் செலாவணி வருமானத்தில் 40 வீதமானவை தமிழர்களுடையது

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு



(நெளுக்குளம்)

நாட்டிற்கு கிடைக்கும் அந்நிய செலாவணி வருமானத்தில் 40 சதவீதம் தமிழர்களால் அனுப்பப்படுகின்றது என்று வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று நடைபெற்ற கூட்டுறவு சங்கமம் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே மேற்படி தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர்.

கூட்டுறவு என்ற இயக்கம் மனிதாபிமானத்தின் அடிப் படையில் நாகரிகத்தைகொண்ட ஒரு இயக்கமாக இருக்கிறது. அது மனிதாபிமான ரீதியான நுண்கடன்களை வழங்கி மக்களிற்கு உதவி செய்திருந்தது. ஆனால் இப்போதும் நுண்கடன் நிறுவனங்கள் இருக்கிறது அவற்றிடம் மனிதாபிமானத்தைக் காணவில்லை. உலகின் பல்வேறு நாடுகளில் கூட்டுறவின் மூலமான செயற்பாடுகள் தற்போதும் நடைபெற்ற வண்ணமே இருக்கின்றன.

எனது அனுபவத்தின் பிரகாரம் கூட்டுறவிற்குப் பின்னால் இருக்கும் மாபெரும் சக்தி பெண்களின் சக்தியாகவே இருக்கும். எனவே இந்த கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தும் இணைந்து வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி என்ற தாய்வங்கி ஒன்றை உருவாக்கியுள்ளோம். இதன்மூலம் நீங்கள் செய்து கொண்டிருக்கும் பணியை இன்னும் வலுவாக செய்து கொள்வதற்கான தேசிய, சர்வதேச ரீதியிலான வழி முறைகள் உங்களுக்கு கிடைக்கும்.

இலங்கையின் பிரதான வருமானமாக தற்போது அமைந்திருப்பது வெளிநாட்டில் வசிக்கும் இலங்கையர்கள் அங்கு உழைத்து அனுப்பும் அந்நியச் செலாவணிப் பணமே. அது 7 பில்லியன் அமெரிக்க டொலர்களாக காணப்படுகின்றது. அந்த தொகையில் 40 சதவிகிதமானது தமிழர்கள் அனுப்பி வைக்கும் பணமாக இருக்கிறது. இந்ததொகையில் ஒரு சதவீதத்தையாவது, எமது வங்கிமூலம் பராமரிக்க முடியுமாக இருந்தால் அது தேசிய அளவிலான வங்கியாக மாறக்கூடிய வாய்ப்பிருக்கிறது. இது தொடர்பாக நாம் மத்தியவங்கி ஆளுநருடன் கதைத்து வருகிறோம். எனவே எதிர் காலத்தில் வணிக வங்கிகளை விட கூட்டுறவு வங்கிகள் பெரு வளர்ச்சியை அடையும். அதனூடாக மக்களிற்கு கிடைக்கும் சேவைகள் அதிகரிக்கும் என மேலும் தெரிவித்தார். (9-299)

# வவு.வர்த்தக நிலையங்களில் சில்லறைக்குப் பதிலாக ரொபி மக்கள் விசனம்

வவுனியாவில் உள்ள பல வர்த்தக நில்லையங்களில் பொருட்களை கொள்வனவு செய்யும் போது மிகுதி சில்லறைப் பணத்திற்கு பதிலாக ரொபி வழங்கப்படுவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வவுனியா நகரம், வைரவ புளியங்குளம், குருமன்காடு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் உள்ள வர்த்தக நிலையங்களில் பொருட்களை கொள்வனவு செய்த பின் வருகின்ற மிகுதிச் சில்லறைப் பணங்களை குறித்த வர்த்தக நிலையத்தினர் வழங்குவதில்லை.

பதிலாக ரொபி வழங்குவதாக பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். மேலும் சில வர்த்தக நிலையங்கள் மிகுதிப் பணம் தொடர்பில் கவனம் செலுத்தாது மிகுதிச் சில்லறை இல்லை எனக்கூறி பணம் செலுத்துவதில்லை. இது தொடர்பில் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையினர் மற்றும் வவுனியா வர்த்தக சங்கத்தினர் கவனம் செலுத்த வேண்டும் எனவும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். (9-250)

# சந்தைக் கட்டடங்களை திறக்குமாறு கோரிக்கை



(அக்கராயன்)

முல்லைத்தீவு துணுக்காயின் ஐயன்கன்குளம். கோட்டைக் கட்டியகுளம் கிராமங்களில் அமைக்கப்பட்டுள்ள சந்தைகளை திறந்து வைப்பதற்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இது தொடர்பாக அப்பகுதி மக்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த ஐந்தாண்டுகளுக்கு மேலாக. இரு கிராமங்களிலும் சந்தைக் கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ள போதிலும் சந்தைகள் இயங்குவதில்லை. துணுக்காய் பிரதேச சபையும் இது தொடர்பாக அக்கறை செலுத்துவதில்லை. சந்தைகள் மூடி இருப்பதற்காகவா? கட்டடங்கள் அமைக்கப்பட்டன. இயங்க வைக்க முடியாத சந்தைகளுக்கு ஏன் கட்டடங்கள் அமைக்கப்பட்டன. எமது பகுதிகளில் இருந்து பிரதேச சபைக்கு உறுப்பினர்களை தெரிவு செய்து இருக்கின்றோம். ஆனால் சந்தைகள் இயங்கவில்லை. நாம் நீண்ட தூரம் சென்று வேறு சந்தைகளில் பொருட்களைக் கொள்வனவு செய்கின்றோம்.

துணுக்காய் பிரதேச சபைக்கு சந்தைகளை இயங்க வையுங்கள் எனப் பல தடவை கள் தெரிவிக்கப்பட்டும் நடவ டிக்கை எடுக்கப்படவில்லை. எனவே மாவட்டச் செயலாளர் சந்தைகளை திறந்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். (9-350)




# அடிக்கல் நாட்டல்

(நெளுக்குளம்)

வவுனியா ஓமந்தை பறநட்டகல் பகுதியில் புனித அந்தோனியார் ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டிவைக்கும் நிகழ்வு பங்குத்தந்தை தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

ஓமந்தை பனிக்கர்புளியங்குளம் பகுதியில் அமைக்கப்படவுள்ள புனித அந்தோனியார் ஆலயத்திற்கு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதனின் கம்பெரலியா கிராம அபிவிருத்தி நிதிப்பங்களிப்பில் மன்னார் மறைமாவட்ட ஆயர் வண. இம்மானுவேல் பெர்னாண்டோவினால் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

இந்நிகழ்வில் தமிழ் தெற்கு பிரதேச சபை உறுப்பினர் திருமதி அஞ்சலா கோகிலகுமார், நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர்கள், கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், ஆலயப் பங்கு மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (9-299)

# குறும்பட வெளியீடு



(அக்கராயன்)

சம காலத்தில் சமூகத்தின் மத்தியில் பாரியதொரு பிரச்சினையாக உருவெடுத்திருக்கும், நுண்கடனால் சமூகத்தின் மத்தியில் ஏற்படும் பிரச்சினைகளை கூறும் "றணம்" குறும்படம் வெளி யீடு கடந்த வாரம் முல்லைத்தீவு ஆறுமுகத்தான் குளம் கிராமத்தில் குறும்பட இயக்குநர் வ.பிரகலாதன் தலைமையில் நடைபெற்றது. குறும்படத்தின் முதல் இறுவெட்டினை முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன், இயக்குநர் பிரகலாதனிடமிருந்து பெற்றுக் கொண்டார். (9-350)

# பொலிஸ் அதிகாரிக்கு எதிராக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பெண் ஒருவர் முறைப்பாடு

(பனிக்கன்குளம்)

தலைமன்னார் கிராமப் பகுதியைச் சேர்ந்த குடும்பப் பெண் ஒருவர் தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் அதிகாரி ஒருவருக்கு எதிராக கடந்த வெள்ளிக்கிழமை மன்னார் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்துள்ளார்.

தன்னுடன் தவறாக நடந்து கொள்ள முயற்சி செய்வதாகவும் இரவு நேரங்களில் தொடர்ச்சியாக அச்சுறுத்தல் ஏற்படுத்துவதாகவும் கூறி தனக்கும் தனது குடும்பத்திற்கும் உரிய பாதுகாப்பை வழங்குமாறு கோரி குறித்த முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார்.

குறித்த முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கையில்,

தலைமன்னார் கிராமப்பகுதியில் வசிக்கும் எனது கணவர் ஆட்டோச் சாரதியாக உள்ளார். ஒருநாள் நள்ளிரவு அவசர ஆட்டோச் சவாரிக்குச் சென்ற போது எனது கணவர் வாகன அனுமதிப்பத்திரம் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றை வீட்டிலே விட்டுச் சென்று விட்டார்.

இந்த நிலையில் உடனடியாக எனது தம்பியிடம் குறித்த ஆவணங்களை கொடுத்து அனுப்பினேன். சற்று நேரம் கழித்து எனது தம்பி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டதாக தொலைபேசி அழைப்பு வந்தது.

என்னையும் தலைமன்னார் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்தனர். பொலிஸ் நிலையம் சென்ற போது தம்பி மாடு திருட முயன்றதால் கைது செய்ததாகவும் உன் தம்பியை விட வேண்டும் என்றால் நான் அழைக்கும் இடத்திற்கு தனியாக வர வேண்டும் என குறித்த பொலிஸ் அதிகாரி ஒருவரால் தெரிவிக்கப்பட்டது.

அதனால் தான் கோபமடைந்து பொலிஸ் நிலையத்தில் இருந்து நள்ளிரவே வெளியே வந்ததாகவும் பாதிக்கப்பட்ட பெண் குறித்த முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

சற்று நேரத்தில் குறித்த பொலிஸ் அதிகாரி அப் பெண்ணின் கையடக்க தொலைபேசிக்கு அழைப்பு மேற்கொண்டு தன்னுடைய நிபந்தனைக்கு அடிபணியுமாறு கோரியுள்ளார். குறித்த பெண் தனது கணவனின் அறிவுரையின் படி குறித்த பொலிஸ் அதிகாரியின் உரையாடலை பதிவு செய்துள்ளார்.

பின்னர் மன்னார் பொலிஸ் அத்தியட்சகரிடம் குறித்த உரையாடல்களை ஒப்படைத்த நிலை யில் குறித்த பொலிஸ் அதிகாரியை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் மாற்றம் செய்வதாக வாக்குறுதி அளித்தனர். ஆனால் குறித்த அதிகாரி அதே பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுகின்றார்.

குறித்த பொலிஸ் அதிகாரியின் உண்மை முகத்தை வெளிக் கொண்டு வந்ததால் தொடர்ச்சியாக இரவு நேரங்களில் அச்சுறுத்தல் விடுக்கும் விதமாக செயற்படுவதாகவும் பழிவாங்கும் செயற்பாடுகளிலும் ஈடுபடுவதாகவும் குறித்த பெண் தெரிவித்துள்ளார். எனவேமனித உரிமைகள்ஆணைக்குழு குறித்த விடயத்தில் தலையிட்டு நீதியைப் பெற்று தந்து குடும்பத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி தருமாறு குறித்த முறைப்பாட்டில் கோரிக்கை விடுத்துள்ளார். (9-285)

# உணவக உரிமையாளர்களுக்கு விழிப்புணர்வு செயலமர்வு



(நெளுக்குளம்)

வவுனியா பிராந்திய சுகாதாரப் பணிமனையினால் வவுனியா நகரிலுள்ள உணவு கையாளும் நிலையங்களில் காணப்பட்ட சுகாதாரமற்ற நிலைமைகளை பரிசோதனை மேற்கொண்டு உணவகங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் வவுனியா வர்த்தகர் சங்கத்தின் கோரிக்கைக்கு அமைவாக உணவக உரிமையாளர்களுக்கான உணவுப் பாதுகாப்பு, உணவு சுகாதாரம் தொடர்பான தெளிவூட்டல் செயலமர்வு நேற்று முன்தினம் வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் திருமதி பசுபதி, ராஜா தலைமையில் இடம்பெற்றது.

நகரிலுள்ள உணவகங்களின் பாதுகாப்பு.சுகாதாரம் போன்ற விடயங்கள் தொடர்பாக உணவக நிலையங்களின் உரிமையாளர்களுக்கு விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் எம். மகேந்திரன், பிராந்திய பொதுச்சுகாதாரப் பரிசோதகர் எஸ்.ரவீந்திரன், மாவட்ட உணவு மருத்துவப்பரிசோதகர் பார்த்தீபன், தாய் சேய் நல வைத்திய அதிகாரி வைத்தியர் ஜெயரதன், சிரேஷ்ட பொது சுகாதார பரிசோதகர் எஸ்.சிவபாலன், வவுனியா வர்த்தகர் சங்கப்பிரதிநிதிகள், உணவக உரிமையாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (9-299)

# பாரதம்

# மின்சாரம் தாக்கியதில் 5 மாணவர்கள் உயிரிழப்பு

## தேசியக் கொடியை இறக்கிய வேளை விபரீதம்

(கர்நாடகா)

கர்நாடக மாநிலம் கோப்பில் நகரில் தேசியக்கொடியை கம்பத்திலிருந்து இறக்கிய சந்தர்ப்பத்தில் 5 மாணவர்கள் மின்சாரம் தாக்கி உயிரிழந்தனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்ற இந்த சம்பவத்தால் கர்நாடக மாநிலமே சோகத்தில் மூழ்கியுள்ளது.

அரச பாடசாலை மாணவர்கள் 5 பேரும் நேற்றுக் காலை தேசியக்கொடியை கம்பத்திலிருந்து இறக்கும்போது, அருகே இருந்த மின்கம்பியில் பட்டு மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளாகினர் என பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

மேலும் சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை அம் மாநில பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை உயிரிழந்த மாணவர்கள் குடும்பத்துக்கு தலா 5 இலட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கப்படும் என கர்நாடக முதலமைச்சர் எடியூரப்பா அறிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

# காஷ்மீரில் சிறப்பு அந்தஸ்து இரத்து பாகிஸ்தானின் முறைப்பாடு நிராகரிப்பு

## ஐ.நாவின் ஆதரவைப் பெற்றது இந்தியா

(காஷ்மீர்)

காஷ்மீரில் சிறப்புச் சட்டப் பிரிவு இரத்துச் செய்யப்பட்ட விவகாரத்தை சர்வதேச பிரச்சினையாக மாற்றுவதற்கு ஐ.நா. பாதுகாப்புச் சபையில் பாகிஸ்தான் அளித்த முறைப்பாடு நிராகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இது உள்நாட்டு விவகாரம்தான் என்ற இந்தியாவின் நிலைப்பாட்டுக்கு சீனாவைத் தவிர ஏனைய 14 உறுப்பு நாடுகளும் ஆதரவு தெரிவித்துள்ளன.

பாகிஸ்தானின் கோரிக்கை குறித்து விவாதம் நடத்திய ஐ.நா. பாதுகாப்பு சபை, இருநாடுகளும் சுமுக தீர்வு காணும்படி அறிவுறுத்தியுள்ளது.

பாகிஸ்தானுக்கு ஆதரவாக இப்பிரச்சினையை சீனாவும் எழுப்ப முயற்சித்தது.

ஆனால் பாகிஸ்தான், சீனா ஆகிய நாடுகளின் முயற்சிகள் ஐ.நாவின் செயற்பாட்டினால் தற்போது முறியடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஐ.நாவுக்கான இந்திய பிரதிநிதி சையத் அக்பருதீன், பாகிஸ்தான் தீவிரவாதத்தை கைவிட்டால் பேச்சுவார்த்தையில் ஈடுபடத் தயார் என்று அறிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ-2)

# இந்தியா - பூட்டான் இடையே 10 ஒப்பந்தங்கள் கைச்சாத்து



(திம்பு)

இந்தியா- பூட்டான் இடையே விண்வெளி ஆராய்ச்சி, விமானப் போக்குவரத்து, தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் 10 முக்கிய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

பூட்டான் தலைநகர் திம்புவில் அந்நாட்டுப் பிரதமர் லோதே ஷேரிங்கை, பிரதமர் நரேந்திர மோடி நேற்று முன்தினம் சனிக்கிழமை சந்தித்தார்.

இதன்போது இருவருக்கும் இடையில் பேச்சுவார்த்தை ஒன்று இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்தே முக்கிய புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் இருநாட்டு பிரதமரும் கையெழுத்திட்டனர். (ஐ)

# இந்தியாவின் சவாலை எதிர்கொள்ளத் தயார்

## பாகிஸ்தான் இராணுவம் அறிவிப்பு

(இஸ்லாமாபாத்)

இந்தியாவின் எந்தவித சவாலையும் சந்திக்க பாகிஸ்தான் தயாராக இருப்பதாக பாகிஸ்தான் இராணுவம் அறிவித்துள்ளது.

காஷ்மீர் மாநிலத்துக்கு வழங்கப்பட்டு வந்த சிறப்பு அந்தஸ்தை ரத்துச் செய்து மத்திய அரசு அதிரடி நடவடிக்கை எடுத்தது.மேலும் 2 யூனியன் பிரதேசமாக பிரிக்கப்பட்டது.

காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்தை இரத்து செய்ததற்கு பாகிஸ்தான் கடும் எதிர்ப்பு தெரிவித்தது. பாகிஸ்தானுக்கு கலக்கத்தை ஏற்படுத்தும் இந்த முடிவால் அந்த நாடு காஷ்மீர் பிரச்சினையை சர்வதேச பிரச்சினையாக்க முயற்சி செய்து வருகிறது.

இதற்காக சீனாவுடன் இணைந்து ஐ.நா. பாதுகாப்பு சபையில் காஷ்மீர் விவகாரத்தை கொண்டு வந்தது. இந்த முயற்சிக்கு போதுமான ஆதரவு கிடைக்கவில்லை. பாகிஸ்தானின் இந்த முயற்சி தோல்வியில் முடிந்தது.


இந்நிலையில் இந்தியாவின் எந்தவித சவாலையும் சந்திக்க பாகிஸ்தான் தயாரா்க இருப்பதாக பாகிஸ்தான் இராணுவம் அறிவித்துள்ளது. காஷ்மீர் விவகாரம் தொடர்பாக பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சா் ஷாமுக மது குரேஷி அந்நாட்டு இராணுவ அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஆப்கானில் தற்கொ

# 63 பேர் பலி; 182

(காபூல்)

**ஆப்கானிஸ்தானில் இடம்பெற்ற திரும குண்டுத்தாக்குதலில் 63 பேர் உய காயமடைந்துள்ளனர்.**



# ஆப்கானிஸ்தானில் தாக்குதல் 31 தலிபான்கள் உயிரிழப்பு!

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் மேற்கொள்ளப்பட்ட வான் தாக்குதலில் 21 தலிபான்கள் உயிரிழந்தனர்.

தலிபான்களுக்கும், அமெரிக்கா தலைமையிலான உள்நாட்டுப் படைகளுக்கும் இடையிலான மோதல் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகிறது.

இந்நிலையில் கஜினி மாகாணம், ஹட்டா கிராமத்தில் தலிபான்கள் பதுங்கியிருந்த இடத்தைக் குறி வைத்து அமெரிக்க கூட்டுப்படை விமானம் வான்தாக்குதல் நடத்தியது.

இதில் 6 தலிபான்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

அதேபோன்று பால்க் மாகாணத் தில் ஷோல்கிராஹ் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட மற்றொரு வான் தாக்குதலில் 15 தலிபான்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த தகவல்களை ஆப்கானிஸ்தானின் காமா செய்தி நிறுவனம் நேற்று முன்தினம் சனிக்கிழமை ,வெளியிட்டுள்ளது. (ஐ-2)

# ஹொங்கொங் போரா

# ஆதரவாக ஆஸியில்



# கொலை தாக்குதல்!

## 82 பேர் படுகாயம்

### திருமண விருந்தில் மேற்கொள்ளப்பட்ட ... ர் உயிரிழந்ததுடன், 182 பேர் படு



காயமடைந்தவர்களில் பலரும் ஆபத் தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின் றமை காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணி க்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்படுகின்றது.

ஆரம்பத்தில் குறித்த தாக்குதல் குண் டுத் தாக்குதல் என அறிவிக்க ப்பட்டிரு ந்தாலும், அது தற்கொலைக் குண்டுத் தாக்குதல் என்பது கண்ட றியப்பட்டுள் ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த தற் கொலைக்குண்டுத்தாக்குதலுக்கு பொறுப்பேற்க தலிபான் பயங்கர வாதிகள் மறுப்புத் தெரிவித்துள்ள தாகவும்சர்தேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ஜ-2)

# பாதுகாப்பற்ற முறையில் தங்கியிருந்த முப்பது அகதிகள் வெளியேற்றம்!

(பாரிஸ்)

பிரான்ஸின் வடக்கு பாரி ஸில் பாதுகாப்பற்ற முறையில் தங்கியி ருந்த 30 அகதிகள் வெளியேற்றப்பட் டுள்ளனர்.

வடக்கு பாரிஸில் பாதுகாப் பற்ற முறையில் தங்கியிருந்த வர்களே இவ்வாறு வெளியேற் றப்பட்டுள்ள தாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித் துள்ளனர்.

பொலிஸாருடன், பல்வேறு தன் னார்வத் தொண்டர்களும் இணை ந்து இந்த வெளியேற்ற நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததாக குறிப்பிடப்படுகி ன்றது.

சூடான், எரித்திரியா, ஆப்கானி ஸ்தான் போன்ற நாடுகளைச் சேர்ந்த அகதிகளே இவ்வாறு வெளியேற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பகுதியில் மொத்த மாக 24 கூடாரங்கள் அமை க்கப்பட்டிருந்ததாகவும், அவை அனைத்தும் பொலிஸாரால் அகற்றப்பட்டுள்ளதாகவும் குறிப் பிடப்படுகிறது.

பிரான்ஸில் இவ்வாறு மாத ந்தோறும் பாதுகாப்பற்ற முறை யில் தங்கியிருக்கும் அகதிகள் வெளியேற்றப்பட்டு வருகின றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# ராட்டக்காரர்களுக்கு ல் ஒற்றுமைப் பேரணி

(மொஸ்கோ)

ஹொங்கொங்கில் கைதிகள் ஒப் படைப்பு மசோதாவை எதிர்த்து போரா ட்டம் நடத்தி வருபவர்களுக்கு ஆதர வாக அவுஸ்திரேலியாவில் நேற்று முன்தினம் பேரணி நடைபெற்றது.

ஹொங்கொங்கில் குற்றவியல் வழக்குகளில் சிக்குகிறவர்களை சீனா வுக்கு நாடு கடத்தி, வழக்கு விசார ணையை சந்திக்க வைக்க ஏதுவாக கைதிகள் பரிமாற்றச் சட்டத்தில் திருத் தம் கொண்டு வர ஹொங்கொங் நிர் வாகம் முடிவு செய்தது.

ஆனால் இதற்கு எதிர்ப்புத் தெரி வித்து, கடந்த ஜூன் மாதம் ஜனநாயக ஆதரவாளர்கள் போராட்டத்தில் குதித் தனர். பல்வேறு இடங்களில் இலட் சக்கணக்கான மக்கள் வீதிகளில் இறங்கி நடத்திய போராட்டத்தால் ஹொங்கொங் குலுங்கியது.

இதனால், கைதிகள் பரிமா ற்ற சட்ட திருத்த மசோதா நிறுத்தி வைக்கப்படுவதாக ஹொங்கொங் நிர்வாகத் தலைவர் கேரிலாம் அறிவித்தார். ஆனாலும் போரா ட்டக்காரர்கள் சமரசம் ஆகவி ல்லை. மசோதாவை முழுமை யாக திரும்பப்பெற வேண்டும் என்பதை வலியுறுத்தி தொடர்ந்து போராட்டங்களில் ஈடுபட்டு வருகி ன்றனர்.

இந்நிலையில், நேற்று முன் தினம் அவுஸ்திரேலியா நாட்டின் சிட்னி மற்றும் மெல்பேர்ன் நகரங்களில் 1000 இற்கும் மேற் பட்ட ஹொங்கொங் மக்கள் போராட்டக்காரர்களுக்கு ஆதர வாக பேரணி நடத்தினர். (ஜ)

# கப்பலின் இயந்திர அறையில் தீ!

## எழுவர் உயிரிழப்பு; நால்வர் மாயம்



(ஜகார்த்தா)

இந்தோனேசியாவில் கப்பல் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்குண்டு இரண்டு குழந்தை கள் உட்பட ஏழு பேர் உயிரிழந்த னர்.

இந்தோனேசியாவின் சுல வேசி மாகாணத்தின் கெண்டாரி துறைமுகத்தில் இருந்து மரொ வலி மாவட்டத்திலுள்ள கலேராங் துறைமுகம் நோக்கிப் பயணித்த கப்பலிலேயே தீ விபத்து ஏற்பட்டு ள்ளது.

தகவலறிந்து விரைந்த மீட்புப் படையினர் மீட்புப்பணிகளில் ஈடுபட்டதாக இந்தோனேசிய ஊடகங்கள் செய்தி வெளியிட் டுள்ளன.

இந்நிலையில் விபத்து குறித்து கருத்து வெளியிட்டுள்ள அதிகா ரிகள், 'கப்பலின் இயந்திர அறை யில் தீப்பற்றியது. தீ வேகமாகப் பரவியதால் ஊழியர்களால் கட் டுப்படுத்த இயலவில்லை.

இந்த விபத்தில், இரு குழந் தைகள் உட்பட மொத்தம் 7 பேர் உயிரிழந்துள்ளதுடன், நால்வர் காணாமல் போயுள்ளனர். அவர் களை தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

கப்பலில் இருந்த 61 பேரை அருகில் வந்த கப்பலில் உள்ள வர்கள் மீட்டனர்' என தெரிவித் துள்ளனர். (ஜ-2)

# பங்களாதேஷில் பாரிய தீ விபத்து 15 ஆயிரம் வீடுகள் எரிந்து நாசம் 50 ஆயிரம் மக்கள் பாதிப்பு!







(டாக்கா)

பங்களாதேஷில் ஏற் பட்ட பாரிய தீ விபத்தில் 15 ஆயிரம் வீடுகள் எரி ந்து நாசமாகியுள்ளன.

பங்களாதேஷ் தலை நகர் டாக்காவிலுள்ள சாலண்டிகா குடிசைப் பகுதி ஒன்றிலேயே கட ந்த வெள்ளிக்கிழமை இந்த தீ விபத்து ஏற்பட்டு ள்ளது.

பிளாஸ்டிக்கினால் வீடுகளின் கூரைகள் அமைக்கப்பட்டமை கார ணமாக தீயைக் கட்டுப் படுத்துவதில் சிக்கல் ஏற்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.



இந்தப் பாரிய தீ விப த்து காரணமாக 50 ஆயிர த்திற்கும் மேற்பட்டவர் கள் தங்களது வீடுகளை இழந்துள்ளதாகவும் வீடு களை இழந்தவர்கள் தற் போது வீதிகளில் தஞ்ச மடைந்துள்ளதாகவும் பங்களாதேஷ் ஊடகங் கள் செய்தி வெளியிட் டுள்ளன.

இதன்போது காய மடைந்தவர்கள் தற் போது வைத்திய சாலை களில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதா கவும் தெரிவிக்கப்படு கின்றது.

இந் தநிலையில் பாதிக்கப்பட்டுள்ள மக்க ளுக்கு நிவாரணம் வழ ங்கப்படும் என பங்க ளாதேஷ் அரசாங்கம் அறிவித்துள்ளது. (ஜ)

# எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் அமிலப் பரிசோதனைக்கு ஒப்பானது

## கோத்தபாயவை புகழ்ந்த கமால்

(கொழும்பு)
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் ஒரு அமிலப் பரிசோதனைக்கு ஒப்பானது என்று மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன தெரிவித்தார்.

கொழும்பு-நாரஹேன்பிட்டியிலுள்ள அபயாராம விகாரையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற "2020 சவால்கள்" எனும் தலைப்பிலான கலந்துரையாடலில் கருத்து வெளியிடும்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த காலங்களில் இந்த அரசாங்கத்தின் கீழ் ஆறு பாதுகாப்புச் செயலாளர்கள் நியமிக்கப்பட்டனர். ஆனால் எதுவித முன்னேற்றமும் இல்லை. குறைந்த பட்சம் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலைக் கூட தடுத்து நிறுத்த முடியவில்லை.

பாதுகாப்புச் செயலாளர் என்ற பதவிக்கு ஒரு பெருமையை ஏற்படுத்தியவர் கோத்தபாய ராஜபக்ஷ மாத்திரமே. மற்றவர்கள் எல்லாம் அதனை ஒரு வெறும் பதவியாக மட்டுமே வகித்தனர்.

இந்த அரசாங்கத்துக்கோ, பிரதமருக்கோ, அமைச்சரவைக்கோ நாட்டைப் பற்றியும் அதன் பாதுகாப்பு பற்றியும் கிஞ்சித்தும் கவலை இல்லை.

அந்த வகையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் ஒரு அமிலப் பரிசோதனையாகவே இருக்கப் போகின்றது. யாருக்கு வாக்களிக்கப் போகின்றோம் என்பதைப் பொறுத்து நம் நாட்டின் தலைவிதி நிர்ணயிக்கப்படப் போகின்றது.

தவறான நபர் ஒருவர் ஜனாதிபதித் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டால் அத்துடன் அனைத்தும் அழிவுக்குள்ளாகி விடும் என்றும் கமால் குணரட்ன எச்சரித்தார். (இ-7)

## நடைமுறைச்சட்டம் மிகப்பெரிய அநீதி

# முஸ்லிம் பெண்கள் காதி நீதிபதிகளாக நியமிக்கப்படல் வேண்டும்-பைசர்



(கொழும்பு)
தற்போது நடைமுறையிலுள்ள முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம், இந்நாட்டு முஸ்லிம் பெண்களுக்கு மிகப்பெரிய அநீதியாக இருப்பதாகவும் இதற்கு தனது அதிருப்தியைத் வெளியிடுவதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி பைசர் முஸ்தபா தெரிவித்தார். ராஜகிரியவிலுள்ள அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சட்டத்தரணிகளாக இருக்கும் முஸ்லிம் பெண்கள், காதி நீதிபதிகளாக நியமிக்கப்படல் வேண்டும். மலேசியா, டுனூசியா, இந்தோனேசியா, பாகிஸ்தான் உள்ளிட்ட பல முஸ்லிம் நாடுகளில், குறிப்பாக பெண்கள் காதி நீதிபதிகளாக நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். இவ்வாறு இருக்கையில், சட்டத்தரணிகளாக இருக்கும் முஸ்லிம் பெண்கள் ஏன் எமது நாட்டில் காதி நீதிபதிகளாக வரக்கூடாது என்றும் பைசர் முஸ்தபா கேள்வி எழுப்பினார்.

முஸ்லிம் பெண்களின் திருமண வயது 16 தொடக்கம் 18 வயதெல்லையாக இருக்க வேண்டுமெனத் தெரிவித்த பைசர் முஸ்தபா, ஒரு ஆண் இரண்டாவது திருமணம் முடிப்பதாக இருந்தால் தனது சொத்துக்கள் வருமானங்களில் அரைவாசிப் பங்கை, அவர் தனது முதல் மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் வழங்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இலங்கையில் ஏனைய சமூகங்களினது விவாகரத்துச் சட்டம் மாவட்ட நீதிமன்றத்திற்குக்கொண்டு செல்லப்பட்டுத் தீர்ப்பு வழங்கப்படுவது போன்று, முஸ்லிம் காதி நீதிமன்றங்களும் அதே தரத்திற்கு உயர்த்தப்படல் வேண்டும். இதேவேளை, முஸ்லிம் பெண்கள் அணியும் நிகாப் தற்போது தடைசெய்யப்பட்டாலும் இது நிரந்தரமாகத் தடை செய்யப்படக் கூடாது.

இது முஸ்லிம்களின் உரிமையாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மட்டு.வான்பரப்பில் அதிசயப் பொருள்




(கல்குடா)
மட்டக்களப்பு மாவட்டம் கல்குடா பகுதியிலுள்ள ஓட்டமாவடி, மீராவோடை, வாழைச்சேனை உள்ளடங்கிய பல பிரதேசங்களின் வான்பரப்பில் வெள்ளை நிறத்திலான பொருள் ஒன்று காணப்படுவதை நேற்று காலை அவதானிக்க முடிந்தது. குறித்த பொருளானது வான் பரப்பில் பறந்து திரிவதை அப்பகுதி மக்கள் அவதானித்துள்ளனர்.

பஞ்சு வகை போன்ற குறித்த பொருளை சிலர் கையிலெடுத்து பார்த்த போது அவை மென்மையாக காணப்படுவதாகவும் அதில் சிறு பூச்சி இனம் உள்ளதாகவும் தெரிவித்தனர். (ஐ)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## அக்னி ஹோத்ரம்

எஸ்.என்.குஷ்வானா என்று ஒரு 45 வயது ஆசிரியர். அவருடைய மனைவி பெயர் திரிவேணி (வயது-36). அவர் ஏதோ வாந்தி எடுக்கிற மாதிரி ஒரு சத்தம்.

அந்த ஆசிரியர் முழித்துக்கொண்டார். சிறிது நேரத்திலே அவர்கள் குழந்தைகளும் பலமா இருமுவதற்கு ஆரம்பித்திட்டார்கள். கடுமையான நெஞ்சுவலி. கண்களிலே எரிச்சல். மூச்சு விட முடியாத ஒரு திணறல். அவர்கள் யாருக்கும் என்னென்னு ஒன்றும் புரியவில்லை. வீட்டைவிட்டு வெளியிலே வந்தார்கள்.

அங்கே பார்த்தால் ஆயிரக்கணக்கான மக்கள் பீதியோடு தெருவிலே ஓடிக்கொண்டிருந்தார்கள். அப்படி ஓடிக்கொண்டிருந்ததிலே ஒருத்தர் போற போக்கிலே ஒரு விடயத்தை சொல்லிவிட்டு ஓடினார்.

"ஒரு மைல் தூரத்திலே இருக்கிற தொழிற்சாலையிலே விஷவாயு கசிவு ஏற்பட்டிருக்கு. இங்கே இருந்தால் உயிருக்கு ஆபத்து-அதுதான் ஓடுகிறோம்" என்று சொல்லிவிட்டு ஓடிவிட்டார்.

உடனே சரி...நாமும் புறப்பட்டு ஓடிப்போய் விட வேண்டியதுதான் என்று அந்த ஆசிரியர் முடிவு செய்தார்.

ஆனால் அவர் மனைவி இன்னொரு யோசனை சொன்னார். "நாம் ஏன் ஓட வேண்டும்? அக்னி ஹோத்திரத்தை ஆரம்பித்தால் என்ன?" என்றார். தீயை உண்டாக்கி அதிலே என்னென்னவோ போட்டு எரித்து "ஹோமம்" வளர்க்கிறார்களல்லவா அதுதான் அக்னி ஹோத்திரம். அது ஏற்கனவே அந்தக் குடும்பத்துக்குப் பழக்கமான ஒன்று. உடனே அவர்கள் ஹோம தீயை வளர்க்க ஆரம்பித்திட்டார்கள். ஆரம்பித்து ஒரு இருபது நிமிடத்திற்குள்ளே விஷவாயு பாதிப்பு அந்த வீட்டை விட்டு விலகிப் போய்விட்டது.

எம்.எல்.ரதோரே என்று ஒருத்தர் (வயது-33). அவர், அவரது மனைவி, அவரது நான்கு குழந்தைகள், அவருடைய தாயார், சகோதரர்கள். போபால் ரயில்வே ஸ்ரேஷனுக்குப் பக்கத்திலே அவர்களுடைய வீடு. 5 வருடகாலமாக அவர் அக்னி ஹோத்திரத்தை ஒரு தினசரி நியமமாக செய்து கொண்டு வருகிறவர். அன்றைக்கு அந்த நடுராத்திரியிலே அதைச் செய்தார். அதைத் தொடர்ந்து த்ரயம்பக ஹோமத்தையும் செய்தார்.

அந்தக் குடும்பமும் அதை சுற்றியிருந்த சில குடும்பங்களும் விஷவாயு பாதிப்பிலே இருந்து தப்பித்துக்கொண்டார்கள். அக்னி ஹோத்திரம் என்றால் என்ன? வேதங்களிலே யாகத் தீயை பற்றியெல்லாம் சொல்லியிருக்கிறார்களல்லவா, அதே மாதிரி சிறு அளவிலே செய்யிறது இது. வெளிநாட்டு விஞ்ஞானிகள் இப்ப இதைப் பற்றியெல்லாம் ஆராய்ச்சி செய்கிறார்கள்.


"பார்பிராத்னா" என்று அமெரிக்கக்காரர் ஒருத்தர் இருந்தார். இவர் ஒரு விஞ்ஞானி, மன இயல் நிபுணர். புனே சர்வகலாசாலையிலே இவர் "அக்னி ஹோத்திரம்" பற்றி ஆராய்ச்சி செய்தார். அவர் என்ன சொல்கிறாரென்றால், "அக்னி ஹோத்திரம் என்ற சிறு யாகத் தீ எமது சுற்றுப்புறச் சூழலிலே சில குறிப்பிட்ட ஆரோக்கிய விளைவுகளை ஏற்படுத்துது. இந்த மாதிரி குணப்படுத்திற நற்பலன்கள் எமது பழங்காலத்து ஆயுர்வேதத்திலேயே சொல்லியிருக்கு" என்றார். எங்கள் ஊர் ஆயுர்வேதத்தில் என்ன சொல்லியிருக்கு என்பதை அமெரிக்காவிலிருந்து ஒருத்தர் படித்துவிட்டு வந்து சொல்ல வேண்டியிருக்கு.

இந்த யாகத்தீ வளர்க்கும் போது அதில் வரும் சாம்பலை வைத்து ஆராய்ச்சி செய்கின்றார்கள். இது பல வெளிநோய்களைக் குணப்படுத்துகின்றது. மேற்கு ஜேர்மனில் கண்டுபிடித்திருக்கிறார்கள். பல நாடுகளில் அக்கினி ஹோத்திரத்தின் விளைவாக விவசாய அறுவடை 800 சதவீதமாக அதிகரித்துள்ளதாக சொல்கிறார்கள்.

அக்கினிஹோத்திரம் செய்வதற்கு என்ன வேண்டும் தெரியுமா? ஒரு சின்ன பிரமிட் மாதிரி அமைப்பில் செய்த பாத்திரம்! அளவு 6 அங்குலம் × 6 அங்குலம் × 3 அங்குலம். பசுஞ்சாணத்தை வெயிலில் காயவைத்து செய்த வறட்டிகள், சுத்தமான நெய், கொஞ்சம் அரிசி அவ்வளவுதான். அரிசியில் இருக்கும் சில இரசாயனப் பொருள் காரணமாகத்தான் அதை அதற்கு தேர்ந்தெடுக்கிறார்கள். பசுஞ்சாணத்தில் விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்கப்பட்ட கிருமிநாசினிகள் இருக்கு.

சுத்தமான நெய் பசுஞ்சாணத்தை எரிக்கும் போது நல்ல விளைவுகளை அதிகரிக்கிற கிரியா ஊக்கியா செயல்படுகிறது. செப்பு உலோகத்தில் பல நன்மை இருக்கு பழங்காலத்திலிருந்தே அனுபவ பூர்வமாக தெரிந்த ஒரு உண்மை. அக்கினி ஹோத்திரம் செய்யும் போது சூரிய உதயம், சூரிய அஸ்தமனம் இதை முக்கியமாக கவனத்தில் வைத்துக் கொள்வார்கள்.

ஒரு கல்யாண வீட்டில் பொண்ணு வீட்டுக்காரர் மாப்பிள்ளை இப்ப என்ன செய்து கொண்டிருக்கிறார் என்று கேட்டார்கள். அக்னி ஹோத்திரம் செய்து கொண்டிருக்கிறார் அந்த அறையில் என்று சொன்னார்கள். அவர்களுக்கு மிகவும் பெருமை, சந்தோஷம் உடனே ஓடிப்போய் அந்த அறைய எட்டிப்பார்த்தார்கள் அவர்கள் சொன்னது உண்மை தான். அந்த மாப்பிள்ளை சிகரெட்டைப் பத்த வைத்து புகை விட்டுக் கொண்டிருந்தார்.



வடமராட்சி அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் தேர்த் திருவிழாவில் பெரும் திரளான பக்தர்கள் கலந்துகொண்டனர்.(படங்கள்:-மகாலிங்கம்)

### நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

# கந்தபுராண எழுச்சி விழா 14 ஆம் நாள் நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவகாலத்தை முன்னிட்டு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நிகழ்வுகள் வரிசையில், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற "கந்தபுராண எழுச்சி அருள்நெறி விழா - 2019" நிகழ்வின் பதின்நான்காம் நாள் வைபவம் இன்று மாலை 6.30 மணியளவில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் குரு முதல்வர், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் மற்றும் மயிலணி முத்துமாரியம்மன் ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ நா.சிவசங்கரக் குருக்கள் ஆகியோர் திருமுன்னிலை வகிக்க, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர், இ.கர்ஜின் தலைமையில், யாழ். பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடப் பதில் பீடாதிபதி கலாநிதி, திருமதி. சுகந்தினி முரளிதரன் பிரதம விருந்தினராகவும் யாழ்ப்பாணம், தேசியக் கல்வியியற் கல்லூரி, விரிவுரையாளர், மா. பிரபாகரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பிக்க நிகழ்வுகள் இடம்பெறும்.

யாழ்ப்பாணப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட ஸ்ரீ வதிரிபீட விநாயகர் அறநெறிப் பாடசாலை மற்றும் ஸ்ரீசந்திரசேகரப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் தெல்லிப்பழை யாழ்.யூனியன் கல்லூரி ஆசிரியர், சைவப் புலவர் ச.முகுந்தனின் "எந்தை அருளுண்டேல் எனக்கென்ன குறை?" எனும் தலைப்பிலான சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறும்.

சிறப்புச் சொற்பொழிவின் போது மாணவர்களிடையே சொற்பொழிவு தொடர்பான வினாக்கள் உள்ளடங்கிய வினாத்தாள் வழங்கப்பட்டுச் சிறப்புத் திறனை வெளிப்படுத்துவோர்க்குப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. உற்சவ காலப் பதின்நான்காம் நாள் நிகழ்வுகளின் சிறப்பு நிகழ்வாகக் கலாவித்தகர் திருமதி. வ.மங்கைலக்சுமியின் மாணவிகள் வழங்கும் "வயலினிசை" நிகழ்வும் இடம்பெறும். (இ-7)

## பஜனை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவகாலத்தை முன்னிட்டு இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நிகழ்வுகள் வரிசையில், நல்லூர், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் பஜனை நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. அந்தவகையில், இன்று பதின்நான்காம் நாள் உற்சவ தினத்தை முன்னிட்டு, நல்லூர் இந்து மாணவர் சேவாலய அறநெறிப் பாடசாலையினரின் பஜனை நிகழ்வு இடம்பெறும். (இ-7)


# இசையரங்கின் 14 ஆம் நாள் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி இலங்கை இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கின் 14 ஆம் நாள் நிகழ்வு இன்று திங்கட்கிழமை மாலை 6.45 மணி முதல் இரவு 8.15 மணி வரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம் பெறும்.

இன்று வாத்திய இசை, இசைக் கச்சேரி என இரு நிகழ்வுகள் இடம் பெறும்.

நல்லூர் சோமராகம் இசைமன்ற மாணவர்களின் வாத்திய இசையில் நெறியாள்கை - குமுதா உமாகாந்தன், இசைக்கச்சேரியில் பாட்டு - விக்னேஸ்வரி நரேந்திரா, வயலின் - அ.ஜெயராமன், மிருதங்கம் - ம.லோகேந்திரன், கெஞ்சிரா - ச.ஜெனில் சங்கர் ஆகியோரும் பங்கேற்பர். (இ-2)



நல்லூர் முருகன் உற்சவகாலத்தையொட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இளங்கலைஞர் மன்றம் நடத்திவரும் தெய்வீக இசையரங்கின் இரண்டாம் நாள் (07.08.2019) நிகழ்வில் தேவார இசைமணி தாவடியூர் கே.எஸ். ஆர்.திருஞானசம்பந்தன், க.சித்திரா ஆகியோர் பண்ணிசைக் கச்சேரி நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம்.




### கருணை காட்டிடுவாய் பெருமானே!

தீர்க்க விருப்புடன் திருமணம் நெருங்கிட
தரிசனம் புரிந்திடும் கன்னியரும்
நேர்த்தி செய்து நற்பதவி பெற்றிட
நித்தலும் வழிபடும் காளையரும்
தோத்திரப் பாடல்தனை தினந்தினம் பாடித்
துதித்திடும் மதிப்புறு முதியோரும்
கார்த்திகைத் திருநாளில் கந்தாவுனை வணங்குகின்றார்
கருணை காட்டிடுவாய் பெருமானே

*குளப்பிட்டி. க. அருமைநாயகம்*

### நல்லெயில் நல்லையிலென்னைக் கண்டேன்

மண்ணைக் கண்டேன் விண்ணைக் கண்டேன்
பண்ணைக் கண்டேன் பொன்னைக் கண்டேன்
தண்ணைக் கண்டேன் கண்ணைக் கண்டேன்
உன்னைக் கண்டேன் நல்லெயில்
நல்லையிலென்னைக் கண்டேன்.

*மருத்துவர்.*
*சி. யமுனானந்தா*

### மயில் வாகனா சரணம்

சரவணா உன்னடி சரணடைந்தோர்
சங்கடம் தீர்த்து வைத்திடுவாய்
சிறப்பான வேல் கொண்டே
சிக்கல்கள் தீர்த்து வைத்திடுவாய்

நல்லையின் கந்தனே சரணம்
நாளும் உன்னடி சரணம்
கார்த்திகை மைந்தனே சரணம்
கருணைக் கடலே சரணம்

*அரியாலை*
*கண்ணன்*

### நல்லாட்சி புரிந்திடையா வேலவனே

நகரின் நடுவினிலே நல்ல பதியாம்
நல்லூரிலே உறைபவனே
உலகமே அறியாத வியப்பு என்றால்
ஏற்ற தாழ்வு இல்லாத ஒரு ரூபாய் அர்ச்சனை
கண்களை கவர்ந்திழுக்கும் உன்னுடைய
அலங்கார வீதி உலா
அழகனே சண்முகப் பெருமானே
நாவலர் சைவம் வளர்த்த
புண்ணிய பூமியில் நல்லாட்சி புரிந்திடப்பா!
வேண்டும் வரம் தந்திடப்பா!
வேழமுகத்தான் தம்பியே!

*தே. சுதன்*
*வெட்டிலைப்பாய், கோண்டாவில்.*

### சந்தக் கவியில் நல்லைக் குமரன்!

அவ்வை யறி வாற்றல் நெறி
அவனிக் குணர் வித்தாய்
செவ்வை மிகு செய்யுட் தொகு
செப்பும் அழ தொப்பும்
அவ்வா றுன தருளி மைகள்
அறிவா ரறி வாரே
நவ்விக் கவி நயக்குஞ் செவி
நல்லைக் கும ரோனே!

*கலாபூஷணம்,*
*சந்தக்கவிஞர். நவ. பாலகோபால்*

# அரச காணிச் சட்டங்களின் கீழ் மக்களுக்கு காணி பகிர்ந்தளிக்கப்படுதல் சம்பந்தமான கேள்வி பதில்கள்

01

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



மக்கள் அறிந்திருக்க வேண்டியதும் மக்களால் அடிக்கடி கேட்கப்படும் வினாக்களென காணி ஆணையாளர் நாயகத்தின் அலுவலகத்தினால் அடையாளம் காணப்பட்டு அவர்களினால் அளிக்கப்பட்ட பதில்களை அடிப்படையாகக் கொண்டு இக் கேள்வி பதில் தயாரிக்கப்பட்டுள்ளது. இங்கு வரும் சில கேள்விகளுக்கு எனது முன்னைய கட்டுரைகளில் பதில் அளிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

**கேள்வி-1:-** பொது மக்களுக்கு அரச காணிகள் என்னென்ன சட்டங்களின் கீழ் பகிர்ந்தளிக்கப்படுகின்றன?

**பதில்:-**

1. காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டம் - 1935இன் இல. 19
2. அரச (முடிக்குரிய) காணிக்கட்டளைச்சட்டம் - 1947இல் இல. 08
3. காணிகள் அளிப்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டம் - 1979இன் இல 43
4. காணிச் சீர்திருத்தச் சட்டம் -1972இன் இல.1

ஆகிய காணிச் சட்டங்களின் கீழ் பகிர்ந்தளிக்கப்படுகின்றன

**கேள்வி-2:-** மேற்கூறிய சட்டங்களின் கீழ் காணிகள் எவ்வாறு பகிர்ந்தளிக்கப்படுகின்றன?

**பதில்:-**

1. காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்டம் - 1935இன் இல. 19ன் கீழ் அனுமதிப்பத்திர **(permit)** முறையிலும் அளிப்புப்பத்திரம் **(grant)** முறையிலும் அரச காணிகள் பிரதேச செயலாளர் அலுவலகம் ஊடாக பகிர்ந்தளிக்கப்படுகின்றன.
2. அரச (முடிக்குரிய) காணிக்கட்டளைச்சட்டம் - 1947இல் இல.08இன் கீழ் அனுமதிப் பத்திர **(permit)** முறையிலும் அளிப்புப்பத்திரம் **(grant)** மற்றும் குத்தகை முறையிலும் அரச காணிகள் பிரதேச செயலாளர் அலுவலகம் ஊடாக பகிர்ந்தளிக்கப்படுகின்றன.
3. காணிகள் அளிப்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டம் - 1979இன் இல 43 இன் கீழ் அளிப்புப்பத்திரம் **(grant)** முறையில் அரச காணிகள் பிரதேச செயலாளர் அலுவலகம் ஊடாக பகிர்ந்தளிக்கப்படுகின்றன.
4. காணிச் சீர்திருத்தச் சட்டம் -1972இன் இல.1இன் கீழ் காணிச் சீர்திருத்த ஆணைக் குழுவுக்குச் சொந்தமான காணிகள் **(LRC land)** விற்பனை **(sale)** மற்றும் குத்தகை மூலம் பொது மக்களுக்கு காணிச் சீர்திருத்த ஆணைக்குழு ஊடாக பகிர்ந்தளிக்கப்படுகின்றன.

**கேள்வி-3:-** காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் எத்தேவைகளுக்கு அரச காணிகள் வழங்கப்படுகிறது?

பிரதான குடியேற்றத் திட்டங்களுக்குக் கிராம விரிவாக்கத் திட்டங்களுக்கு மேட்டுநிலத் திட்டங்களுக்கு (படித்த) வாலிபர்களின் குடியேற்றத் திட்டங்களுக்கு மத்தியதர வகுப்பு மக்களை குடி யேற்றுவதற்கு.

**கேள்வி-4:-** அரச (முடிக்குரிய) காணிக்கட்டளைச் சட்டத்தின் கீழ் எத் தேவைகளுக்கு அரச காணிகள் வழங்கப்படுகிறது?

வியாபார நடவடிக்கைகளுக்கு கைத்தொழில் நடவடிக்கைகளுக்கு பெரியளவிலான கமத்தொழில் நடவடிக்கைகளுக்கு மத்தியதர வகுப்பினரின் வீட்டுத் திட்டங்களுக்கு அரச நிறுவனங்களின் தேவைகளுக்கு பதிவுசெய்யப்பட்ட சங்கங்கள் மற்றும் சமாசங்களுக்கு மற்றும் புனித/புண்ணிய தலங்களுக்கு. இச் சட்டத்தின் கீழ் காணிகள் குத்தகைக்கு வழங்குவது பற்றி முன்னர் ஒரு கட்டுரையில் பார்த்தோம்.

**கேள்வி-5:-** பெறப்பட்ட அனுமதிப் பத்திரம் **(permit)** தொலைந்தால் அதன் பிரதிகளை எங்கே பெற்றுக் கொள்ள முடியும்?

**பதில்:-** பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும். அனுமதிப் பத்திரத்தினை எந்தவொருவிடத்திலும் பெறமுடியாதவிடத்து நீங்கள் காணிக்கான கொடுப்பனவு செய்திருந்தால் அந்த பற்றுச்சீட்டுகளைக்காட்டி புதிய அனுமதிப் பத்திரத்தை தரும்படி பிரதேச செயலாளரிடம் கேட்கலாம். சில சந்தர்ப்பங்களில் அளிப்புப்பத்திரம் **(grant)** வழங்கும் நோக்குடன் நில அளவைத்திணைக்களத்தினால் அக் காணி அளக்கப்பட்டிருக்கும். எனவே மாவட்ட நில அளவை அலுவலகத்தில் உங்களுக்கான காணி அளக்கப்பட்டுள்ளதா? என்பதைத் தெரிந்து கொள்ளலாம். அக் காணி அளக்கப்பட்டிருப்பின் அதுபற்றி பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு தெரியப்படுத்தி அனுமதிப் பத்திரத்தை பெற நடவடிக்கை எடுக்கலாம்.

**கேள்வி-6:-** பெறப்பட்ட உறுதிப்பத்திரம் (அளிப்புப் பத்திரம்-**grant**) தொலைந்தால் அதன் பிரதிகளை எங்கே பெற்றுக்கொள்ள முடியும்?

**பதில்:-** மாவட்ட காணிப்பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும். அளிப்புப்பத்திரத்தினை எந்தவொருவிடத்திலும் பெறமுடியாதவிடத்து நில அளவைத் திணைக்களத்தினால் அக் காணிக்குரிய படம் இருக்கும். அப்படத்தின் பிரதியைப்பெற்று அதுபற்றி பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு தெரியப்படுத்தி புதிய அளிப்புப் பத்திரத்தை பெற நடவடிக்கை எடுக்கலாம்.

**கேள்வி-7:-** காணி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் எவ்வாறு வசிப்பதற்கு காணி ஒன்றினைப் பெற்றுக் கொள்வது ?

**பதில்:-** தாம் வசிக்கும் பிரதேச செயலாளர் காரியாலயத்திற்குச் சென்று பிரதேச செயலாளரைச் சந்தித்து தமது வேண்டுகோளினை எழுத்து மூலம் சமர்ப்பியுங்கள். காணி இல்லாதவர்களைப் பதிவு செய்யும் சந்தர்ப்பத்தில் மாதிரி விண்ணபப்படிவத்தினைப் பெற்றுக்கொடுப்பதன் மூலம் காணிக் கச்சேரி நடைபெறும் சந்தர்ப்பத்தில் முன்தோன்றி தகைமைபெற இடம் கிடைக்கும். இதற்குரிய நடபடிகள் படம்-1 இல் காட்டப்பட்டுள்ளது.

படம்-1
அனுமதிப்பத்திரம் வழங்கும் முறை

| |
|---|
| பிரதேச செயலாளர் விண்ணப்பங்களைக் கோரி அறிவித்தலை வெளியிடல் |
| ↓ |
| விண்ணப்பங்களைப் பெறல் |
| ↓ |
| தற்காலிகமாகத் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் பட்டியலை வெளியிடல் |
| ↓ |
| ஏதும் ஆட்சேபனைகள் இருப்பின் அவற்றைப் பெறல் |
| ↓ |
| தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் இறுதிப் பட்டியலை |
| ↓ |
| விசாரணைகளும் மேன்முறையீடும் |
| ↓ |
| தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் இறுதிப் பட்டியலைத் தயாரித்து வெளியிடல் |
| ↓ |
| அனுமதிப்பத்திரம் வழங்கல் |

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் 02 வகையான காணி வழங்கப்படுகிறது.

1. காணித்துண்டு எதுவுமற்றவர்களுக்கு காணி வழங்கல்.
2. அரச காணியில் ஆட்சியை கொண்டிருப்போருக்கு அக் காணியை வழங்கல்.

**கேள்வி-8:-** ஒருவர் நீண்ட காலமாக அரசகாணி ஒன்றில் வசித்துவந்தாராயின் அவர் அக்காணிக்கு உரிமைகோர **(prescribe)** முடியுமா?

**பதில்:-** இல்லை. எந்தவொரு அரசகாணிக்கும் அதில் வசித்ததைகாட்டி அக் காணியின் அறுதிஉரிமை **(prescriptive right)** கோரமுடியாது. ஒரு தனியார் காணிக்கு அவ்வாறில்லை. பொதுவாக ஒருவர் ஒரு தனியார் காணியில் தொடர்ந்து 10 வருடங்கள் வசித்து வந்தாராயின் அக் காணிக்கு அவர் அறுதி உரிமை **(prescriptive right)** கோரமுடியும். அதுபற்றி ஆட்சியுரிமைச் சட்டம் 1872ஆம் ஆண்டின் இல.22 **(Prescription Ordinance)** இல் கூறப்பட்டுள்ளது. தனியார் காணி ஒன்றை ஒருவர் இன்னுமொருவரின் இடையீடின்றியும் தடையின்றியும் எதிர் உரித்துக் கொண்டு தனது உடைமையில் 10 வருடம் வைத்திருந்தால் அந்த தனியார் காணியின் உரித்தாளராக அவர் கொள்ளப்படுவார் என ஆட்சியுரிமை சட்டம் கூறுகிறது. இதற்கு சில தேவைப்பாடுகளும் உள்ளன. ஆயினும் பொதுவாக 10. வருடகாலம் தங்குதடையின்றி எதிர் உரித்துக் கொண்டு அவ்வாதனத்தை அவர் வைத்திருக்க வேண்டும். மற்றவர்களின் கண்ணுக்கு இவர் தான் உரிமையாளர் என்ற அபிப்பிராயத்தை உண்டாக்க வேண்டும். இதற்கு சில மட்டுப்பாடுகள் உண்டு என்பதை மறந்துவிடக் கூடாது. மற்றைய பரந்த கொள்கையையும் இது கொண்டது.

இது அரச காணிக்கு பொருந்தாது. இது பற்றி அரச (முடிக்குரிய) காணிக்கட்டளைச்சட்டம் பிரிவு 103இல் கூறப்பட்டுள்ளது. அரசகாணி எவை என்பது முன்னைய கட்டுரை ஒன்றில் எழுதப்பட்டிருந்தது. ஆனால் ஒருவர் அரச காணியில் தொடர்ந்து 30 வருடங்களுக்கு மேல் வசித்து வந்தாராயின் அவர் அக் காணியைப்பெற தகுதியுடையவராகக் கருதப்படுவார். இது சம்பந்தமாக இன்னுமொரு சுற்றறிக்கையும் உள்ளது. அதன்படி பின்வரும் சந்தர்ப்பங்களில் அக் காணி உங்களுக்கு வழங்கப்படும்.

- ❖ நீங்கள் இலங்கையராக இருக்கவேண்டும்.
- ❖ நீங்கள் அக் காணியில் 1995-06-15 திகதிக்கு முன்னிருந்து குடியிருந்திருக்கவேண்டும்.
- ❖ உங்கள் குடும்பத்திற்கு வேறொரு காணி இல்லாமல் இருக்கவேண்டும்.
- ❖ நீங்கள் திருமணம் செய்யாதவராயின் உங்கள் வருடாந்த வருமானம் ரூபா 72,000/= குறைவாக இருக்கவேண்டும்.
- ❖ நீங்கள் திருமணம் செய்தவராயின் உங்கள் குடும்ப வருடாந்த வருமானம் ரூபா 144,000/= குறைவாக இருக்கவேண்டும். **(தொடரும்...)**

# ஆவணி மாத இராசி பலன்கள்

## 18.08.2019 - 17.09.2019

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

## வரவைவிட செலவு கூடும்



விகாரி வருடம் ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன் இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எனவே பணவரவு திருப்தி தரும் என்றாலும், புதன் கொஞ்சம் வலிமை இழந்திருப்பதால் செலவுகளும் வந்து கொண்டேயிருக்கும். தெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள். 'சில காரியங்கள் இன்னும் நடைபெறாமல் இருக்கிறதே' என்ற கவலை மேலோங்கும். வேலைப்பளு அதிகரிக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு கெடுபிடியால் மனதில் பயம் உருவாகும். என்னதான் நீங்கள் சிறப்பாக பணி புரிந்தாலும் மேலிடத்தில் இருந்து பாராட்டு கிடைப்பது அரிது. எல்லாவற்றுக்கும் அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம்தான் காரணம்.

உங்கள் இராசிக்கு 12 ஆம் இடத்தில் சூரியன், சுக்கிரன், செவ்வாய் ஆகிய மூன்று கிரகங்களும் சஞ்சரிக்கின்றன. எனவே விரய ஸ்தானம் பலமடைகின்றது. விரயங்கள் ஏற்படாது என்றாலும் எதையும் திட்டமிட்டுச் செய்வது நல்லது. பஞ்சாயத்துக்கள் இழுபறி நிலையில் இருக்கும். சனிப்பெயர்ச்சி வரை கொஞ்சம் பொறுமையாக இருப்பது நல்லது.

பொதுவாக சனியின் ஆதிக்கத்தில் இருந்து விடுபட வேண்டுமானால், ஒவ்வொரு சனிக்கிழமையும் விரதமிருந்து சனி கவசம்பாடி சனிபகவானை வழிபடுவது நல்லது. அதுமட்டுமல்லாமல் விநாயகப் பெருமானையும் அனுமனையும் விடாது வழிபட்டு வரவேண்டும். உறவினர்களையும் அருகில் இருப்பவர்களையும் அனுசரித்துக் கொள்ள வேண்டும். இதுபோன்ற காலங்களில் பொறுமையும் நிதானமும் தேவை. புதிய முயற்சிகளில் ஈடுபடும் பொழுது, குடும்பப் பெரியவர்களையோ அல்லது சான்றோர் களிடமோ ஆலோசனைகள் கேட்டுச் செய்வது நல்லது.

சுக ஸ்தானத்தில் சனியோடு கேதுவும் இருக்கிறார். எனவே ஆன்மீகப் பயணங்கள் அதிகரிக்கும். குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவதில் மும்முரம் காட்டுவீர்கள். 'குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்' என்ற எண்ணம் மனதில் உருவாகும். சுபவிரயங்கள் அதிகரிக்கும். வீடு வாங்கும் முயற்சி, சொத்துக்கள் வாங்கும் முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் வலுவடைவதால், எதைச் செய்தாலும் கொஞ்சம் சிந்தித்துச் செய்வது நல்லது. சிறந்த நபர்களின் வழி காட்டுதல் மூலம் மனநிம்மதி கிடைக்கும்.

இம்மாதம் ஆவணி சதுர்த்தியில் ஆனை முகப்பெருமானை வழிபாடு செய்வதோடு, சுயஜாதக ரீதியாக திசாபுத்திக்கேற்ற சிறப்பு வழிபாடுகளையும் மேற்கொள்வது நல்லது.

**சிம்ம புதனும் கன்னி புதனும்**

ஓகஸ்ட் 21 ஆம் திகதி சிம்ம இராசிக்கு புதன் செல்கிறார். இராசிநாதன் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது விரயங்கள் அதிகரிக்கும். வீடு மாற்றங்களும் நாடு மாற்றங்களும் உத்தியோக மாற்றங்களும் எதிர்பாராத விதத்தில் வந்து சேரலாம். வரும் மாற்றங்களை ஏற்றுக் கொள்ளக்கூடிய நிர்ப்பந்தம் உருவாகும். அதேவேளையில் எந்த மாற்றம் வந்தாலும் அது உங்களுக்கு திருப்தியாக இருக்காது. மாமன், மைத்துனர் வழியில் ஏற்படும் சுப காரியங்களுக்கு பண உதவி செய்வீர்கள். பயணங்களால் அலைச்சல் அதிகரிக்கும்.

செப்டெம்பர் 7 ஆம் திகதி கன்னி இராசியில் புதன் உச்சம் பெறுகிறார். உங்கள் இராசியிலேயே புதன் உச்சம் பெறுவது நல்ல நேரமாகும். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். பணியில் இருந்த தொய்வு அகலும். செய் தொழிலில் வேலையாட்களால் ஏற்பட்ட பிரச்சினை குறையும்.



**கன்னி**

உத்திரம் 2,3,4-ம் பாதம், அஸ்தம், சித்திரை 1,2-ம் பாதம்

**சனி வக்கிர நிவர்த்தி**

இதுவரை 4 ஆம் இடத்தில் அர்த்தாஷ்டமச் சனியாக சஞ்சரித்து வந்த சனிபகவான், வக்கிர இயக்கத்தில் இருந்தார். செப்டெம்பர் 2 ஆம் திகதி அவர் வக்கிர நிவர்த்தியாகி பலம் பெறுவதால், நீங்கள் கூடுதல் கவனத்தோடு செயற்பட வேண்டும். குறிப்பாக ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். அடுத்தவர்களுக்கு நீங்கள் செய்யும் உதவிக்கு நன்றி காட்டமாட்டார்கள். கொடுக்கல்-வாங்கலில் ஏமாற்றங்களை சந்திப்பீர்கள். வழக்குகள் உங்களுக்கு சாதகமாக அமையாது. எனவே இதுபோன்ற காலங்களில் சனிக்குரிய பிரீதிகளைச் செய்து கொண்டே இருக்க வேண்டும்.

**சுக்கிரன் நீச்ச சஞ்சாரம்**

செப்டெம்பர் 10 ஆம் திகதி கன்னி இராசிக்கு செல்லும் சுக்கிரன், அங்கு நீச்சம் பெறுகிறார். 2, 9 இற்கு அதிபதியான சுக்கிரன் நீச்சம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. குடும்பத்தில் குழப்பங்கள் அதிகரிக்கும். நண்பர்களின் ஆதரவு குறையும். அடுத்தவர்களுக்கு உதவி செய்யப் போய் அது உபத்திரவத்தில் முடியலாம். கல் யாண முயற்சிகளில் தாமதங்கள் ஏற்படும். 'சரியில்லாத வரன்கள் வருகின்றதே' என்று சங்கடப்படுவீர்கள். விலை உயர்ந்த பொருட்களை விற்க நேரிடும். உச்சம் பெற்ற புதனோடு சுக்கிரன் இணைந்து நீச்ச பங்க இராஜயோகத்தை உருவாக்குவதால் காரியங்கள் எப்படியாவது கைகூடிவிடும்.

இம்மாதம் சூரியபலம் குறைவதால் சிவனையும் உமையவளையும் ஞாயிற்றுக் கிழமை தோறும் வழிபட்டு வருவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

இம்மாதம் விரயங்கள் அதிகரிக்கும். வீடு மாற்றமும் இடமாற்றமும் வந்து சேரலாம். எதையும் பலமுறை யோசித்துச் செய்தால் நன்மை கிடைக்கும். கூட்டுப் பிரார்த்தனைகளில் ஆர்வம் காட்டுவீர்கள். கொடுக்கல்-வாங்கலில் திருப்தி ஏற்படும் என்றாலும் ஒரு சில சமயங்களில் திடீர் விரயங்களையும் சந்திக்க வேண்டியதிருக்கும்.

'பிள்ளைகளின் கல்யாண வாய்ப்புகள் கைநழுவிச் செல்கின்றதே' என்று கவலைப் படுவீர்கள். கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை பலப்பட விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. அர்த்தாஷ்டமச் சனி வலுவடைவதால் நீங்கள் செய்யும் முயற்சிகளில் ஆதாயம் குறைவாகவே கிடை க்கும். அலைச்சல் கூடும். பிள்ளைகளின் சுபகாரியப் பேச்சுக்களை எளிதில் முடிக்க இயலாது. தாய் மற்றும் சகோதரர்களின் வழியில் ஓரளவே ஒத்துழைப்பு கிடைக்கும். சக ஊழியர்களால் தொல்லை வரலாம் என்பதால், பணி புரியும் பெண்கள் கவனத்துடன் செயற்படுங்கள். சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாடு செய்வது மனச்சஞ்சலம் தீர்க்கும்.

## இழப்புகளை ஈடுசெய்யும் நேரம்



விகாரி வருடம் ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்கிரன் இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். அவரோடு செவ்வாய், சூரியன் ஆகிய இரண்டு கிரகங்கள் சேர்ந்து இருக்கின்றன. தன சப்தமாதிபதியான செவ்வாயும், இலாபாதிபதியான சூரியனும் இணைந்திருக்கும் பொழுது, பொருளாதாரப் பற்றாக்குறை ஏற்படாது. சென்ற மாதத்தைக் காட்டிலும் பொருளாதாரம் சிறப்பாக இருக்கும். தொழிலில் எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதல் இலாபம் கிடைக்கும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். சென்ற மாதத்தில் ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்ய முன்வருவீர்கள்.

இரண்டிலே குரு வீற்றிருந்து உங்கள் இராசிக்கு 6, 8, 10 ஆகிய இடங்களைப் பார்க்கிறார். எதிர்ப்பு, வியாதி, கடன் ஆகியவற்றைக் குறிக்கும் 6 ஆம் இடம் புனிதமடைவதால், எதிரிகளின் தொல்லை குறையும். படிப்படியாக முன்னேற்றப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள். வழக்குகள் உங்களுக்கு சாதகமாக மாறும். சண்டை போட்டவர்கள் சமாதானம் ஆவர். அருகில் உள்ளவர்களின் ஆதரவு கூடும். மக்கள் செல்வாக்கு மேலோங்கும். சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்து படைத்தவர்களின் ஒத்துழைப்போடு திருப்பங்களைக் காண்பீர்கள்.

மூன்றாம் இடத்தில் சனியோடு கேது சஞ்சரிக்கிறார். 9 ஆம் இடத்தில் இராகு சஞ்சரிக்கிறார். 9 இல் இராகு சஞ்சரிக்கும் போது ஒளிமயமான எதிர்காலத்திற்கு வழிகோலும். தந்தை வழி உறவில் இருந்த விரிசல் மாறும். பூர்வீக சொத்துக்களில் நீண்ட நாட்களாக நடைபெறாத பாகப்பிரிவினைகள் இப்பொழுது நடைபெற்று மகிழ்ச்சியை வழங்கும். பங்காளிப் பகை மாறும். ஆன்மீகப் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். எதிர்பாராத தனலாபங்கள் இல்லம் தேடி வரும். முக்கியப் புள்ளிகளின் ஒத்துழைப்போடு, முன்னேற்றம் காண எடுத்த முயற்சி வெற்றி பெறும்.

சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனி பகவான், இம்மாதம் வக்கிர நிவர்த்தியாவதால் எதை எதிர்பார்த்து காத்திருந்தீர்களோ அது நடைபெறும். வீடு கட்டும் முயற்சி அல்லது வாங்கும் முயற்சியில் இதுவரை எண்ணற்ற தடைகள் ஏற்பட்டிருக்கலாம். இப்பொழுது வக்கிர நிவர்த்தியான குரு பகவான் குடும்ப ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் நினைத்தபடியே இல்லம் அமைதியாக நடைபெறும். புதிய இடமாற்றத்தின் மூலம் பொருளாதார நிலை உயரும்.

இம்மாதம் ஆவணிச் சதுர்த்தியில் ஆனைமுகப் பெருமானையும் தெற்கு நோக்கிய அம்பிகையையும் வழிபாடு செய்து வருவது நல்லது.

**சிம்ம புதனும் கன்னி புதனும்**

ஓகஸ்ட் 21 ஆம் திகதி சிம்ம இராசிக்கு புதன் வருகிறார். இதன் விளைவாக உங்களுக்கு சில நல்ல மாற்றங்கள் ஏற்படப் போகிறது. 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான்வர் புதன் இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, தேவைக்கேற்ற பணம் வந்து கொண்டேயிருக்கும். உத்தியோக மாற்றங்கள் ஒரு சிலருக்கு உறுதியாகலாம். செப்டெம்பர் 7 ஆம் திகதி கன்னி இராசிக்கு புதன் வந்து உச்சம் பெறுகிறார். இதன்விளைவாக விரயங்கள் கூடும். பிள்ளைகளின் கல்யாண வாய்ப்புகள் கைகூடும். அவர்கள் வெளிநாடு சென்று படிக்க விரும்பினால் அதற்காகச் செலவிடும் சூழ்நிலை உருவாகும். முன்னோர்கள் கட்டிய ஆலயத் திருப்பணிகளை முறையாகச் செய்யும் வாய்ப்பு கிடைக்கும்.



**துலாம்**

சித்திரை 3,4-ம் பாதம் சுவாதி, விசாகம் 1,2,3-ம் பாதம்

**சனி வக்கிர நிவர்த்தி**

தனுசு இராசியில் சஞ்சரித்து வரும் சனி பகவான், வக்கிர இயக்கத்தில் இருந்து வருகிறார். அவர் செப்டெம்பர் 2 ஆம் திகதி அன்று வக்கிர நிவர்த்தியாகிறார். அதன் பிறகு உங்களின் வளர்ச்சியில் இருந்த தளர்ச்சிகள் அனைத்தும் விலகும். உழைப்பிற்கேற்ற பலன் உறுதியாகக் கிடைக்கும். நாட்டுப்பற்று மிக்கவர்களின் நல் ஆதரவோடு கூட்டு முயற்சியில் வெற்றி காண்பீர்கள். விலகிச் சென்ற உடன்பிறப்புகள் விரும்பி வந்திணைவர். நிலையான வருமானத்திற்கு வழிபிறக்கும். சம்பள உயர்வு, பதவி உயர்வு போன்றவை வந்து மனதைக் குளிர வைக்கும். ஆரோக்கி யத்திற்காக செலவிட்டு வந்த தொகை இனி குறையும். செய்தொழிலை விரிவாக்கம் செய்ய எதிர்பார்த்த இடத்தில் இருந்து தொகை கிடைக்கும்.

**சுக்கிரன் நீச்ச சஞ்சாரம்**

செப்டெம்பர் 10 ஆம் திகதி கன்னி இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். அஷ்டமாதிபதியான சுக்கிரன் நீச்சம் பெறும் பொழுது, மிகுந்த நற்பலனைக் கொடுக்கும். எதிரிகள் விலகுவர். தொழில் முன்னேற்றம் உண்டு. இலாபம் இருமடங்காக உயரும். திட்டமிட்ட காரியங்களை திட்டமிட்டபடியே செய்து முடிப்பீர்கள். குடும்ப ஒற்றுமை சிறப்பாக இருக்கும். பணியாளர்களின் தொல்லை அகலும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். புகழ் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக இருந்து நல்ல காரியங்களை முடித்துக் கொடுப்பர்.

இம்மாதம் சனிக்கிழமை தோறும் விநாயகப் பெருமானையும் அனுமனையும் வழிபட்டு வருவது நல்லது.

**பெண்களுக்கான பலன்கள்**

மகிழ்ச்சி அதிகரிக்கும் மாதம் இது. வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். உடல்நலம் சீராகி, உங்களை உற்சாகப்படுத்தும். குடும்ப ஒற்றுமை பலப்படும். கணவன் - மனைவிக்குள் அன்பும் பாசமும் அதிகரிக்கும். பிள்ளைகளால் பெருமை சேரும். தாய் மற்றும் சகோதர வழியில் ஆதரவு திருப்தி தரும். பணப் பற்றாக்குறை அகலும். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

வெளிநாடு சென்று பணிபுரிய அழைப்புகள் வரலாம். 'வாங்கிய சொத்துக்களை விற்றுவிட்டோமே' என்று கவலைப் பட்டவர்களுக்கு மீண்டும் சொத்துக்கள் வாங்கும் வாய்ப்பு அமை யும். பணி புரியும் பெண்களுக்கு மேலிட த்து ஆதரவு கிடைக்கலாம். சக பணியாளர்களின் ஒத்துழைப்பும் உண்டு. செவ்வாய்க்கிழமை தோறும் முருகப்பெருமானை வழிபடுவதன் மூலம் முன்னேற்றமான வாழ்க்கை அமைத்துக் கொள்ள முடியும்.

(தொடரும்)

# ஜனாதிபதித் தேர்தல் முடியும் வரை இலங்கையுடனான பேச்சுக்கள் நிறுத்தம்

## அமெரிக்கத் தூதுவர் வெளிப்படுத்தல்

**(கொழும்பு)**

**ஜனாதிபதித் தேர்தல் முடியும் வரை, இலங்கையுடனான சர்ச்சைக்குரிய சோபா உடன்பாடு குறித்த பேச்சுக்களை நிறுத்தி வைப்பதாக, அமெரிக்கத் தூதுவர் அலைனா ரெப்லிட்ஸ், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடனான சந்திப்பின் போது, தமது நாட்டின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தினார்.**



ஜனாதிபதியைச் சந்திக்க அமெரிக்கத் தூதுவர் சில வாரங்களுக்கு முன்னரே, விருப்பம் வெளியிட்டிருந்தார். எனினும், அத்தகைய சந்திப்பு சாத்தியமில்லை என்று ஜனாதிபதி வருத்தம் தெரிவித்திருந்தார்.

அத்துடன், மிலேனியம் சவால் நிதியத்தின் 480 மில்லியன் அமெரிக்க டொலர் உதவித் தொகையைப் பெறுவதற்கான காலஅவகாசம் இப்போது முடிந்து விட்டது என்றும், அமெரிக்கத் தூதுவர் ரெப்லிட்ஸ், ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

இந்த விடயத்தைப் பற்றி விவாதிப்பதற்கான இலங்கையின் உரிமையை மதிப்பதாகவும், அவர் ஜனாதிபதி மைத்திரியிடம் கூறினார்.

சோபா உடன்பாட்டில் தனது ஒப்புதலின்றிக் "கையெழுத்திட முடியாது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னர் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இலங்கைக்கான புதிய அமெரிக்கத் துணைத் தூதுவரை அறிமுகப்படுத்துவதற்காக, தூதுவர் அலைனா ரெப்லிட்ஸ், ஜனாதிபதியுடன் மற்றொரு சந்திப்புக்கு அனுமதி கோரியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஐ.தே.க. தனிநபருடையது அல்ல; சஜித்தையே மக்கள் கேட்கின்றனர்

## வசந்த சுட்டிக்காட்டு



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியென்பது தனிநபருடையது அல்ல என்று நாடாளுமன்ற உறுப்பினர் வசந்த சேனநாயக்க தெரிவித்தார். பொலநறுவையில் நேற்று இடம்பெற்ற பேரணியொன்றில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மக்கள் சஜித் பிரேமதாஸவையே கேட்கிறார்கள். ஆனால் கட்சிக்குள் உள்ள சிலர் அது விளங்காதது போல இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு நான் இதைச் சொல்ல விரும்புகிறேன். எமது கட்சியின் ஆதரவாளர்கள் எதை விரும்புகிறார்களோ, அதை சரியாகவோ அல்லது மோசமான முறையிலோ பெறுவதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம்.

ஒரு சமயத்தில் கிராமப்புற மக்கள் கொழும்பு 7 ஐ பாதுகாத்தார்கள், ஆனால் இன்று சஜித் பிரேமதாஸவை வேட்பாளராக நிறுத்தாவிட்டால், அதே மக்கள் கொழும்பு 7 ஐ தூக்கி எறியவும் தயங்க மாட்டார்களென அவர் தெரிவித்தார். ஒரு கட்சி என்பது ஆதரவாளர்களுக்கு சொந்தமானது. தனி மனிதர்களுக்கு அல்லவெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# குடிநீர் கோரி வீதியில் மக்கள்



(காலி)

காலி-கொழும்பு பிரதான வீதியை மஹஇந்துருவ பிரதேசத்தில் முழுமையாக வழிமறித்து பிரதேசவாசிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். 30 ஆண்டுகளுக்கும் மேலாக குடிநீரை வழங்குவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை எனக் குற்றம் சாட்டி அவர்கள் இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ஜ)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1806

Search for people, places and things

### சுபாங்கி

**ஆறுதல் இல்லாமல் அழுது முடித்த பின் வரும் தன்னம்பிக்கை மிகப்பெரியது**




### விநுஜன்

**வார்த்தைகளில் வலிமை குறைந்துவிட்டால் பேசும் உறவுடன் உரிமையை இழந்துவிட்டோம் என்றே அர்த்தம்**



### ராம்

**இன்பத்திலும் துன்பத்திலும் நீங்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய ஒரு உண்மை... இந்த நிமிடம்கூட நிரந்தரமில்லை**



### ஸ்வேதா

**எல்லோரும் தனக்கு ஓர் இதயம் இருக்கிறது என்பதை உணர்வதே யாரோ ஒருவரின் அன்பை ரசிக்க ஆரம்பிக்கும் போதுதான்...**



### தீபிகா

**இந்தப் பூமிக்கு இன்னொரு உயிரைக் கொண்டு வர தன்னுயிரைப் பணயம் வைக்கும் பெண்மையின் தைரியத்திற்கு பெயர் தாய்மை**




### அபி

**ஒவ்வொரு பறவைக்கும் அதற்குத் தேவையான உணவை இறைவன் கொடுக்கிறான்... ஆனால் உணவை அதன் கூட்டுக்குள் வைப்பதில்லை**



**நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.**

# தேசிய இளைஞர் சேவை மன்றப் பணிப்பாளர் ஐ.தே.கவின் தொகுதி அமைப்பாளராக நியமனம்



(கொழும்பு)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் பணிப்பாளர் நாயகம் எரந்த வெலிஅங்ககே ஐக்கிய தேசியக் கட்சியின் ஹோமாகம தொகுதி அமைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் அவருக்கான நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் ஹோமாகம அமைப்பாளர் பதவி கிடைக்கப் பெற்றதன் பின்னர், ஹோமாகம அபிவிருத்திக்கான இணைப்புக் குழுவின் தலைமைப் பதவியையும் ஜனாதிபதி அவருக்கு வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஐ)

# பௌத்த தேரர்களிடம் ஆசிபெறும் கோத்தா



(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள கோத்தபாய ராஜபக்ஷ, தொடர் வழிபாடுகளில் ஈடுபட்டுள்ளார்.

கடந்த 11 ஆம் திகதி கொழும்பில் வேட்பாளராக அறிவிக்கப்பட்டவுடன் களனி ரஜமகா விகாரையில் வழிபாடுகளை ஆரம்பித்த அவர், அடுத்த நாள் அநுராதபுரத்திற்குச் சென்று பல்வேறு பௌத்த விகாரைகளில் வழிபாடுகளை நடத்தினார்.

அதன் பின்னர், கண்டியில் உள்ள பௌத்த விகாரைகளில் வழிபாடுகளை மேற்கொண்டு வருவதுடன், மகாநாயக்க தேரர்களையும் முக்கியமான பௌத்த விகாராதிபதிகளையும் சந்தித்து ஆசி பெற்று வருகிறார்.

நேற்று முன்தினம் பேராதனை கெட்டம்பே விகாரைக்குச் சென்றிருந்த கோத்தபாய ராஜபக்ஷ, அதன் விகாராதிபதியான கெட்டம்பே ரஜோபாவனராமாதிபதி வண. கெப்பிட்டியாகொட சிறி விமல நாயக்க தேரரின் முன்னிலையில் வழிபட்டு, அவரது ஆசியையும் ஆலோசனைகளையும் பெற்றுக் கொண்டார்.

கோத்தபாய ராஜபக்ஷவுடன் மகிந்த ராஜபக்ஷவும் இந்த வழிபாடுகளில் பங்கேற்று வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பீடாதிபதிகள்,அதிபர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(கொழும்பு)

தேசிய கல்வியியற் கல்லூரிகள் மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளுக்கான பீடாதிபதிகள் மற்றும் அதிபர்களுக்கான விண்ணப்பங்களை கல்வியமைச்சு கோரியுள்ளது.

இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் 3 வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைந்து தரம் ஒன்றிற்கு பதவியுயர்வு வழங்கப்பட்ட உத்தியோகத்தர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

தமிழ்மொழி மூலமான கல்வியியற் கல்லூரிகள் மற்றும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளுக்குமே இவ்விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதன்படி கல்வியியற் கல்லூரி பீடாதிபதிகளுக்கான 6 வெற்றிடங்களும் உப பீடாதிபதிகளுக்கான வெற்றிடங்கள் 17 உம், ஆசிரியர் கலாசாலை அதிபர் வெற்றிடங்கள் 3 இற்குமான விண்ணப்பங்களே தற்போது கோரப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் எம்.என். ரணசிங்க தெரிவித்தார்.

வவுனியா- ஸ்ரீபாத கல்விக் கல்லூரி, யாழ்ப்பாணம், தாழங்குடா, தர்கா நகர் ஆகியவைகளுக்கான பீடாதிபதிகளுக்கும் கோப்பாய், மட்டக்களப்பு, அட்டாளைச்சேனை போன்ற ஆசிரியர் கலாசாலைகளின் அதிபர்களுக்குமான விண்ணப்பங்களே இவ்வாறு கோரப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு இவ்வருட இறுதிக்குள் நிரந்தர நியமனம் வழங்கப்படவுள்ளதாக கல்வியமைச்சு மேலும் அறிவித்துள்ளது. (ஐ)

# ஆட்டோ குடைசாய்ந்து கோர விபத்து! ஒரே குடும்பத்தைச்சேர்ந்த இருவர் பலி!

(கபரகல)

நேற்றுக் காலை இடம்பெற்ற கோர விபத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த இருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

எல்ல - கபரகல பிரதேசத்தின், ராவின்ன என்ற இடத்தில் சுமார் 350 மீற்றர் அடி பள்ளத்தாக்கில் ஆட்டோ குடை சாய்ந்து இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இதில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 35 வயதுடைய தந்தையும் 8 வயதுடைய மகனும் சம்பவ இடத்திலேயே பலியாகினர்.

அத்துடன் ஆட்டோவில் பயணித்த 8, 12 வயதுகளையுடைய சிறுவர்கள் இருவர் படுகாயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.(ஐ)

# தானியங்கி துப்பாக்கியுடன் ஒருவர் கைது

(அம்பாறை)

எல்பிடிய-பிடிகல-தல்கஸ்பே பிரதேசத்தில் வீடொன்றினுள் தானியங்கி துப்பாக்கியொன்றை வைத்திருந்த நபரொருவர் கைது செய்யப்பட்டார். அம்பாறை குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலையடுத்து மேற்கொண்ட தேடுதலில் குறித்த நபர் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. குறித்த நபரிடமிருந்து கூரிய ஆயுதங்களும் தானியங்கி துப்பாக்கியும் மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் செய்தித் தொடர்பாளர் அலுவலகம் தெரிவித்தது.

கைதான நபரை அம்பாறை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியதைத் தொடர்ந்து, இம்மாதம் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (இ-7)

# வேகக்கட்டுப்பாட்டை இழந்த டிப்பர் விபத்து-சாரதி படுகாயம்



(கந்தளாய்)

திருகோணமலை கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று அதிகாலை வேகக் கட்டுப்பாட்டை இழந்த டிப்பர் வாகனமொன்று வயல் வெளியில் தலைகுப்புற விழுந்ததில் டிப்பர் வாகனத்தின் சாரதி படுகாயங்களுக்குள்ளான நிலையில் கந்தளாய் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கந்தளாய் பொலிஸார் தெரிவித்தனர். கந்தளாய் கெமுனு மாவத்தைப் பகுதியைச் சேர்ந்த ரொசான் சிறிமேவன் (வயது-37) என்பவரே காயங்களுக்குள்ளான சாரதியாவார்.

கந்தளாய் நகரிலிருந்து மணல் ஏற்றுவதற்காக கங்கைப் பகுதிக்குச் சென்ற போதே வேகக் கட்டுப்பாட்டை இழந்து வயல் வெளிக்குள் குடைசாய்ந்ததாகவும் இதனால் சாரதிக்கு கழுத்து முறிவு மற்றும் காயங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ஐ)

# தமிழ்ப் பாடசாலைகளுக்கு தமிழ்ப்பெயர்கள் மாற்றம்

(கொழும்பு)

ஊவா மாகாணத்தில் உள்ள தமிழ் பாடசாலைகளுக்கு தமிழ் பெயர்களை சூட்டும் வேலைத்திட்டத்தின் கீழ் முதல்கட்டமாக 60 பாடசாலைகளின் பெயர்கள் மாற்றப்பட்டுள்ளன. ஊவா மாகாண தமிழ்க் கல்வி அமைச்சர் செந்தில் தொண்டமான் முன்வைத்த அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் இந்தப் பெயர் மாற்றம் இடம்பெற்றது.


மாகாணக் கல்வி செயலகத்தினால், முதல்கட்டமாகப் பெயர் மாற்றம் செய்யப்பட்ட பாடசாலைகளின் விபரங்கள், செந்தில் தொண்டமானிடம் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ் 170 இற்கும் அதிகமான பாடசாலைகளின் பெயர்கள் மாற்றப்படவுள்ளன. குறித்த திட்டத்துக்கு சில இடங்களில் எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்பட்டிருந்த போதும், முதற்கட்டமாக 60 பாடசாலைகளின் பெயர்கள் மாற்றப்பட்டிருப்பதாக, செந்தில் தொண்டமான தெரிவித்தார். (ஐ)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 80 | 90 | 100 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 120 | 140 |
| பச்சைமிளகாய் | 160 | 200 | 180 | 300 |
| தக்காளி | 150 | 120 | 120 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 120 | 100 | 100 |
| கோவா | 80 | 70 | 60 | 80 |
| கரட் | 100 | 140 | 110 | 160 |
| பூசணி | 60 | 60 | 50 | 60 |
| புடோல் | 50 | 60 | 60 | 100 |
| வாழைக்காய் | 120 | 120 | 110 | 120 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 130 | 100 |
| பெரிய வெங்காயம் | 120 | 120 | 120 | 130 |
| பாகற்காய் | 180 | 140 | 150 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 60 | 120 |
| பயற்றங்காய் | 60 | 50 | 50 | 80 |
| லீக்ஸ் | 80 | 80 | 70 | 100 |
| பீற்றூட் | 80 | 70 | 60 | 80 |
| கறிமிளகாய் | 200 | 140 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 80 | 80 | 70 | 80 |
| போஞ்சி | 120 | 200 | 90 | 160 |
| கத்தரிதம்புள்ள | 80 | 60 | 50 | 80 |
| கீரை-1பிடி | 30 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 300 | 400 | 300 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 | 25 | 20-40 |
| இராசவள்ளி | 250 | 200 | 150 | 240 |
| வெங்காயப்பூ | 140 | 160 | 100 | 200 |
| முள்ளங்கி | 60 | 80 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 20 | 30 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 30 |
| ஈரப்பலா | 70 | 40 | 130 | 50 |




# மலைப்பாம்பும் மான்குட்டியும்



குறட்டி என்ற பெயர் கேட்டால் மஞ்சளாறு காட்டில் சிறுத்தைகளும் புலிகளும் கூட ப்பயப்படும்.

இருபது அடிக்கும் நீளமாக மரங்களின் கிளைகளில் படர்ந்து இருக்கும் தனது அழகிய உடம்பும், கரும்புள்ளிகளும் அதற்கு பெருமையாக இருந்தது.

கரும்பழுப்பு, பழுப்பு என்று பல நிறங்களில் மலைப்பாம்புகள் இருக்குமே தவிர இப்படி லட்சணமான கரும்புள்ளிகளுடன் பார்ப்பது ரொம்பவும் அரிது.

மலைப்பாம்புகள் பொதுவாக பறவைகள், முயல் போன்ற சிறிய பிராணிகளைப் பிடித்து உண்ணும். சில சமயம் மான் போன்ற சற்றுப் பெரிய விலங்குகளைக் கூடத் தாக்கும்.

ஆனால் குறட்டி சற்று வித்தியாசமானது. காட்டெருமைக் கன்று, சிறுத்தை போன்றவற்றைக் கூட தனது குறட்டிப்பிடியில் நொறுக்கி எடுத்துவிடும். அதனால் அதற்கு குறட்டி என்று பெயர் வழங்கி வந்தது.

குறட்டி தனது தலையை ஒரு கிளையின் மீது வைத்தபடி ஆற்றங்கரையையே பார்த்துக் கொண்டு இருந்தது.

மிரண்டு மிரண்டு ஆற்றங்கரையில் வரும் மிளா மான் குட்டி அதன் கண்ணில் பட்டது.

நீண்டு கிடந்த தனது உடலை வேகமாக தன்னை நோக்கி இழுத்தது.

அநேகமாக அந்த மான் குட்டி மிகவும் குறுகலாக ஓடும். அந்த ஆற்றைக் கடந்து வரலாம். அப்படிக் கடந்து வந்தால் குறட்டி இருக்கும் வழியாகத் தான் வரவேண்டும்.

அந்த மிளா மான் ஆற்றில் இறங்கியது. குறட்டியில் வாயில் நீர் சுரந்தது.

மீதமுள்ள குறட்டி தனது உடலை கிளையில் சுற்றி தனது தலையை மட்டும் தொங்க வைத்தபடி அசையாமல் இருந்தது. பார்வை மட்டும் ஆற்றில் இறங்கிய மான் மீது இருந்தது.

ஆற்றில் மான் நீந்தியது. இதே மரத்திலிருந்துதான் குறட்டி ஒரு நாள் ஒரு சிறுத்தையை மடக்கிப் பிடித்தது. ரப்பர் போன்ற தனது உடம்பை கயிறு போல் பாவித்து இறுக்கிய வேகத்தில் சிறுத்தையின் எலும்புகள் மடமடவென்று முறிந்தன.

மான் கரையேறி விட்டது. குறட்டி அசையாமல் இருந்தது. அந்த மரத்திற்கு அருகாமையில வந்த பாதையில் சுற்றிப் பார்த்தபடி நடந்து வந்தது அந்த மான்.

சொல்லி வைத்ததுபோல் அந்த மரத்தடியில் வந்து நின்றது. குறட்டி மான்குட்டியில் கழுத்தில் மாலையாய் விழுந்தது.

"அம்மா" என்று கதறியது மான்குட்டி. எதிர்பாராத தாக்குதலால் நிலைகுலைந்து போனது. அப்படி இப்படி கூட அசையாமல் நின்றது.

குறட்டிக்குக் கூட ரொம்ப ஆச்சரியமாக இருந்தது. குறட்டி அதன் முகத்தைப் பார்த்தது பாவமாக இருந்தது. அதற்குள் குறட்டி இறப்பர் போன்ற நீண்ட தனது உடலால் மானைச் சுற்றிது.

மான் தேம்பி அழுதது. அதன் கண்களில் கண்ணீர் வழிந்தது.

குறட்டி இப்படி திடீர் தாக்குதல் நடத்தும் போது எந்த ஒரு மிருகமும் இதனிடம் தப்பிக்க போராட்டம் நடத்துமே தவிர இப்படி அழுது ஆர்ப்பாட்டம் செய்யாது.

"ஆமாம்.... ஏன் அழுகிறாய்" என்றது குறட்டி.

மான் தனது அழுகையை நிறுத்திவிட்டு உறுதியான குரலில் சொன்னது.

"இப்போது சாவு என்பது நிச்சயமாகி விட்டது. சாகும் முன்னர் அம்மாவின் உயிரைக் காப்பாற்றிய பெருமையாவது என்னைச் சேரும். நீங்கள் மனது வைத்தால் எனக்கு உதவலாம்" என்றது.

"நான் எப்படி உதவ முடியும்?" என்றது.

"மொட்டச்சி அம்மன் பாறைக்குச் சென்று நாவல் பழங்களை எடுத்து என் அம்மாவிற்கு கொடுத்துவிட்டு மீண்டும் இங்கு வந்து சேருகிறேன். பின்னர் உன் இஷ்டப்படி என்னைக் கொன்று சாப்பிடு" என்றது மான்.

"நீ மீண்டும் என்னிடம் திரும்பி வருவாய் என்பதற்கு என்ன உத்தரவாதம்?"

"நான் சொல்வதில் உனக்கு நம்பிக்கை இல்லை என்றால் நீ என் கூடவே வா.. நாவல் பழங்களை என் தாயிடம் சேர்த்ததும் நீ என்னைக் கொன்று சாப்பிடு"

"உன்னை விட்டால் என்னால் பிடிக்கமுடியாது? உன் வேகம் என்ன. என் வேகம் என்ன?" என்றது குறட்டி.

"என் மீது நம்பிக்கை இல்லை என்றால் நீ என்ன சொல்கிறாயோ அதற்கு நான் கட்டுப்படுகிறேன்"

"நான் உன் உடலை சுற்றியபடியே இருப்பேன். என்னை சுமந்த படியே செல்ல வேண்டும்" என்று சொன்னது குறட்டி. அது அதற்கு ஒத்துக் கொண்டது. குறட்டியை சுமந்தபடியே சென்றது மான்.

மொட்டச்சி அம்மன் பாறைக்குச் சென்றது. நாவல் பழங்களை சேகரித்துக் கொண்டது.

மலைப்பாம்பு தன் உடலைச் சுற்றியிருக்க உற்சாகத்துடன் நடந்தது.

தனது அம்மாவுக்காக தன்னுடைய உயிரைக் கொடுக்க ஒரு வாய்ப்பு கிடைத்தது அதற்கு சந்தோஷமாக இருந்தது.

மான் தன் இருப்பிடத்திற்கு அருகாமையில் வந்தது. தன் இருப்பிடத்தையும் படுத்துக்கிடக்கும் அம்மாவையும் காட்டியது. குறட்டி அதன் உடம்பிலிருந்து மெல்ல இறங்கியது.

"நாவல் பழங்களைக் கொடுத்துவிட்டு தப்பிக்கலாம் என்று நினைத்தால்... அப்புறம் நோய் வாய்ப்பட்டிருக்கும் உனது அம்மா எனக்கு உணவாக நேரிடும்" என்றது குறட்டி.

"நீ செய்த உதவியை ஒரு நாளும் மறக்க மாட்டேன். என் வார்த்தையை மீறமாட்டேன்" என்று சொல்லிவிட்டு துள்ளி ஓடியது மான் குட்டி.

குறட்டி மெல்ல ஊர்ந்து மரங்களின் ஊடே மறைந்து கொண்டது.

அங்கு அதற்கு பெரிய அதிர்ச்சி காத்திருந்தது. அங்கு பதினைந்து இருபது மான்கள் உடல் நலம் விசாரித்தபடி இருந்தன.

அதில் இரண்டு மூன்று மான்கள் ஒன்று சேர்ந்தால் கூட அவற்றின் கொம்புகளால் தனது தலையைக் குத்திக் கிழித்து விட முடியும்.

இப்படித்தான் சென்ற வாரம் ஒரு மலைப்பாம்பை இரண்டு பெரிய மிளா மான்கள் கொம்பினால் நசுக்கி எடுத்துவிட்டன. அந்த மலைப் பாம்பு அங்கேயே உயிரை விட்டது.

பயம் என்றால் என்னவென்று தெரியாத குறட்டிக்குக் கூட கொஞ்சம் நடுக்கமாக இருந்தது.

"கையில் கிடைத்ததை விட்டு விட்டோமோ?" என்று கூட ஆதங்கமாக இருந்தது.

எதற்கும் ஜாக்கிரதையாக இருப்பது நல்லது. குறட்டி பெரிய தனது உடலை வளைத்து நெளிந்தபடி மறைவிடம் நோக்கி நகர ஏதோ அரவம் கேட்டது.

அதே மான்குட்டி தனியாக வந்தது. "என் கடமை முடிந்தது... எனது வார்த்தையை நான் காப்பாற்றி விட்டேன்... உனக்கு எனது நன்றி" என்று சொன்னவாறு குறட்டியின் முன்னால் வந்து நின்றது மான் குட்டி. குறட்டியின் முரட்டுத் தோலையும் மீறி அதன் உடல் புல்லரித்தது.

"என்னைப் பற்றியா சொன்னாய்" என்றது குறட்டி "இல்லை எனக்கு உதவி செய்த உன்னை காட்டிக் கொடுக்க மாட்டேன்."

"உன்னை கொன்று தின்னப் போகும் நான் எப்படி உனக்கு உதவியவன் ஆவேன்?"

"நீ சொன்னது சரிதான்.. ஆனால் நீ உதவாவிட்டால் என் அம்மாவைக் காப்பாற்ற முடியாது போயிருக்கும். பெற்றோருக்காக தனது உயிரைத் தருவதைவிட பெருமை தரக்கூடிய விடயம் உலகத்தில் வேறு என்ன இருக்க முடியும்?"

குறட்டி தனது தலையை மெல்ல உயர்த்தி மான்குட்டியின் கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்தது.

"தாய்க்காக தனது உயிரை தரத்துணிந்த உன்னை வணங்கினாலே... எனக்குப் பெருமை" என்று சொல்லியபடி குறட்டி அதனை உயிரோடு விட்டுச் சென்றது. மான்குட்டி குறட்டியை ஆச்சரியமாகப் பார்த்தது.

மரக்கிளைகளில் தவழ அதன் உடம்பின் கரும்புள்ளிகள் வைரமாக மின்னின.

## பொது அறிவு வினா விடைகள்

- ஷேக்ஸ்பியரின் மேக்பத் நாடகத்தின் பெரும்பாலான பகுதி எந்த இடத்தில்நடந்தது?

**ஸ்கொட்லாண்ட்**

- கரம் விளையாட்டின் தொடக்கத்தில் எத்தனை கறுப்பு காய்கள் இருக்கும்?

**9**

- "வீடு" மற்றும் "தாசி" திரைப்படங்களுக்காக சிறந்த நடிகைக்கான தேசிய திரைப்பட விருதை வென்றவர் யார்?

**அர்ச்சனா**

- உலகில் வெவ்வேறு மொழிகள் பேசப்படுவதற்கான காரணம்?

**புதுப்புது ஒலிக் குறியீடுகள் அமைந்தமை**

- ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைத்த முதல் ஹொலிவுட் திரைப்படம்?

**COUPLES RETREAT**

## பழமொழியும் விளக்கமும்

- **போக்கத்தவனுக்கு பொலிஸ் வேலை, வக்கத்தவனுக்கு வாத்தியார் வேலை**

விளக்கம்: இந்த பழமொழியின் அர்த்தம், போக்கு கற்றவனுக்கு அல்லது கற்று கொடுப்பவனுக்கு பொலிஸ் வேலை. வாக்கு கற்றவனுக்கு அல்லது கற்று கொடுப்பவனுக்கு வாத்தியார் வேலை என்பதாகும்.

- **ஊரான் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்.**

விளக்கம்: இதன் அர்த்தம், ஒருவனின் மனைவி கர்ப்பமாக இருக்கும் போது (என்னதான் அவன் மனைவியாக இருந்தாலும் அவள் இன்னொருவன் அதாவது ஊரான் பிள்ளைதானே) அவளை நன்றாக கவனித்து கொண்டால், அவளின் வயிற்றில் வளரும் தன்பிள்ளை தானாக வளரும் என்பதாகும்.

பிறர் நம்மை பாரம் என்று நினைத்து விட்டால் நாம் தூரமாகவே நிற்பது நல்லது. ~ ப்ளேட்டோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஜனாதிபதித் தேர்தலில் சிங்கள மக்கள் யாரை ஆதரிப்பர்?

ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி இன்னமும் அறிவிக்கப்படாத நிலையிலும் நாட்டின் பிரதான கட்சிகள் ஜனாதிபதி வேட்பாளர்களை அறிவிக்கின்ற பணியில் ஈடுபட்டுள்ளன.

இதில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான பொதுஜன பெரமுன தனது ஜனாதிபதி வேட்பாளராக கோத்தபாய ராஜபக்ஷவை அறிவித்துள்ளது.

இது இவ்வாறிருக்க, நேற்றைய தினம் ஜே.வி.பி (மக்கள் விடுதலை முன்னணி) தனது ஜனாதிபதி வேட்பாளராக அனுர குமார திசாநாயக்கவை முன்மொழிந்துள்ளது.

மிகப் பெருந்திரளான மக்கள் ஒன்றுகூடி இருக்கையில், ஜே.வி.பி தனது ஜனாதிபதி வேட்பாளரை அறிவித்ததில் இருந்து நாட்டில் மூன்றாவது பலமான கட்சி என்று கூறக்கூடிய ஜே.வி.பியும் மக்கள் செல்வாக்குள்ள ஒருவரையே ஜனாதிபதி வேட்பாளராக அறிவித்துள்ளது.

இனி ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதுதான் இப்போதிருக்கின்ற கேள்வி.

பெரும்பாலும் சஜித் பிரேமதாஸவே ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் என்பது உறுதியாகிவிட்டது.

சிலவேளை அது சாத்தியமற்றுப்போகுமாக இருந்தாலும் சஜித் பிரேமதாஸ ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார் என்பதில் மாற்றுக் கருத்திற்கிடமில்லை.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் இம்முறை நடைபெறப் போகும் ஜனாதிபதித் தேர்தல் என்பது முன்பு எப்போதும் இல்லாதவாறான கடும் போட்டியைக் கொண்டிருக்கும் என்பது தெளிவாகிறது.

நிலைமை இவ்வாறாக இருக்கையில் தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளே ஜனாதிபதி யார் என்பதைத் தீர்மானிக்கப் போகிறது என்ற கருத்தும் உண்டு.

'எதுவாயினும் நடக்கப் போகும் ஜனாதிபதித் தேர்தலில் சிங்கள மக்கள் யாரை ஆதரிப்பர் என்பது இங்கு கவனிக்கப்பட வேண்டிய முக்கிய விடயம்.

அதாவது கோத்தபாய ராஜபக்ஷ, அனுர குமார திசாநாயக்க, சஜித் பிரேமதாஸ என்ற ஜனாதிபதி வேட்பாளர்களில் யாரைத் தெரிவு செய்வது நாட்டுக்கு நன்மை தரும் என்று சிங்கள மக்கள் தீர்மானிப்பார்கள் என்ற கருத்துக் கணிப்பு இங்கு முக்கியமானது.

சிங்கள மக்களைப் பொறுத்தவரை அவர்கள் இதுகாறும் தமிழ், முஸ்லிம் மக்கள் ஆதரிக்கக்கூடிய ஜனாதிபதி வேட்பாளரை ஆதரிப்பது மிகக் குறைவு.

இந்நிலைமை இந்த நாட்டை படுபாதளத்துக்குக் கொண்டு போய்விட்டது. எனவே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மூவின மக்களும் ஒன்றுபட்டு இந்த நாட்டுக்குப் பொருத்தமான, இன நல்லுறவை ஏற்படுத்தக்கூடிய ஒருவரை ஜனாதிபதியாகத் தெரிவு செய்ய வேண்டும். இதற்காக மூவினம் சார்ந்த முயற்சிகள் எடுக்கப்படுவது மிகவும் அவசியம்.

இதைவிடுத்து சிங்கள மக்கள் விரும்பியபடி வாக்களிக்கட்டும். நாங்கள் நாம் விரும்பியபடி வாக்களிப்போம் என்று நினைத்தால் எல்லாம் அம்போ என்றாகிவிடும்.

எனவே ஜனாதிபதித் தேர்தலில் நாடு தழுவிய ஒற்றுமையை ஏற்படுத்துவதே புத்திசாலித்தனமாகும்.

# 'கிழக்கின் அடிமை விலங்கை உடைக்க பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கு'

## பிள்ளையானின் பிறந்தநாளை முன்னிட்டு பேரணி

(ஏறாவூர்)

கிழக்கு மாகாண முன்னாள முதலமைச்சர் பிள்ளையானின் விடுதலையை வலியுறுத்தியும் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குமாறு கோரியும் மட்டக்களப்பில் பேரணியொன்று இடம் பெற்றது.

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் தலைவருமான சந்திரகாந்தனின் (பிள்ளையான்) 44ஆவது பிறந்த நாளை முன்னிட்டே இந்தப் பேரணி இடம்பெற்றது.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூ.பிரசாந்தனின் தலைமையில் இந்தப் பேரணி இடம்பெற்றது.

மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்பாக நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை ஆரம்பமாகிய இந்த பேரணியில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் உறுப்பினர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

'கிழக்கின் அடிமை விலங்கை உடைக்க சந்திரகாந்தன் மீதான பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கு' எனும தலைப்பில் இந்தப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

இந்தப்பேரணியில் கலந்து கொண்டவர்கள் விடுதலையை வலியுறுத்தும் வகையிலான பல்வேறு பதாகைகளை ஏந்தியிருந்ததுடன், சந்திரகாந்தனின் படத்தையும் ஏந்தியிருந்தனர்.

இந்த பேரணி காந்தி பூங்காவில் ஆரம்பமாகி பிரதான பேருந்து நிலையம் ஊடாக சென்று மட்டக்களப்பு வாவிக்கரை வீதியூடாக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைமை காரியாலயம் வரையில் சென்றது.

அதனைத்தொடர்ந்து தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைமைக்காரியாலயத்தில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் பிரதித்தலைவர் கே.திரவியம் தலைமையில் விசேட நிகழ்வு இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுசந்த புஞ்சிநிலமே, விமல வீர திஸாநாயக்க, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் முஸ்லிம் பிரதேச மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் எம்.எஸ். சுபைர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கி சந்திரகாந்தன் விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற பிரகடனம் வாசிக்கப்பட்டது.

அத்தோடு எதிர்க்கட்சி தலைவர் மகிந்தவிடம் வழங்குவதற்கான மகஜரொன்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கையளிக்கப்பட்டது. (இ-7)

தாஜுடீன், லசந்த கொலை உள்ளிட்ட

## 5 சம்பவங்கள் தொடர்பான அறிக்கையை கோருகிறார் பதில் பொலிஸ்மா அதிபர்

(கொழும்பு)

வசீம் தாஜுடீன், லசந்த விக்கிரமதுங்க கொலைகள் உள்ளிட்ட 5 சம்பவங்கள் தொடர்பான முழுமையான அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு பதில் பொலிஸ்மா அதிபர், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அறிவுறுத்தியுள்ளார்.

வசீம் தாஜுடீன் கொலை, லசந்த விக்கிரமதுங்க கொலை, மூதூரில் 11 தன்னார்வ பணியாளர்கள் கொல்லப்பட்டமை, எக்னெலிகொட காணாமல் ஆக்கப்பட்டது, கீத்நொயர் கடத்தல் ஆகியவை குறித்தே சட்டமா அதிபர் அறிக்கையை கோரினார்.

குறித்த சம்பவங்கள் தொடர்பான வழக்கை துரிதப்படுத்துமாறு சட்டமா அதிபர் கடந்த வாரம் அறிவுறுத்தியிருந்தார்.

அத்துடன் வழக்குகளின் விசாரணைகள் விரைவாக நிறைவடைவதனை உறுதி செய்யுமாறு பதில் பொலிஸ்மா அதிபர் சீ.டி. விக்கிரமரத்னவிற்கு சட்ட மா அதிபர் தப்புல டி லிவேரா அறிவுறுத்தினார்.

மேலும், பொலிஸ் உத்தியோகத்தர்கள் சட்டத்தினை கண்டிப்பாக பின்பற்றவும் தமக்கு பூரண அறிக்கையைச சமர்ப்பிக்கவும் சட்டமா அதிபர் பதில் பொலிஸ்மா அதிபருக்கு பணிப்புரை விடுத்தார்.

இந்நிலையிலேயே, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு பதில் பொலிஸமா அதிபரால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (இ-7)

## வெள்ளை வான் அப்பாவி மக்களை கடத்தவில்லை

மஜீத் மௌலவி

(ஏறாவூர்).

வெள்ளை வான் அப்பாவி மக்களை கடத்தவில்லை. சிவப்பு பேருந்து தான் எம்மை தாக்கியது என முபாறக் அப்துல் மஜீத் மௌலவி தெரிவித்தார்.

முஸ்லிம் உலமா கட்சி ஏறாவூரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை நடத்திய ஊடக சந்திப்பு ஒன்றில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெள்ளை வான் அப்பாவி மக்களை கடத்தவில்லை.

சிவப்பு பேருந்து தான் எம்மை தாக்கியது அண்மைக்காலமாக வெள்ளை வான் சம்பந்தமாக நாடாளுமன்ற உறுப்பினர் கவிந்திரன் கோடீஸ்வரன் பேசுகிறார்.

தற்போது வெள்ளை வான பிரச்சினை இல்லை. சிவப்பு பேருந்துதான் பிரச்சினை. முஸ்லிம் மக்களை தாக்கியது சிவப்பு பேருந்தில் வந்தவர்கள்.

எனவே வெள்ளை வான் பெரியதா? அல்லது சிவப்பு பேருந்து பெரிதா? எனக் கேட்க விரும்புகின்றேன்.

புலிகள் இந்த வெள்ளை வானில் எத்தனை அப்பாவிகளை கடத்தினார்கள். ஆனால் கிழக்கில் எந்தவொரு அப்பாவிகளையும் கடந்த கால அரசாங்கம் வெள்ளை வானை பயன்படுத்தி கடத்தவில்லை.

இதுவெல்லாம் வீண் பிரசாரம். முஸ்லிம் மக்களை இந்த பிரச்சினைக்குள் இழுக்க வேண்டாம் என சம்பந்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினரைக் கேட்டுக் கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## செடியைக் கூட வாழ்த்துங்கள்



❖ உண்மையில் எதிரி உனக்கு உண்டு என்று சொன்னால், உள்ளத்தில் எழும் ஒழுங்கற்ற எண்ணமே. உண்ணும் உணவு கூட நம் உடல் மட்டும் தான் பாய்கிறது. ஆனால், எண்ணங்களோ பிரபஞ்சத்தின் எங்கும் பாயக்கூடியது.

❖ தேவைகளைப் பெருக்கிக் கொண்டே போனால், போகத்திலேயே மனம் நாட்டம் கொண்டிருக்கும். அதனால் பிறவித்தொடர் நம்மை விட்டு என்றும் நீங்காது. தேவைகளை முடிந்தவரை சுருக்கமாகவே வைத்துக் கொள்ளுங்கள்.

❖ எல்லாப் பொருள்களிடத்தும், எல்லா உயிர்களிடத்தும் இறைநிலையைக் காண வேண்டும். அப்படி காணக்கூடிய அளவு அறிவிலும் உயர்வு உண்டாகும்.

❖ எந்தச் சூழ்நிலையிலும் ஒருவனைச் சினம் அணுகவில்லை என்றால் அவன் ஞானம் பெற்றுவிட்டான் என்று உறுதியாகச் சொல்லலாம்.

❖ தேவையான இடத்தில் சினம் கொண்டது போல நடிக்கலாமே தவிர, எப்போதும் சினத்தோடு இருப்பது முறையல்ல. போலியாகக் கோபம் கொள்ளும்போது, மனதில் சிறிதும் சலனம் கூடாது. எதிராளியைத் திருத்துவது மட்டுமே அதன் நோக்கமாகும்.

❖ ஒரு செடியைப் பார்த்தால் கூட வாழ்க வளமுடன் என்று உளப்பூர்வமாக வாழ்த்துங்கள். உலகத்திற்கு நன்மையான செயல்களைச் செய்து அதனால் அனைவரும் மனநிறைவு பெற வேண்டும் எப்போதும் வாழ்த்துங்கள்.

❖ உடையில் ஒழுக்கம், உள்ளத்தில் கருணை, நடையிலே கண்ணியம் என்று இருப்பதே நல்லோர்களின் பண்பாகும்.

## பல்கலைக்கழகங்களுக்கிடையிலான துடுப்பாட்டம்

# கொழும்பு பல்கலைக்கழகத்தை வீழ்த்தி அரையிறுதியில் யாழ். பல்கலை அணி



இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் காலிறுதிப் போட்டி யொன்றில் கொழும்பு பல்கலைக்கழக அணியை வெற்றி கொண்ட யாழ். பல்கலைக்கழக அணி அரை இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது.

மொரட்டுவ பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ். பல்கலைக்கழக அணித் தலைவர் முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தார்.

அந்த வகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய கொழும்பு பல்கலைக்கழக அணி 46.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்களையும் இழந்து 162 ஓட்டங்கள் பெற்றுக் கொண்டது.

கொழும்பு பல்கலைக்கழக அணி சார்பில் பெரேரா 61, பத்திரணா 26 , குணவர்த்தன 23 ஓட்டங்கள் பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில் லோகதீஸ்வரன், சனிந்து ஆகியோர் 2 விக்கெட்களையும் சுபேந்திரன், ஜனந்தன், துவாரகசீலன், தனுஸ்க ஆகியோர் தலா ஒரு விக்கெட்களையும் வீழ்த்தினர்.

163 என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய யாழ். பல்கலைக்கழக அணி 40.2 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட் இழப்பிற்கு வெற்றி இலக்கை அடைந்து தனது அரை இறுதி வாய்ப்பை உறுதி செய்தது.

துடுப்பாட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணி சார்பாக துவாரகசீலன் ஆட்டமிழக்காமல் 79 ஓட்டங்களையும் தனுஸ்க 33 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். இந்த வெற்றியின் மூலம் எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறும் அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவானது யாழ். பல்கலைக்கழக அணி.(கு)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# உதயசூரியன் அணியை வென்றது சைனிங்ஸ் விளையாட்டுக் கழக அணி



வல்வை உதயசூரியன் விளையாட்டுக்கழகம் 57ம் ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தும் கடற்கரை உதைபந்தாட்டச்சுற்றுத்தொடரின் லீக் ஆட்டங்கள் நேற்று முன்தினம் உதயசூரியன் கடற்கரை மைதானத்தில் நடைபெற்றது.

முதலாவது போட்டியில் சைனிங்ஸ் அணி-உதய சூரியன் அணிகள் மோதின. ஆட்டநேர முடிவில் 2:1 என்ற கோல்கணக்கில் சைனிங்ஸ் அணி வெற்றி பெற்றது.

சைனிங்ஸ் சார்பாக பிரசாந், சுரேன் ஆகியோர் தலா ஒரு கோல் போட்டனர். (க)

# அரியாலை திருமகளின் வலைப்பந்தாட்டம் அராலி Hot shot அணி சம்பியன்







அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தின் 67 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு வடமாகாண ரீதியில் நடத்தப்பட்ட வலைப்பந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டியில் அராலி Hot shot அணி சம்பியன் பட்டத்தை வென்றது.

அமரர் கந்தையா அரியரட்ணம் ஞாபகார்த்தமாக நடைபெற்ற இப் போட்டியில் இறுதிப் போட்டியில் அராலி Hot shot அணியை எதிர்த்து Familians அணி மோதியது.

மிகவும் விறு விறுப்பாக நடைபெற்ற இப் போட்டியில் அராலி Hot shot அணி சிறப்பாகச் செயற்பட்டு அரியாலை திருமகள் வெற்றிக் கிண்ணத்தைப் பெற்று அசத்தியது.

இச் சுற்றுப் போட்டியில் 3 ஆம் இடத்தினை அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி பெற்றுக் கொண்டது. (கு)


## அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்


# றெயின்போ அணியை வீழ்த்தி சம்பியனாகியது உதயசூரியன்




வல்வை உதயசூரியன் கழகத்தின் 57ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு. வல்வை விளையாட்டுக்கழகத்திற்குட்பட்ட சகோதர கழகங்களுக்கிடையில் நடத்துகின்ற பெரு விளையாட்டுக்களின் வரிசையில் நான்காம் நிகழ்வாக பெண்ளுக்கான வலைப்பந்தாட்டப் போட்டிகள் நடைபெற்றன.

சைனிங்ஸ் மற்றும் நேதாஜி அணிகளை வீழ்த்தி இறுதிப் போட்டியில் 14:2 என்ற புள்ளிகள் அடிப்படையில்றெயின்போ அணியினையும் வீழ்த்தி சம்பியனானது உதயசூரியன் அணி.

இறுதிப்போட்டியில் ஆட்டநாயகியாக உதயசூரியன் வீராங்கனை ரோகினி தெரிவு செய்யப்பட்டார். (க)

## ஊழலற்ற அரசை...

இலஞ்சம், ஊழல், அச்சமற்ற தூய்மை யான அரசாங்கத்தை ஸ்தாபிக்க அனை வரும் பேதங்கள் கடந்து ஒன்றிணைய வேண்டும் என்று மக்கள் விடுதலை முன் னணியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பு - காலி முகத்திடலில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஜே.வி.பியின் ஜனாதிபதி வேட்பாளர் அறிமுக நிகழ்வில் கலந்து கொண்டிருந்தபோதே அவர் இவ் வாறு கூறினார்.

அவர் தெரிவிக்கையில், நாட்டில் அடுத்து இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில், தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட் பாளராக என்னை களமிறக்கியதையிட்டு, நான் முதலில் அனைத்துத் தரப்பினருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் கடந்த 30 வருடங்களாக நாட்டின் அரசியலுடன் ஒன்றித்து இருக்கிறேன். இத்தனை காலங்களாக வெற்றிகள், தோல் விகள், சவால்கள் என அனைத்தையும் நாம் சந்தித்துவிட்டோம். இந்தக் காலத்தில் நாம் கீழ் மட்டத்திலிருந்து மேல் மட்டம் வரையான மக்களின் உண்மையான தேவைகளை அறிந்துகொண்டுள்ளோம். இவர்களின் தேவைகளை 71 வருடங்களாக ஆட்சி செய்த எந்தவொரு அரசாங்க மும் நிறை வேற்றவில்லை என்பதுவே உண்மை யாகும்.

இந்தப் பாதையிலிருந்து புதிய பாதையில் பயணிக்கத் தான் நாம் தற்போது மக்களை அழைக்கிறோம். இந்த ஓட்டத்தில் அனைத்து இன மக்களும் சங்க மிக்க வேண்டும்.

மக்களுக்கு இந்த ஜனாதிபதித் தேர்தலில் இரண்டு விதமான பாதைகள் திறக்கப்பட் டுள்ளன. ஒன்று, கடந்த காலங்களைப் போன்ற அழிவுப்பாதை. மற்றையது சுதந்திரமும், சமத்துவமும் நிறைந்த புதிய பாதை.

இதில் எந்தப் பாதையில் பயணிப்பது நாட்டினதும், மக்களதும் எதிர்காலத்திற்கு உகந்தது என்பதை வாக்காளர்கள் தான் தீர்மானிக்க வேண்டும். மக்களுக்கான அந்த புதிய பாதையை இன்று நாம் காண் பித்து விட்டோம்.

71 வருடங்களாக இந்த நாட்டை ஆட்சி செய்த ஆட்சியாளர்கள், உண்மையில் எதனை சாதித்தார்கள்? இனம், மதம், மொழி என அனைவரையும் பிரித்து, தங்களை அதிகா ரத்தில் தக்க வைத்துக் கொள்வதற்கான செயன்முறைகள் மட்டும்தான் இடம்பெற்றன. இதனால், ஏற்பட்ட நன்மைகளை மக்கள் தான் சிந்திக்க வேண்டும்.

கொலைக்காரர்களும், கொள்கைக் காரர்களும் ஆட்சிக்கு வந்தமையால், இந்த நாடே இன்று இலஞ்சம் ஊழலால் நிரம்பிப் போயுள்ளது. இவற்றையெல்லாம் அடியோடு இல்லாதொழிக்க வேண்டும்.

## யாழ்ப்பாணம் கே.கே...

உணவகத்தையும் அடித்து நொருக்கிப் பெரும் சேதம் விளைவித்துள்ளதாக பொலி ஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (3)

## கைதி ஒருவர் சிறை...

யொருவர் திருகோணமலை சிறைச்சாலை யில் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளதாக துறைமுக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் கொழும்பு - 12 மாட்டிஸ்லேன், இலக்கம் 6 இல் வசித்து வந்த ஜயசிங்க ஆராய்ச்சிலாகே ஜகத் சின்தக (49 வயது) எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது - கொழும்பு, கெசல்வத்த பொலிஸாரினால் கடந்த 12 ஆம் திகதி கைது செய்யப்பட்டு கொழும்பு நீதிமன்றில் முன்னிலைப்படுத் தப்பட்ட நிலையில் அவரை மூன்று மாதத் திற்கு கடூழிய சிறை தண்டனை வழங்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது. (3)

## வவுனியாவில் நேற்...

நீடித்த மழையினால் வவுனியா, மன்னார் வீதி, காமினி மகாவித்தியாலத்திற்கு முன்பான பகுதி மற்றும் தாண்டிகுளம், குடியிருப்பு ஆகிய பகுதிகளில் வெள்ளநீர் வீதிகளில் தேங்கி நிற்பதுடன், தாழ்நில பிரதேசங்களும் நீரில் மூழ்கியுள்ளன.

இதனால் குறித்த வீதிகளினூடான போக்குவரத்தும் பாதிக்கப்பட்டிருந்ததுடன் வவுனியா நகரின் சில வர்த்தக நிலையங் களிற்குள்ளும் வெள்ளநீர் உட்சென்றமை யால் வியாபார நடவடிக்கைகளும் பாதிக்க பட்டுள்ளது.

வடிகான்கள் சீர்செய்யப்படாமையாலேயே வெள்ள நீர் உட்புகுந்துள்ளதாக வர்த்தகர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (3-299)

## சிறுபான்மையை...

உரையாற்றிய போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆட்சி புதிய ஆட்சியாகும். ஆரம்பத் தில் இந்த ஆட்சிக்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஒன்று இருக்கவில்லை.

பாராளுமன்றத்தில் கிடைக்கப்பெற்ற சிறுபான்மையை வைத்தே ஆட்சியை கொண்டு செல்ல வேண்டிய நிலை ஏற்பட் டது. இந்த ஆட்சியை கொண்டு செல்ல முடியு மா என தன்னிடம் வினவினார்கள்.

எவ்வாறாயினும் இந்த ஆட்சியை அடுத்த ஜனாதிபதி தேர்தல் வரை கொண்டு செல்ல முடியும் என்ற தீர்மானத்தின் அடிப்படை யிலேயே அதனை முன்னெடுத்தோம்.

இவ்வாறான இக்கட்டானதொரு சூழலில் வேறு எந்த அரசாங்கத்துக்கும் இயலாத ஒன்றை நாம் செய்து அதில் வெற்றியையும் பெற்றிருக்கின்றோம்.

எமது வருமானத்தை காட்டிலும் செல வீனம் அதிகமாகும். இதனால் எமது ஆட் சிக்காலத்தின் முதல் இரண்டு வருடங்களில் தம்மை மக்கள் தூற்றினார்கள் என்பதை அறிந்திருந்தேன்.

அந்த காலப்பகுதியில் நாம் பொருளாதார அபிவிருத்தியில் ஓர் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தினோம்.

அதன்காரணமாகவே தற்போது நூற்றுக்கு 50 வீதமாக காணப்பட்ட வருமானம் 100 வீதமாக அதிகரித்திருப்பதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார். (3)

## ஜனாதிபதி வேட்...

மக்கள் விடுதலை முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளரை அறிவிக்கும் தேசிய மக்கள் சக்தி கூட்டம் நேற்று ஞாயிற்றுக் கிழமை மாலை ஆரம்பமாகியது.

காலி முகத்திடலில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் 20 வருடங்களின் பின்னர் மக்கள் விடுதலை முன்னணியால் ஜனாதி பதி வேட்பாளர் அறிவிக்கப்பட்டுள்ளார்.

1999ஆம் ஆண்டு நந்தன குணதிலக மக்கள் விடுதலை முன்னணியின் ஜனாதி பதி வேட்பாளராக களமிறங்கி மூன்றாவது இடத்தை பெற்றுக் கொண்டிருந்தார்.

அதன்பின்னர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடாத மக்கள் விடுதலை முன்னணி, 2005 ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ஷவிற் கும், 2010 ஆம் ஆண்டு சரத் பொன்சேகா விற்கும் 2015 ஆம் ஆண்டில் மைத்திரிபால சிறிசேனவிற்கும் ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவு வழங்கியிருந்தது.

இந்நிலையில் வரும் ஜனாதிபதித் தேர் தலில் களமிறங்க முடிவெடுத்துள்ள மக்கள் விடுதலை முன்னணி அதன் தலைவரை ஜனாதிபதி வேட்பாளராக முன்னிறுத்தியுள் ளமை குறிப்பிடத்தக்கது. (3)

## கோத்தாவிற்காக...

மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர், பொய்க் குற்றச்சாட்டுகளை முன்வைத்து எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் கோத்த பாய ராஜபக்ஷ போட்டியிடுவதை தடுக்கவும், அவரை சிறைக்கு அனுப்பவும் யாரேனும் முயற்சித்தால் அதற்காக பல்லாயிரம் மக்கள் சிறை செல்லத் தயாராக இருக்கின்றனர்.

அவ்வாறு நடைபெற்றால் இன்னும் ஏராளமான சிறைச்சாலைகளை புதிதாக உருவாக்கினால் தான் அவ்வாறு கைதாகும் பொதுமக்களை தடுத்து வைக்க முடியுமாக இருக்கும்.

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்தது தொடக்கம் ராஜபக்ஷவினரை பழிவாங்க வும், படுகொலை செய்யவுமே முயற்சித்து வந்துள்ளது.

எனினும் அந்த முயற்சிகள் தோல்வியி லேயே முடிவடைந்துள்ளது. கோத்தபாய ராஜபக்ஷ ஜனாதிபதி தேர்தல் வேட்பாளராக அறிவிக்கப்பட்டது தொடக்கம் அவருக்கான பொதுமக்கள் ஆதரவு அதிகரித்து வருகின் றது.

அதனை அரசாங்கத்தினால் தாங்கிக் கொள்ள முடியாதுள்ளது. அதன் காரண மாகவே பொய்க் குற்றச்சாட்டுகளின் பேரில் அவரைக் கைதுசெய்து சிறையில் தள்ள அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டுள் ளது என ரஞ்சித் சொய்ஸா குற்றம் சாட்டி யுள்ளார். (3)

## திறைசேரியில் பணம்...

கையிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

ஒரு நாடு என்ற வகையில் பொருளா தாரத்தில் நாங்கள் ஒரு நல்ல நிலையில் இல்லை. அவ்வாறு நல்ல நிலையில் காணப்பட்டால் அபிவிருத்தித் திட்டங்கள் தாமதமாயிருந்திருக்காது.

பொலிஸ் அதிகாரிகளின் பதவி உயர்வு மற்றும் பதவி உயர்வுக்கான சம்பளம் என்பன தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்துக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. திறைசேரியில் பணம் இல்லாததன் காரண மாக அதனை நடைமுறைப்படுத்த முடி யாதுள்ளதாகவும் ஜனாதிபதி மேலும் குறிப் பிட்டுள்ளார். (3)

## தமிழ் மக்களுக்கு...

பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) தெரிவித்துள்ளார்.

தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் மத்திய குழு கூட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு கல்லடியிலுள்ள கட்சியின் காரியாலயத்தில் கட்சியின் செயலாளர் வி.கமலதாஸ் தலைமையில் இடம்பெற்றது. இதில் உரையாற்றும் போதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதி பதி தேர்தலில் பொதுஜன பெரமுன கட்சியு டன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத் திட்டுள்ளோம். இறுதி தீர்மானமாக வரு கின்ற ஜனாதிபதித் தேர்தலில் கோத்தபாய ராஜபக்ஷவை ஆதரிப்பதாக முடிவு எடுத் துள்ளோம்.

கடந்த 21 ஆம் திகதி முஸ்லிம் பயங்கரவாதிகளினால் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலினால் 200 இற்கும் மேற்பட்ட அப்பாவி தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்கள். இதனால் முதலாவதாக எங்களுடைய நாட்டினுடைய பாதுகாப்பு இன்று கேள்விக்குறியாகியுள்ளது.

எனவே இது போன்ற அச்சுறுத்தலில் இருந்து நாட்டைப் பாதுகாப்பது எங்களது முக்கிய கடமையாக இருக்கின்றது. இந்த அரசாங்கம் தமிழ் மக்கள் மீது பல வாக்குறுதிகளை அள்ளி வீசியதால் மக்கள் வாக்களித்தனர்.

ஆனால் வாக்குறுதிகளை வழங்கிய பிரதமர் ரணிலோ, ஜனாதிபதி மைத்திரியோ தமிழ் மக்களுக்கு ஒன்றைக்கூட செய்ய வில்லை. அரசியல் யாப்பு திருத்தப்படும், வடக்கு கிழக்கிற்கான உரிமைகள் வழங்கப் படும் என கூறிக் கொண்டார்களே தவிர எதுவித வாக்குறுதிகளையும் நிறைவேற்றவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (3)

## தமிழ் மக்கள் இம்...

கூட்டணி குறித்த தீர்மானத்தை மேற்கொள் ளும் கலந்துரையாடல் நாளை செவ்வாய்க் கிழமை இடம்பெறவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கூட்டணி தொடர்பாக சுதந்திரக் கட்சியுடனான பேச்சுவார்த்தை குறித்து கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியுடனான கூட்டணிக் கொள்கையுடனும் ஒன்றித்து இயங்கவேண் டும் என்பதற்காகவே கூட்டணி விவகாரம் பொறுமையுடன் கையாளப்படுவதாகத் தெரிவித்துள்ள ஜி.எல்.பீரிஸ், இவ்வாரத்திற் குள் கூட்டணி உறுதிசெய்யப்படும் என்றார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடனான கூட்டணி இதுரையில் வெற்றி பெறும் தருவாயில் காணப்படுகின்றது என்று குறிப் பிட்ட அவர், சுதந்திரக் கட்சியுடன் இணைந்து செயற்படுவதற்கு எதிரணியின் அனைத்து தரப்பினரும் இணக்கம் தெரிவித்துள்ளதாக வும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து தேசிய அரசாங்கத்தைத் தோற்றுவித்ததைப் போல் தவறான அரசியல் தீர்மானத்தை சுதந்திரக் கட்சி மீண்டும் எடுக்காது என நம்பு வதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்ற சர்ச்சைக்கு தற்போது முடிவு அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், தமது தரப்பு வேட்பாளர் மதத் தலைவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட் டுள்ளார் எனவும் 65 இலட்சத்திற்கும் அதிக மான வாக்குகளைப் பெறுவதற்கு எதிர்பார்த் துள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும், தமிழ் மக்கள் நிச்சயம் இம் முறை அரசியல்வாதிகளின் பொய்யான வாக்குறுதிகளுக்கு ஏமாறமாட்டார்கள் என்றும் கூறினார். (3)


















# முல்லைத்தீவில் மதத் தலைவர்களை சந்தித்தார் ஐ.நா பிரதிநிதி

## ஊடகங்களுக்கு அனுமதி மறுப்பு

(முல்லைத்தீவு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை அமைப்பின் சமய அல்லது நம்பிக்கை சுதந்திரம் குறித்த விசேட அறிக்கையாளர் அஹமட் சஹீட் மற்றும் குழுவினர் முல்லைத்தீவுக்கு விஜயம் செய்தனர்.

நேற்று முன்தினம் மாலை அங்கு விஜயம் செய்த அவர்கள் மாவட்டத்தின் மதங்களின் பிரதிநிதிகளை நேற்று ஞாயிற்றுக்கிழமை சந்தித்து கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

இந்தச் சந்திப்பு முல்லைத்தீவு மாவட்டத்தில் செம்மலை சமூக அபிவிருத்தி நிறுவனர் கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது.

இதன்போது இந்து. இஸ்லாமிய, கிறிஸ்தவ மதங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு மாவட்டத்தில் இடம்பெறுகின்ற மதத்திற்கு எதிரான அடக்குமுறைகள் தொடர்பாக ஐ.நா.வின் விசேட அறிக்கையாளரிடம் விளக்கியுள்ளனர்.

இதன்போது ஊடகங்களுக்கு செய்தி சேகரிக்க அனுமதிக்கப்படவில்லை. (3)

# யாழ்.வருகிறார் கோத்தபாய

## பெருமளவு மக்களை திரட்ட முயற்சி

(கொழும்பு)

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோத்தபாய ராஜபக்ஷ விரைவில் யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கு மாவட்டங்களிற்கு பயணம் செய்யவுள்ளார். கிழக்கு மாகாணத்திற்கும் அவர் விஜயம் செய்யவுள்ளார்.

கோத்தபாயவின் ஜனாதிபதித் தேர்தல் பிரசார பிரதான கூட்டங்கள் மாவட்டங்கள் தோறும் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளன. இதன்படி, வடக்கின் அனைத்து மாவட்டங்களிற்கும் பயணம் செய்ய கோத்தபாய தீர்மானித்துள்ளார்.

பயணம் தொடர்பாக, பெரமுனவின் ஆதரவு தமிழ்க் கட்சிகளுடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு வருகிறது.

யாழ்ப்பாணத்தில் பெருமெடுப்பிலான கூட்டம் ஒன்றை நடத்த வேண்டுமென கோத்தபாய தரப்பு விரும்புகிறது. யாழில் பெருமளவு பொதுமக்கள் பங்கேற்புடன் கூட்டம் நடத்துவது, தேர்தலில் தமிழ் வாக்குகள் கிடைப்பதில் சாதகமான நிலைமையை ஏற்படுத்தும் என கோத்தபாய தரப்பு நம்புகிறது.

யாழ் நகரிலுள்ள மண்டபம் ஒன்றில் பொதுக்கூட்டமொன்றை நடத்த திட்டமிடப்பட்டு வருகிறது.

கோத்தபாய வெளிநாடு சென்று வந்த பின்னர், தெற்கில் சில பகுதிகளிற்கு செல்வார். அதன் பின்னர் வடக்கு. கிழக்குக்கு விஜயம் மேற்கொள்ளப்படலாமென தெரிகிறது. (3)

# கோத்தபாய ராஜபக்ஷவை ஆதரிக்கப் போவதில்லை

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக போட்டியிடும் கோத்தபாய ராஜபக்ஷவை ஆதரிக்க மாட்டேன் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அண்மையில்' அமைச்சரவைக் கூட்டம் முடிந்த பின்னர், அதிபர் செயலகத்தில் மேல் மாடியில் உள்ள ஜனாதிபதியின் அறைக்குச் சென்ற சில அமைச்சர்கள், மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்தனர்.

அமைச்சர்களில் ஒருவர், "ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ள முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷவை ஆதரிக்கப் போகிறீர்களா?" எனக் கேட்டார்.

அந்தக் கேள்வியால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கோபமடைந்தார். அவரது கோபம், அவர் அளித்த பதிலிலும் பிரதிபலித்தது.

"உங்களுக்கு என்ன பைத்தியமா?" "நான் அதை ஒரு போதும் செய்ய மாட் டேன். நான் அத்த கையமுடிவை எடு க்க வில்லை." என்று கோபத்துடன் தெரிவித்துள்ளார். (3)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

**றாஜ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (9946)

**SPOKEN ENGLISH**

கள பயிற்சியுடன் கூடிய 3 மாதக்கற்கைநெறி

தொழில்புரிவோர், தொழில்தேடுவோர், பல்கலை மாணவர்கள் வெளிநாடு செல்வோர் மற்றும் இளைஞர் யுவதிகள் இணையமுடியும்!

சனி, ஞாயிறு பிரிவு ஆரம்பம் : 24.08.2019 சனி

1.காலை 08-10 2.காலை 10-12 மதியம் 01-03 2.மாலை 03-05

அனுமதி, புத்தகங்கள் மற்றும் சான்றிதழ் இலவசம்

ஆங்கிலத்தில் ஒரு சொல் தெரியாதவர்களும்கூட 3 மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசலாம்!

ஆங்கிலம் பேசமுடியாவிட்டால் இருப்பணம் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்

SAAMSON இங்கிலீஸ் வேக் செப் 403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோவிலடி, யாழ்நகர். 077 621 4567 021 222 4282

**V2 TRAVELS**

வெளிநாடுகளிலிருந்து வருவோருக்கு இலங்கை வீசா நீடிப்பு யாழ்ப்பாணத்திலேயே செய்து கொடுக்கப்படும்.

VISA EXTENSION FOR FOREIGN PASSPORT (வீசா எக்ஸ்ரென்சன்)

0768227499 (C-7285)

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● சாவகச்சேரி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

**பதவி வெற்றிடம்**

வாழ்க்கையிலும் பொருளாதாரத்திலும் உங்களின் தரத்தினை உயர்த்திக் கொள்ள சர்வதேச நிறுவனமொன்றில் இணைந்து கொள்ள நல்லதொரு தருணம்

தகைமைகள் : O/L 5 பாட சித்தி

மேலதிக தகைமைகள் : A/L பூர்த்தியடைந்தவர்கள்

அனுகூலம் : சர்வதேச நிறுவனத்தில் பணிபுரியும் வாய்ப்பு, எல்லையற்ற வருமானம், ஐரோப்பிய நாடுகளுக்கான வெளிநாட்டு பயணங்கள், வாகன வீட்டு மேற்படிப்புக்கான கடன் வசதி

தொடர்புகளுக்கு: 076 808 2241, 077 408 3273

**தொலைந்து விட்டது**

ஸ்ரீ சிவகாம சுந்தரி அம்பாள் சமேத ஸ்ரீமன் ஆனந்த நடராஜமூர்த்தி, ஸ்ரீதேவி, பூதேவி சமேதநாராயணர், சிவசக்தி வேடுவக்கோலம், சிவயோக சுவாமி ஆகிய படங்கள், Nokia, Samsung, கையடக்கத் தொலைபேசிகள், ஒற்றைத்திறப்பு கோர்வை, NSB Pass Book, Pass Port, தேசிய அடையாள அட்டை, வேறு பத்திரங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய தோற்பை 13.08.2019 அன்று காலை 10.00 மணியளவில் யாழ். நகர் - KKS வீதியில் தொலைந்து விட்டது இதனைக் கண்டெடுத்தோர் பின்வரும் தொலைபேசி இலக்கங்களில் ஒன்றுடன் தொடர்பு கொள்ளவும். 076 655 6258 / 077 838 0216 நன்றியுடன் சன்மானம் வழங்கப்படும். (9953)

**பணிநிலை வேண்டுகை**

- கணனி இயக்குநர் (பெண்) முன் அனுபவம் உடையவர்களும் பயிலுநர்களும்
- புத்தகம் கட்டுநர் (பெண்) ஸ்கிறீன் பிறிண்டிங்கில் முன்அனுபவம் உள்ளவர்களும் பயிலுநர்களும்

பணியாற்ற ஆவலும் தகுதியுமுடைய அண்மையாக உள்ளவர்கள் கடமை நேரத்தில் நேரில் வரவும்

சிவரஞ்சனம் ஒவ்செற் பிறிண்டேர்ஸ்

பலாலி வீதி, கோண்டாவில். 0773068982 (9950)

**விற்பனைக்கு**

வட்டுக்கோட்டை மாவடி குளிப்பான் வீதியில் அமைந்து இருக்கும் 1 3/4 பரப்பு காணி வீடு விற்பனைக்குண்டு. விலை பேசித் தீர்க்கலாம்.

076 284 3051 (9954)

**வீடு வாடகைக்கு**

திருநெல்வேலி திண்ணை ஹோட்டல் அருகாமையில் தளபாடம் இடப்பட்ட வீடு நாள் வாடகைக்கு கொடுக்கப்படும். (9953)

T.P- 077 515 1352

**பணியாளர் தேவை**

யாழ்.நகரில் இயங்கும் New Science World தனியார் கல்வி நிறுவனத்துக்கு கீழ்வரும் பணிகளுக்கு ஆண், பெண் பணியாளர்கள் தேவை:

- அனுமதி அட்டை பரிசோதகர்
- வகுப்பறை மேற்பார்வையாளர்
- சிற்றூழியர்

தொடர்புகளுக்கு - 077 467 0824

(31.08.2019 சனிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நேர்முகத்தேர்வு நடைபெறும்)

New Science World

Navalar Road, Brown Road Junction, Jaffna.

**விரைவு பொதிகள் சேவை**

விசேட விலை குறைப்பு



UK - 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
இத்தாலி- 700 /=Kg

DELIVERY IN 3-5 DAYS (C-7197)

0768226240 V2 TRAVELS

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● கொடிகாமம் ● வல்வெட்டித்துறை ● பருத்தித்துறை ● மானிப்பாய் ● திருகோணமலை ● சாவகச்சேரி ● சுன்னாகம் ● மருதங்கேணி

**CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை**

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள். (C-7314)



CNR World Wide Express
இல 401 மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்

தொடர்புகளுக்கு: 021 5674145 077 2931062 077 6655413

**வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை**

- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

021 222 3536

நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576

சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576 (C-7315)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.08.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.